Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :103 மாசி 28ஆம் நாள் புதன்கிழமை || மார்ச் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## கொரோனா தேர்தலை பிற்போடுமா?

### ஆணைக்குழுவும் அமைச்சும் பேச்சு

கொழும்பு, மார்ச் 11


கொரோனா வைரஸ் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், எதிர் வரும் நாடாளுமன்றத் தேர் 25




### காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில்

# சர்வதேசத்திடம் இலங்கையை பொறுப்புக்கூற வைப்போம்!

### சம்பந்தர் உறுதிபடத் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 11

இறுதிப் போரின்போதும் அதற்கு முன்னரும் அதற்குப் பின்னரும் அரச படைகளால் காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை இலங்கை அரசு பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும். சர்வதேச சட்டத்தின் பிரகாரம் இந்த விடயத்தில் இருந்து அரசு ஒருபோதும் தப்பவே முடியாது. இது தொடர்பில் சர்வதேச அரங்கில் இலங்கை அரசைப் பொறுப்புக்கூற வைத்தே தீருவோம். 25

## ஐ.தே.கட்சிக்குள் உச்சக்கட்ட மோதல்!

### தனி வழிப் பயணத்துக்கு இரு அணிகளும் தயார்

கொழும்பு, மார்ச் 11

ஐக்கிய தேசியக்கட்சிக்குள் மோதல் வலுத்துள்ள நிலையில், ரணில் மற்றும் சஜித் அணிகளை ஒன்றிணைத்து பொதுத்தேர்தலை ஓரணியாக எதிர்கொள்வதற்கு முன்னெடுக்கப்பட்ட கடைசி முயற்சியும் தோல்வியில் முடிவடைந்துள்ளது. இதனால் இரு அணிகளுமே தனிவழிப் பயணத்தை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதி நடைபெறும் பொதுத்தேர்தலில் தமது கட்சி யானை சின்னத்தின்கீழ் 22 தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவி 25

### ஆசிரியையிடம்

## நகைகள் அறுப்பு

### செம்மணியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

பாடசாலையிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த ஆசிரியையைத் தாக்கி தாலிக் கொடி மற்றும் சங்கிலி என்பனவற்றைக் கொள் 25

### யாழ்.பல்கலை முன்பாக

## 'எச்சரிக்கை' நோட்டீஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 11

'எச்சரிக்கை' என்ற தலைப்பிட்ட துண்டுப் பிரசுரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாகவுள்ள மதிலில் ஒட்டப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் உடனடியாக சகலவிதமான சமுதாய சீர் 25

## திருக்கேதீச்சர வழக்குகள்

### ஜூன் மாதத்துக்கு ஒத்திவைப்பு

மன்னார், மார்ச் 11

வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீச்சரம் தொடர்பான மூன்று வழக்குக 03

## வாள் கொண்டுசென்ற பூசகர் நேற்றுக் கைது

### குப்பிளானில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

கோவிலில் பூசை முடித்து மற்றொரு கோவில் தேவைக்காக வாள் எடுத்துச் சென்றார் என்று கூறப்படும் பூசகரை சுன்னாகம் பொலிஸார் கைது செய் 04

## மலையகப் பிரதிநிதி வடக்கில் வேண்டுமாம்

### கூட்டமைப்பிடம் மனோ வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 11

" நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மலையகப் பிரதிநிதிகளும் வேட் 25


## எலும்புக்கூட்டு வழக்கில் இனி புதியசட்டத்தரணி முற்படலாம்

### பழைய சட்டத்தரணிகளுக்கு மன்னார் நீதிமன்று அனுமதி மறுப்பு

மன்னார், மார்ச் 11

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சார்பாக மன்னார் நீதிமன்றில் முற்பட்டு வரும் சட்டத்தரணிகள் மன்னார் 25



# கொரோனா நோயாளர்களை மட்டக்களப்புக்கு அனுப்பாதே!

## அங்குள்ள மாணவரும் பெற்றோரும் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, மார்ச் 11

**மட்டக்களப்பிலுள்ள தனியார் பல்கலைக் கழகத்தில் கொரோனா நோய்த் தொற்றுக்கு ஆளான நோயாளர்களை தங்கவைத்து பரிசோதனை மற்றும் சிகிச்சை மேற்கொள்ளப்படும் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அங்குள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ரிதிதென்னை இக்ராஹ் வித்தியாலய மாணவர்கள் நேற்று கற்றலுக்குச் செல்லாமல் வித்தியாலய நுழைவாயிலை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுடன் பெற்றோர்களும் இணைந்து போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் முகமாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"வேண்டாம் வேண்டாம் கொரோனா வேண்டாம், கொண்டு வராதே கொண்டு வராதே கொரோனாவை எங்கள் பிரதேசத்துக்குக் கொண்டு வராதே, இன ரீதியாக அழிக்கும் முயற்சியை நிறுத்து, சிறுபான்மை மக்களை இலக்கு வைக்காதே, எமது மாகாணத்தை அழிக்க நேசிக்கும் சதியை நிறுத்து, மக்களைக் காப்பாற்று" போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



அந்தப் பாடசாலையில் மட்டுமன்றி, ஜெயந்தியாய அஹமட் ஹிறாஸ் வித்தியாலய மாணவர்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று பாடசாலைக்குச் செல்லவில்லை. அதனால் பாடசாலை கல்வி நடவடிக்கை முற்றாக முடங்கியது என்று தெரிவிக்கப்பட்டது.

தவிர, ரிதிதென்னை இக்ராஹ் வித்தியாலயம் மற்றும் ஜெயந்தியாய அஹமட் கிறாஸ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கும் மாணவர்கள் செல்லவில்லை. அதிபர், ஆசிரியர்கள் மட்டும் பாடசாலைகளுக்குச் சென்று திரும்பினர். கற்றல் முடங்கின என்று தெரிவிக்கப்பட்டது.

தென் கொரியாவிலுள்ள இலங்கையர்களில் முதற்கட்டமாக ஒரு குழுவினர் அழைத்து வரப்பட்டுள்ளனர். அவர்கள் மட்டக்களப்பு தனியார் பல்கலைக் கழகத்தில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்படவுள்ளனர் என்று அரசு கூறியுள்ள நிலையில் அந்தப் பகுதி மாணவர்களும் மக்களும் ஆர்ப்பாட்டங்களில் குதித்துள்ளனர். (த-150)



## கொக்குவிலில் இரவு விபத்து மூவர் படுகாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி கொக்குவிலில் இரண்டு முச்சக்கர வண்டிகள் மோதி விபத்துக்குள்ளானதில் 3 பேர் படுகாயமடைந்தனர்.

சம்பவம் நேற்றிரவு 7 மணியளவில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை வீதியூடாக தாவடி நோக்கிச் சென்றுகொண்டிருந்த முச்சக்கர வண்டியும் கொக்குவில் பகுதியில் வீதியைக் கடக்க முற்பட்ட மற்றுமொரு முச்சக்கர வண்டியும் மோதி விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-20)

# இந்து வேட்பாளர் பற்றி ரெலோவுடன் பேசுவேன்

## மன்னார் இந்து பிரதிநிதிகளிடம் மாவை தெரிவிப்பு

வன்னித் தேர்தல் தொகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான ரெலோ சார்பில் இந்து வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் நாளை இடம்பெறும் வேட்பாளர் தெரிவுக் கூட்டத்தில் அந்தக் கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனுடன் பேச்சு நடத்துவேன்" என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா மன்னார் இந்துப் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் வேட்பாளர் வெற்றிடமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் வேட்பாளர் விண்ணப்பம் வழங்கப்படாதுவிடின் வன்னித் தேர்தல் தொகுதியில் மன்னார் மாவட்ட இந்துப் பிரதிநிதி சுயேச்சையாகக் களமிறங்குவார். அவர் தெரிவு செய்யப்பட்டால், தமிழ் அரசுக் கட்சியில் உறுப்புரிமை வழங்கவேண்டும்" என்று இந்துக்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மன்னாரில் கிறிஸ்தவர்களாலும் கிறிஸ்தவ பாதிரிகளாலும் இந்து மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக மன்னாருக்குச் சென்ற தமிழ் அரசுக் கட்சியின் தலைவரிடம் நேற்று கேள்விகள் எழுப்பப்பட்டன.

இந்தமுறை நாடாளுமன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் இந்து மக்கள் சார்பில் சுயேச்சைக் குழு ஒன்று களமிறங்கவுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

அவற்றுக்குப் பதிலளித்த சேனாதிராசா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழ் அரசுக் கட்சி சார்பில் வன்னி மாவட்டத்தில் ஏற்கனவே ஆசனங்கள் பகிரப்பட்டுவிட்டன. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்ள்ஸ் நிர்மலநாதன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, சிவமோகன் மற்றும் சத்தியலிங்கம் ஆகியோர் களமிறங்கவுள்ளனர்" என்று பதிலளித்தார்.

"இந்து சமய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவருமே மன்னாரில் இல்லை. இந்து மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினை பற்றி ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கதைக்காததால்தான் எம்மில் ஒருவரை தேர்தலில் களமிறக்கத் திட்ட மிட்டுள்ளோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகச் செயற்பட்டு தமிழ்த் தேசியத்தை சிதைவடையச் செய்யநாம் முயற்சிக்கவில்லை. சுயேச்சையாகக் கேட்கின்றவர் வெற்றி பெற்றபின் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் இணைய வாய்ப்பளிக்கவேண்டும்" என்று மாவை சேனாதிராசாவிடம் கோரப்பட்டது. அதற்கே சேனாதிராசா மேற்கண்டவாறு உறுதியளித்தார். (த)

# மின்சாரம் தடைப்படும்

வவுனியா ,மார்ச்11

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக, நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வடக்கின் குறிப்பிட்ட சில இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று, சுன்னாகம் இலங்கை மின்சார சபையின் மின்வழங்கல் கட்டுப்பாட்டு நிலையத்தின் மின்பொறியிலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

**வவுனியா**

வவுனியா பிரதேசத்தில் முகத்தாங்குளம் 2ம் வட்டாரம், கோவில்புதுக்குளம் கிராமம், இராசேந்திர குளத்திலிருந்து உளுக்குளம் வரை, மதவுவைத்த குளம், குட்செட் வீதி, தோணிக்கல், பண்டாரிக்குளம், தவசிக்குளம், உக்குளாங்குளம், குளோப் மில் ஆகிய இடங்களிலும்

**மன்னார்**

மன்னார் பிரதேசத்தில் இசைமழைத்தாழ்வு, நரிக்காடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# ரவி உள்ளிட்ட 9 பேரையும் உடன் கைதுசெய்யுங்கள்

## சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பறந்தது அவசர அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 11

மத்திய வங்கி பிணைமுறி மோசடி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உட்பட 9 சந்தேகநபர்களையும் உடனடியாகக் கைதுசெய்யுமாறு நாட்டில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், பதில் பொலிஸ்மா அதிபர் ஊடாக அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் நீதிமன்றப் பிடியாணை உத்தரவை அனுப்பியுள்ளார்.



மத்திய வங்கியில் 2016ஆம் ஆண்டு இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பில் புதிதாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், பேப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவத்தின் முன்னாள் தலைவர் அர்ஜுன் அலோசியஸ் உட்பட 10 சந்தேகநபர்களை உடனடியாகக் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து நான்கு நாள்கள் கடந்துள்ளன. இந்தநிலையில் அவர்களில் ஒருவரைத் தவிர ஏனைய சந்தேகநபர்களைக் கைதுசெய்ய குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் முடியாமல் போயுள்ளது.

இதையடுத்து ரவி கருணாநாயக்க உட்பட 9 சந்தேகநபர்களையும் உடனடியாகக்கைதுசெய்யுமாறுகைது செய்யுமாறு நாட்டில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.


இதேவேளை, இவர்களைக் கைதுசெய்வதற்காக நியமிக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவுக் குழுக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி குறித்த சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்காகக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் மட்டும் 15 குழுக்கள் களத்தில் இறக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரவி கருணாநாயக்க உள்ளிட்ட சந்தேகநபர்கள் இருக்குமிடம் அல்லது அவர்கள் குறித்த ஏதேனும் தகவல் அறிந்தவர்கள் 0112320141, 0112320142, 0112320143 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குத் தெரியப்படுத்த முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-22)

# பகிடிவதை கொடூரத்தின் உச்சம்: 'கோமா' நிலையில் மாணவன்!

**கொழும்பு, மார்ச் 11**

**ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு மாணவன் ஒருவன் பகிடிவதை காரணமாக உயிராபத்தான நிலையில், அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.**




கடந்த 6ஆம் திகதி அதிகாலையில் இவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவதினத்தில் அதிகாலை 1.30 மணியளவில் பகிடிவதைச் சம்பவம் நடந்துள்ளது.

கனரக வாகனமொன்றின் ரயர் மாணவனின் மீது உருட்டி விடப்பட்டுள்ளது. அது தலையில் பட்டு, மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டு, கோமா நிலையில் உயிராபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மினுவாங்கொடையைச் சேர்ந்த பஷிந்து ஹிருஷின் எனப்படும் முதலாம் வருட மாணவர் ஒருவரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்.

இரண்டாம் வருட மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவொன்றை தொடர்ந்து நள்ளிரவு வரை நீடித்த கேளிக்கையைத் தொடர்ந்து இந்தச் சம்பவம் நடந்தது.

மேல் தளத்தில் இருந்து மாணவனின் மீது ரயர் உருட்டி விடப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. எனினும், மோட்டார் சைக்கிள் விபத்து எனக் குறிப்பிட்டு, விடயத்தை திசை திருப்ப மூத்த மாணவர்களால் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாணவன் உடனடியாக களுபோவில வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அவர் ஆபத்தான கட்டத்தில் தொடர்ந்து இருக்கிறார் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. சட்டமா அதிபரின் வழிநடத்தலில் விசாரணைகள் இடம்பெறும் என பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அண்மையில் இடம்பெற்ற இரண்டு பகிடிவதை சம்பவங்கள் தொடர்பில், யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்வாகம் தொடர் நடவடிக்கைகளை எடுக்காமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## திருக்கேதீச்சர...

ளும் எதிர்வரும் ஜூன் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் பெப்ரவரி சிவராத்திரிக்கு முதல் நாள் திருக்கேதீச்சர வீதி அலங்கார வளைவை அருட்தந்தை ஒருவர் தலைமையினான கத்தோலிக்க மக்கள் சிலரால் உடைத்தெறியப்பட்டிருந்தது.

வளைவு உடைக்கப்பட்டது தொடர்பாக மன்னார் பொலிஸார் பதிவு செய்த வழக்கும், அனுமதி இல்லாமல் வீதியைச் சேதப்படுத்தியதாக மாந்தை லூர்து மாதா ஆலய பங்கு மக்களால் பதிவு செய்யப்பட்ட வழக்கும் மன்னார் நீதிவான் மன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்பாக நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு எதிர்வரும் ஜூன் 14ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, திருக்கேதீச்சர வீதியில் அலங்கார வளைவு அமைப்பதற்கு திருக்கேதீச்சர நிர்வாகத்தினருக்கு மன்னார் பிரதேச சபையினர் அனுமதி வழங்கியிருந்தனர். அந்த அனுமதியை மீளப் பெறக்கோரி மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் உட்பட உறுப்பினர்களுக்கு எதிராக கத்தோலிக்க மக்கள் சிலரால் மன்னார் மேல் நீதிமன்றில் ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு மேல்நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு இருந்தது. எனினும், நீதிபதி சஹாப்தீன் விடுமுறை என்பதால் இந்த வழக்கும் எதிர்வரும் ஜூன் 14ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கில் திருக்கேதீச்சர நிர்வாகம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான சட்டத்தரணிகளும்

கிறிஸ்தவ மக்கள் சார்பில் அன்ரன் புனிதநாயகம் தலைமையிலான சட்டத்தரணிகளும் முன்னிலையாகி வருகின்றனர். (கு-213)



# 'இறக்குமதி'களை ஆதரிக்காதீர்கள்

## சி.வி.கே. அறிவுறுத்தல்

**யாழ்ப்பாணம், மார்ச் 11**


**மக்கள் தங்களுக்கு நன்கு தெரிந்த, அறிந்த வேட்பாளர்களை நாடாளுமன்றத் தேர்தலில் தெரிவு செய்ய முடியும். இறக்குமதி வேட்பாளர்களை ஆதரிக்காமல் விட்டால், எதிர்காலத்தில் இறக்குமதி வேட்பாளர்களை கட்சி நிறுத்தாது. இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும், வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் கிழக்கு மாகாணங்களில் சில மாற்றங்கள் தேவைப்படுகின்றன. நாளை மறுதினம் (நாளை) பட்டியல் இறுதி செய்யப்படும்.

தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ள இரண்டு பெண்கள் தொடர்பில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. மட்டக்களப்பில் இரண்டு பெண் வேட்பாளர்களில் ஒருவர் தெரிவு செய்யப்படக் கூடும் என்ற ஊகம் இருந்தது. அவர்கள் தொடர்பில் மறுபரிசீலனை செய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளதாக நானும், கட்சித் தலைவர் மாவை.சோ.சேனாதிராசாவும் உணர்ந்து கொண்டுள்ளோம். அரசியலில் இருப்பவர்கள் முழுமையாக அப்பழுக்கற்றவர்களாக இருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் பல குற்றச்சாட்டுக்களுடன் இருக்க முடியாது.



இருப்பினும் இதுதொடர்பில்மீளாய்வு செய்ய வேண்டும் என்ற நிலைப்பாடு உறுதியாக இருக்கின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடுவார் என்று தெரிவிக்கப்படும் பெண் வேட்பாளர் அம்பிகா சற்குணநாதன் தொடர்பில், தமிழ் அரசுக் கட்சியின் மகளிர் அணியினர் முறைப்பாடு தந்துள்ளார்கள். கட்சியுடன் நீண்ட காலம் பணியாற்றியவர்கள் தங்களைப் புறக்கணித்ததாகக் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நீங்கள் இறக்குமதி (கொழும்பிலிருந்து வேட்பாளரைக் களமிறக்குவது) வேண்டாம் என்று சொன்னீர்கள். ஆனால் இப்போது அதனைத் தானே செய்துள்ளீர்கள் என்று என்னிடம் மகளிர் அணியினர் நேரடியாகக் கேட்டார்கள். எனது தனிப்பட்ட கருத்தை நான் கூறிவிட்டேன். கட்சி ஒரு முடிவாக வரும் போது தனித்து நான் எதுவும் செய்ய முடியாது. மக்கள் தெளிவாக இருப்பார்கள். மக்கள் சரியான தீர்ப்பை வழங்கினால் இவ்வாறான பிரச்சினைகள் எழாமல் இருக்கும். தெரிந்தவர்களுக்கு, அறிந்தவர்களுக்கு வாக்களியுங்கள். அப்படிச் செய்தால் இவ்வாறான பிரச்சினை எதிர்காலத்தில் வராமல் இருக்கும்.

**ஜனநாயகப் போராளிகள் கட்சி**

ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் எங்களுடன் சந்திப்பை நடத்தியுள்ளார்கள்.

தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றார்கள். நாடாளுமன்றத் தேர்தலில் தங்களுக்கு ஆசனம் வழங்குவது நெருக்கடி என்பதை ஏற்றுக் கொள்வதாகக் கூறியிருந்தார்கள். அவர்களுடன் நாங்கள் உடன்பாட்டுக்கு வந்துள்ளோம். எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் அவர்கள் ஒவ்வொருவர் களமிறக்கப்படுவார்கள் - என்றார். (ஒ,5)

# உதவிப் பிரதேச செயலர் நியமனம்

வேலணைப் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலராக நடராசா பிரணவன் கடமையேற்றார்.

நயினாதீவைச் சேர்ந்த இவர் தனது ஆரம்ப கல்வியை நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியாலயத்திலும், இடைநிலை மற்றும் உயர்தரக் கல்வியை யாழ். இந்துக்கல்லூரியிலும் கற்றுள்ளார். யாழ்.பல்கலைக்கழகத்தில் உயிரியல் விஞ்ஞானத்தில் சிறப்புப்பட்டத்தைப் பெற்ற இவர், யாழ்.பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகவும் யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் ஆசிரியராகவும் கடமையாற்றினார். இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்து, கடந்த 5ஆம் திகதி முதல் தீவுகள் தெற்கு வேலணைப் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலராகக் கடமையேற்றுள்ளார். (சு)

## வாள்...

தனர். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் குப்பிளானில் நேற்று இடம்பெற்றது. அவர் இரவுப் பூசை முடித்து வீடு திரும்பும் போது பிறிதொரு கோவில் தேவைக்காக வாள் எடுத்துக்கொண்டு சென்றுள்ளார். அதன் போதே வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் பூசகரைக் கைது செய்துள்ளனர்.

வாள் கொண்டுசென்றார் என்று குற்றஞ்சாட்டி அவரைக் கைது செய்தோம் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

அவர் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டதும், அவருடைய சகோதரன் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற உரையாடி பூசகரை பிணையில் விடுவித்தார். எனினும், பூசகர் கொண்டுசென்ற வாள் மற்றும் அவர் பயணித்த மோட்டார்சைக்கிள் என்பனவற்றைப் பொலிஸார் விடுவிக்கவில்லை. அவற்றை வைத்து மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகப் பொலிஸ் தரப்புக் கூறுகின்றது. (கு-105)

# யாழில் விரைவில் பனம்பொருள் கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்ப்பாணத்தில் பனம்பொருள் கண்காட்சி ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளைப் பனை அபிவிருத்தி சபை மேற்கொண்டுள்ளது.

ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் இந்தக் கண்காட்சியை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பனம்பொருளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் சகல பொருள்களும் கண்காட்சியில் வைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் இந்தக் கண்காட்சி நடத்தப்படும்.

உற்பத்தியாளர்கள் மற்றும் சபையில் பதிவு செய்யப்பட்ட பனம்பொருள் உற்பத்திச் சங்கங்கள் போன்றவற்றில் இருந்து பெறப்பட்ட பனம்பொருளிலான உற்பத்திப் பொருள்கள் இந்தக் கண்காட்சியில் வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

# ரணில் எம்மை ஏமாற்றியது 2018 இல்தான் தெரியும்


## சி.வி.கே. தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியை நம்பி, ரணில் விக்கிரமசிங்கவை நம்பி நாம் ஏமாந்தது உண்மை. அவர்கள் ஏமாற்றியமை 2018ஆம் ஆண்டு இறுதியில்தான் எமக்குத் தெரியும். இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்புக்கான முயற்சி முன்னெடுக்கப்பட்ட தருணத்தில், 2018ஆம் ஆண்டு இறுதியில், அதில் தடங்கல் ஏற்பட்டது. அப்போது அந்த விடயத்தில் தனக்குப் பொறுப்பில்லை, வழிநடத்தல் குழு, அரசியல் நிர்ணய சபையே பொறுப்பு என்று அவர் கூறினார். அப்போதுதான் நாம் ஏமாற்றப்பட்டமையை உணர்ந்தோம். அதுவரை ரணிலை, ஐக்கிய தேசியக் கட்சியை நாம் நம்பி நடந்தது உண்மை. ரணில் விக்கிரமசிங்க எம்மை ஏமாற்றிய பின்னரும், அவர்கள் ஆட்சி அமைப்பதற்கு எமது கட்சி ஆதரவளித்தமைக்கு சில காரணங்கள் இருக்கின்றன. முக்கியமாக ராஜபக்ஷாக்கள் ஆட்சிக்கு வரக் கூடாது என்பதற்காகத்தான் நாம் அவ்வாறு செயற்பட்டோம்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் நாம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிப்போம் என்று எதிர்பார்க்கக் கூடாது. நாம் பட்டுத் தெளிந்து விட்டோம். ராஜபக்ஷாக்களுடனும் பேசத் தயாராக இருக்கின்றோம். நாம் நடுநிலையாக இருக்கவேண்டும். நடுநிலையாக இருப்போம். ராஜபக்ஷாக்களுக்கு ஆதரவு வழங்குவது என்றால் கூட நிபந்தனைகளின் அடிப்படையில்தான் ஆதரவை வழங்குவோம், - என்றார். (ஒ,5,20)



# மாணவி துஷ்பிரயோகம் ஓட்டோச் சாரதி கைது

வவுனியா, மார்ச் 11

முச்சக்கரவண்டியில் சென்ற 14 வயதான பாடசாலை மாணவியை, துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் அதன், சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது. வவுனியா தாண்டிக்குளம் பகுதியிலிருந்து கிடாச்சூரி நோக்கிச் செல்வதற்கு இரவு காத்திருந்த மாணவி, முச்சக்கரவண்டியில் கிடாச்சூரியில் அமைந்துள்ள தனது வீட்டுக்குச் சென்றுள்ளார்.

தனிமையில் சென்ற மாணவியை, முச்சக்கரவண்டியின் சாரதி பொதுமக்கள் நடமாட்டம் இல்லாத பகுதிக்குக் கொண்டு சென்று, பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மாணவி ஈச்சங்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்தார். முச்சக்கரவண்டியின் சாரதியைப் பொலிஸார் கைது செய்து, பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்துள்ளனர். மாணவியை மருத்துவப் பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸாருடன் இணைந்து வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-18)

# ஹொட்டல் உரிமையாளர் கொலையில் 7 பேர் கைது

நீர்கொழும்பு - பெரியமுல்லை பகுதியில் முஸ்லிம் ஹொட்டல் உரிமையாளர் நேற்றுமுன்தினம் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பெரியமுல்லை பகுதியைச் சேர்ந்த 18 வயதான இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். ஏனைய 6 சந்தேகநபர்களும் சட்டத்தரணியூடாக பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர். அவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

அவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொட்டலுக்குச் சென்றவர்கள் மதுபானம் அருந்த முற்படுகையில், உரிமையாளரும் ஊழியர்களும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தபோது இருதரப்புக்கும் மோதல் ஏற்பட்டுள்ளது.

இதன்போது, ஹோட்டல் உரிமையாளரையும் ஊழியர்களையும் அங்கு சென்றவர்கள் கூரான ஆயுதங்களால் வெட்டியுள்ளனர். அதனால் ஹொட்டல் உரிமையாளர் உட்பட 4 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் நீர்கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஹொட்டல் உரிமையாளர் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (த-22)

## புத்தர் சிலை உடைப்பு சந்தேகத்தில் ஒருவர் கைது

திருகோணமலை, தம்பலகாமம் ஆதி கோணேஷ்வரா கோவில் சந்தியில் வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை நேற்று அதிகாலை சேதமாக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் தம்பலகாமம், பொற்கேணி பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தற்போது ஒரு புதிய புத்தர் சிலை அந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்த முன்னாள் போராளி எனவும், அவர் பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் விடுதலை செய்யப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அவர் மன நலம் பாதிக்கப்பட்ட நிலையில் திரு கோணமலை பொது வைத்தியசாலை உளநலப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வருபவர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ந)


### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சிரேஸ்ட ஆசிரியர் திருமதி கணேசமலர் சோதிலிங்கத்தின் அன்புத் தந்தை
**அம்பலவி இராசையா**
அவர்கள் 09.03.2020 அன்று இயற்கை எய்தியுள்ளார். அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
**ஆசிரியர் கழகம்,**
**யா/ நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை.**
(CS/31823)(11,17)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 . 12 . 1964



உதிர்வு 21 . 02 . 2019

அமரர்
**தம்பிராசா சிறீஸ்கந்தராசா**

ஆண்டவன் அடிசேர்ந்து ஆண்டொன்று போனதுவோ அன்பென்னும் கூட்டினில் அழகாய் வளர்த்த தெய்வமே! அன்பென்னும் கூட்டினில் அழகாய் வளர்த்த தெய்வமே
ஆலமரமாய் எங்களைத் தாங்கி விழுதுகளாய் வாழச்செய்தீர் - உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய் வாழ்ந்தீர்கள்
உறைந்து போனோம் உங்கள் பிரிவால் எனினும் காலம் யாவும் உங்கள் நாமமே ஒலிக்க வாழ்ந்து இதய மலரில் என்றென்றும் நினைத்திடுவோம்

**மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்கள், மருமக்கள்.**
(IN/12796)(11,17)

### மரண அறிவித்தல்

பிறப்பு 11 . 05 . 1936



இறப்பு 09 . 03 . 2020

**திருமதி நல்லம்மா கந்தையா**

நீதிமன்ற வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், காளிகோயிலடி மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா கந்தையா 09.03.2020 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையாவின் அன்பு மனைவியும், விக்கினேஸ்வரன், காலஞ்சென்ற ராமேஸ்வரன் மற்றும் சிவனேஸ்வரன், ஈஸ்வரன், விமலேஸ்வரன், பரமேஸ்வரன் ஆகியோரின் பாசமிகுதாயாரும், யோகாம்பிகை, கோபினி,. சுமதினி, மதிவதனி, சியாமினி, சரீனா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2020) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காளிகோயிலடி, மல்லாகம்.** (CS/31818)(11,17) **தகவல்:- குடும்பத்தினர்.**

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**தவமணி சதானந்தன்**

பிறப்பு 04.12.1937

இறப்பு 10.02.2020



கடந்த 10.02.2020 சிவபதமடைந்த தவமணி சதானந்தன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (11.03.2020) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

245/11, Sir Pon. Ramanathan Road, Uduvil - East, Chunnakam. (J/11863)(11,17) **குடும்பத்தினர். 021 224 3341**

### மரண அறிவித்தல்

**நாகமுத்து சின்னத்துரை**



விண்ணுலகில் 31.03.1926 மண்ணுலகில் 10.03.2020

இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சின்னத்துரை நேற்று (10.03.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ண பிள்ளை நாச்சம்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2020) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கீரிமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இளவாலை வடக்கு, இளவாலை.** (J/11866)(11,17) **தகவல்: குடும்பத்தினர். சேந்தன்**

### நீங்கா நினைவலைகள்
### முதலாம் ஆண்டு - 11.03.2020

அமரர்
**சரஸ்வதிதேவி பரமேஸ்வரலிங்கம்**

தோற்றம் 23.11.1950

மறைவு 21.02.2019



திதி:- அபரபக்க துதியை

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் இருப்பிடமாய்
வாழ்வாங்கு வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே!
ஆண்டொன்று ஓடி மறைந்ததம்மா இன்னமும்
ஓயவில்லை உமது நினைவலைகள் ஆறவில்லை
உமது பிரிவுத்துயர் நீர் எமையெல்லாம்
விட்டுப்பிரிந்தாலும் உமது நினைவுகளாய்
நிழலாய் நாம் இருப்போம் என்றென்றும்!

**அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்**

**பத்திரகாளி கோயிலடி, தாவடி தெற்கு, கொக்குவில்.** (CS/31784)(11,17) **இ.பரமேஸ்வரலிங்கம் குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி அருளம்மா இராசநாயகம்
### (டீயா அம்மா)

இல.59 ஆசீர்வாதப்பர் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளம்மா இராசநாயகம் நேற்று (10.03.2020) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கபியேல்பிள்ளை - சபினம் தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை இராசநாயகத்தின் அன்பு மனைவியும் றெஜிபிளேவியன், சில்வியா மற்றில்டா, அன்ரன் சில்வேஸ்ரர் காலஞ்சென்ற அல்பிரட் ஜோர்ச் மற்றும் லில்லிதிரேசா, எலிசபெத்ராணி, அருள்ராஜா பற்றிக் ஆகியோரின் அன்புத்தாயாரும் மேரி கொலஸ்ரிக்கா, கீதபொன்கலன், காலஞ்சென்ற கௌசாம்பிகை மற்றும் மதிவதனா, வேதநாயகம், ஜவன்கவிஸ்ரன், நீலா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான மேரிவிக்ரோரியா, பீற்றர்சேவியர், யோக்கீம்பிள்ளைபோல், லூர்த்தம்மா, வின்சன்டி போல் மற்றும் அருளானந்தம் (பாபா) அலெக்சாந்திரியா, ஜெயராணி (குஞ்சி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான D.S இராஜரெட்ணம், D.S.ஞானப்பிரகாசம் (ஞானம் மாஸ்ரர்) ஆகியோர்ரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (11.03.2020) புதன்கிழமை பி.ப 3.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: கீதபொன்கலன் (லக்கிஸ்ரோர்ஸ்)**
**59, ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர்.**
**021-222 7324**

## மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 08 . 1945



மறைவு
10 . 03 . 2020

### சுப்பையா செல்வராசா (செல்வம்)
### (உரிமையாளர் மாலா சைக்கிள் பலஸ் - சங்கானை)

அராலி வடக்கு செட்டியார்மடத்தைப் பிறப்பிடமாகவும், சங்குவேலி தெற்கு, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா செல்வராசா (செல்வம்) நேற்று (10.03.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பொன்னம்மா தம்பதிகளின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான தியாகு - சின்னம்மா தம்பதிகளின் மருமகனும், மனோகரதேவியின் (மனோகரி) அன்புக் கணவரும், நேசரட்ணம், அமிர்தலட்சுமி, முருகையா, கந்தசாமி, சண்முகநாதன், தவமலர், லோகநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஜனார்த்தனன் (சக்தி எலக்ரிக்கல்ஸ் - சங்கானை), ஜனாசுதன் ( J.P Motors - சங்கானை, மானிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திசாயினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் -மாவட்டச் செயலகம், கிளிநொச்சி), பிரியா (இலங்கை வங்கி - பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்விகா, அக்ஷனா, ஹர்ஷித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2020) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் சங்குவேலியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சங்குவேலி தெற்கு,**
**மானிப்பாய்.**

(J/118641)(11,17)

**தகவல்:-**
**மகேந்திரராஜா (மைத்துனர்)**

## மரண அறிவித்தல்

# திருமதி நடராசா இலட்சுமி

*(மொந்திபுலம், காரைநகர்)*



காரைநகர், மொந்திபுலத்தைப் பிறப்பிடமாகவும், மில்வீதி, இடைப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா இலட்சுமி நேற்று **(10.03.2020)** செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற இ.போ.ச நடத்துனரும், வர்த்தகருமான சோ.க.நடராசாவின் அன்பு மனைவியும், கணேசமூர்த்தி (ஓய்வு நிலை ஆசிரியர், காரைநகர் இந்துக்கல்லூரி, கோண்டாவில் இந்துக்கல்லூரி), கனகேஸ்வரி, காலஞ்சென்ற சிவகுமார் மற்று சிவராசா (சிவா ரேடர்ஸ், யாழ்ப்பாணம்), சிவநேசன் (நில அளவைத் திணைக்களம், திருகோணமலை), உதயகுமாரன் (கண்ணன், சிங்கப்பூர் ஜுவல்லரி, யாழ்ப்பாணம்), நந்தகுமார் (நல்லைக்குமரன் ஹாட்வெயார், கிளிநொச்சி), சிவகௌரி, பாரதி (பிரதேச செயலகம், காரைநகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சதாசிவம்(ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்), இந்திராதேவி, தருமகுலசிங்கம், பாமதி, ஞானமலர் (ஆசிரியை, இளையதம்பி மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம், ஸ்ரீபுத்தூர் சோமாஸ்கந்தா மகாவித்தியாலயம், புத்தூர்), காலஞ்சென்ற பாலகௌரி மற்றும் கீதாஞ்சலி, பவானி, அருள்நாதன், சிவனேஸ்வரி (பிரதேச செயலகம், காரைநகர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜனன், துவாரகன், விஜிதா, சுகந்தன், ரதீப், ரதீபா, ராஜிவ், கஜரூபன், கௌரிசங்கர், நிமலன், வைகுந்தன், நிசாந்தன், திருவரங்கன், ஜெசிந்தா, கஜேந்தினி, மிதுஷன், சாருஜன், விதுசன், சுபிதன், கோபிகா, மிதுசிகா, கீர்த்திகா, தேவகஜன், சோபாஜினி, சோஜினி, பிரகாசினி, பிரபாலினி, தர்னிகா, டர்னிகன், கவிநயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சுஜானி, கபிசா, நித்திநிசா, நீயூநிசா, லிதுசன், அகமர்ஷன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுத்திக்கிரியைகள் நாளை **(12.03.2020)** வியாழக்கிழமை காலை **8.00** மணிக்கு அன்னாரின் மில் வீதி, இடைப்பிட்டி இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் சாம்பலோடை இந்துமயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**மில் வீதி,**
**இடைப்பிட்டி, காரைநகர்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு
077 467 6556

# பால் உற்பத்தி பெரும் வீழ்ச்சி

## யாழ். குடாநாட்டில்



**யாழ்ப்பாணம்,மார்ச் 11**

**யாழ்ப்பாணக் குடாநாட்டின் பால் உற்பத்தி, கடந்த 3 ஆண்டு களாக பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள் ளது என்று மாவட்டச் செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.**

குடாநாட்டில் 2016 ஆம் ஆண்டில் மட் டும் 3 கோடியே 17 லட்சத்து 95 ஆயி ரத்து 944 லீற்றர் பால் உற்பத்தி பெறப் பட்டது. 2017ஆம் ஆண்டில் ஒரு கோடியே 74 லட்சத்து 84 ஆயிரத்து 330 லீற்றர் பால் உற்பத்தி கிடைத்தது.

அதேவேளை 2018ஆம் ஆண்டில் மேலும் வீழ்ச்சி அடைந்து ஒரு கோடியே 74 லட் சத்து 62 ஆயிரத்து 811 லீற்றர் பால் மட்டுமே உற்பத்தியாகக் கிடைத்துள்ளது. 2019 ஆம் ஆண்டின் கணக்கீட்டின் பிரகாரம் இந்தப் புள்ளி விவரம் பெறப் பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (க-105)

# திருவள்ளுவர் குருபூசை நிகழ்வு

வவுனியா,மார்ச் 11



திருவள்ளுவர் குருபூசை நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை வவுனி யாவில் கடைப்பிடிக்கப்பட்டது.

வவுனியா மருத்துவமனை சுற்று வட்ட வீதியில் அமைந்துள்ள திரு வள்ளுவர் சிலைக்கு மாலை அணி வித்து மலர் தூவி குருபூசைதினம் கடைப்பிடிக்கப்பட்டது.

வவுனியா நகரசபையின் ஏற்பாட் டில் உபநகரபிதா சு.குமாரசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ் வில் தமிழருவி த.சிவகுமாரன் திருவள்ளு வர் தொடர்பான சிறப்புரையை நிகழ்த்தி னார்.

நிகழ்வில் நகரசபைஉறுப்பினர்களான சந்திரகுலசிங்கம் மோகன்,நா.சேனாதி ராஜா,சுமந்திரன்,தமிழ் விருட்சம் அமைப் பைச் சேர்ந்த கண்ணன், நகரசபை ஊழியர்கள்,பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-110,18)

# சமாதானம் வேண்டி நல்லூரிலிருந்து யாத்திரை

யாழ்ப்பாணம்,மார்ச் 11

இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமய தொண்டர் சபை, யாழ் சின் மயாமிஷன்ஆலோ சனைக்கமை வாக, நாட்டில் அமைதி, சாந்தி, சமாதானம், நல் லிணக்கம் இனங் களுக்கிடையே பேதங்கள் நீங்கி ஒற்றுமை வளர இறையருள் வேண்டி யாத்திரை மேற்கொள்ளவுள் ளது.

நல்லூர் கந்த சுவாமி ஆலயத் தில் இருந்து சிவ னொளிபாதமலை வரை புனித திருத் தல தரிசன யாத் திரை நடைபெறும். ஏப்ரல் மாதம் நடை பெறவிருக்கும் புனித திருத்தல தரிசன யாத்திரை யில் இணைய விரும்பும் அடியார் கள் பதிவை மேற் கொள்ளலாம். இந்த யாத்திரையில் கலந்து கொள்ள விரும்புவோர் 0779236552 என்ற தொலை பேசி இலக்கத் துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட் டுள்ளது. யாத் திரை செல்லும் திகதி பின்னர் அறி விக்கப்படும். (க-159)

# வீதி விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி,மார்ச் 11

வீதியின் குறுக்கே ஓடிய மாட்டுடன் மோட் டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த ஒருவர் காயமடைந்த நிலையில் சாவகச் சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 10 மணி யளவில் கெற்பேலி மத்தியில் இடம்பெற் றது. (ஐ-9)

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடன் கூடிய 2700 ச.அடி விஸ்தீரணம் கொண்ட, சுவையான தண்ணீர் கிணறும் தண்ணீர் தாங்கியும், விசாலமான மூன்று வரவேற்பறைகளும், குளியலறைகளுடன் இணைந்த ஐந்து படுக்கை அறைகளும் வசதியான சமையலறைக் களஞ்சிய அறையும், வாகனத்தரிப்பிடங்களுடன் கூடிய வீடு நீண்டகால ஒப்பந்த அடிப்படையில் நிறுவனங்கள் மற்றும் வியாபார நிறுவனங்கள் குடியிருப்புக்கு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்கப்படும். இரண்டு பாதைகளுடன் அமைந்துள்ளது. (CS/31807)(11,17)

**076 044 7349**

**இல.19, சோமசுந்தரம் அவனியூ, யாழ்ப்பாணம்.**
**(கச்சேரி,மருதடி பிள்ளையார் கோயில், ஜோன்பொஸ்கோ வித்தியாலயம், யாழ்.பிரதேச செயலகம்)**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



Congratulations

**திருமதி மாலதி கந்தையா**
**B.A, PGDE, M.Ed**

கடந்த 04.03.2020 அன்று கொழும்பு **BMICH** இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் **Business University of Costaricca** வினால் வழங்கப்பட்ட முதுகல்விமாணி **(M.Ed)** பட்டம் பெற்ற யா/ விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் **திருமதி மாலதி கந்தையா** அவர்களை மனநிறைவுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- **பெற்றோர்,**
**ஜெயந்தன் குடும்பம் - ஜேர்மனி**
**ஆனந்தராசா குடும்பம் - சுவிஸ்**
**ஜெயதீசன் குடும்பம் - சுவிஸ்**

(AC2566)(11,17)

## கிருஷ்ணா அடகு சேவை

பதிவு இல: J/DS/BR 472

மேற் குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் **2019** ஆம் ஆண்டு முன்பும் **31.08.2019** இற்கு முன்னர் அடகு நகைகள் யாவற்றையும் **2020** ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் **15** ஆம் திகதி **(15.04.2020)** இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் **15.04.2020**ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**குறிப்பு:** **2019** ஆம் ஆண்டு **6** ஆம் மாதம் முதலாம் திகதி முதல் **2019** ஆம் ஆண்டு **8** ஆம் மாதம் **31** ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

உரிமையாளர்: **A.S.Surendran**

**இல. 370, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம். 021 490 0311**

**இல. 9, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046** (m.12790) (13.17)

## மணிவிழா வாழ்த்துக்கள்

**திருமதி தேவராணி தேவகுமார்**
**பயிற்றப்பட்ட மனைப் பொருளியல் ஆசிரியர்**
**யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்**
**11.03.2020**



Congratulations

எமது பாடசாலையில் கடமையாற்றி சேவையில் ஓய்வுபெறும் ஆசிரியரை ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்

**சேவை விவரம்:**

| | | |
|---|---|---|
| யா/ மட்டுவில் வடக்கு அ.த.க.பா | - 28.11.1989 | - 31.12.1990 |
| கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை | - 01.01.1991 | - 31.12.1992 |
| யா/ மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை | - 01.01.1993 | - 18.03.1993 |
| யா/ சைப்பிரகாச வித்தியாலயம் | - 19.03.1993 | - 07.06.1993 |
| யா/ புனிதமரியாள் வித்தியாலயம் | - 08.06.1993 | - 31.12.2007 |
| மு/ வற்றாப்பளை ம.வி. | - 01.01.2008 | - 31.12.2010 |
| யா/ கொழும்புத்துறை இ.ம.வி. | - 01.01.2011 | - 13.01.2011 |
| யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் | - 14.01.2011 | - 10.03.2020 |

**ஆசிரியர் சேவையில் - 30 வருடங்கள் - 03 மாதங்கள்**

**வாழ்த்துவோர்:**
ஆசிரியர் நலன்புரிக்கழகம்
**யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.**

(cs.31705)(13,17)

## மரண அறிவித்தல்கள்

மண்ணில்
10 . 11 . 1937



விண்ணில்
07 . 03 . 2020

### திருமதி மேரி அஞ்சலா நடராஜா (சோதி)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், யாழ். 5ஆம் குறுக்குத்தெருவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மேரிஅஞ்சலா நடராஜா கடந்த 07.03.2020 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி பஸ்ரியாம்பிள்ளை (வலோரி) மேரிமாகிறேற் (ரட்ணம்) தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சரவணமுத்து சின்னையா, செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற யோசப் நடராஜாவின் அன்பு மனைவியும், ஞானராஜா, ஞானேந்திரன், ஞானசேகர், ஞானபாஸ்கரன், சுபோஜினி, ஞானச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற பவளம் வேதநாயகம் மற்றும் றுக்மணி சிறில், காலஞ்சென்ற மகேந்திரன், பெனோ, ராஜன் மற்றும் அன்ரன் (பபா), சுவினிதா செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அஞ்சலின், ஜெயந்தி, சந்திரிக்கா, யாழினி, ஜீவேந்திரா, எனில்டா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அனோஜ், சந்தோஷ், அபினேஷ், தர்ஷன், துஷ்யந்தன், சுலக்ஷன், நிலான், அனிஸ்ரன், வர்ஷா, நத்தாஷா, அஸ்வின், பிரவின், ஷரோன், தாமிரா ஆகியோரின் நேசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.03.2020) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து யாழ். அடைக்கலமாதா (OLR) ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதன் பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 31819)(11,17)

தகவல்:- **குடும்பத்தினர்(பிள்ளைகள்)**

**ஞானராஜா ( மகன் - பிரான்ஸ்) - 33651863546,**
**ஞானேந்திரன் (மகன்) - 021 222 9159, 077 277 5418 ( Mobile)**

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் உயர்திரு. வயிரமுத்து குலசிங்கம்

(ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் நாயகம், இலங்கை)

மலர்வு
15.03.1939


அமரத்துவம்
11.03.2009

அன்பின் பிறப்பிடமாய் உண்மையின் உறைவிடமாய்
எம்மை எல்லாம் பேணிக் காத்த உத்தமரே!
கடமையே உயிர் மூச்சாய் வாழ்ந்து வந்தீர்கள்
எங்கள் எல்லோருக்கும் விருட்சமாய் நின்று ஆதரித்தீர்கள்
இப்போது எங்குதான் ஓடி மறைந்தீர்கள் ஐயா,
உங்களை இழந்து தவிக்கும்

**Mrs.S.Kulasingam**
**London.**
**11.03.2020**

**அன்பு மனைவி,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**மைத்துனிமார், பெறாமக்கள்.**

பிறப்பு
23 . 12 . 1952



இறப்பு
03 . 03 . 2020

### கார்த்திகேசு சிவகுருநாதன்

கொழும்பைப் பிறப்பிடமாகவும், மல்லாகம் (Temple view), லண்டன் (Hounslow) ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சிவகுருநாதன் கடந்த 03.03.2020 அன்று இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்மணி கந்தையாவின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - கமலாம்பிகை தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்ற கனகசிங்கதின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் லீலாவதி தம்பதியரின் அன்புப் பெறாமகனும், காலஞ்சென்ற யோகரதியின் (யோகா) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முருகேசு யோகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், பகீரதி (ரதி), யோகலாகினி (லாகினி), அமிர்தகலா, Dr அமிர்தவேணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெகநாதன், ஜெயரட்ணம், காலஞ்சென்ற யோக சுந்தரம், காலஞ்சென்ற யோக சௌந்தரி மற்றும் யோகசம்பந்தர் (கனடா), காலஞ்சென்ற யோகராஜா மற்றும் யோகரஞ்சிதம், யோகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ராமன், வள்ளி, டக்ஷினி, கீர்த்திகா, ஜதுஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2020) முற்பகல் 10.00 மணிக்கு Oshwal Shakti Centre, Inwood Road, Hounslow, TW3 1UX இறுதிக் கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக பிற்பகல்13:00 South West Middlesex Crematorium, Hounslow road, TW13 5JH எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தொடர்புகளுக்கு:
**பகீரதி - + 447 939 251 054**
**லாகினி - + 447 982 427 358**

(cs 31792) (13.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 07 . 1942



மறைவு
09 . 03 . 2020

### சுப்பிரமணியம் நமசிவாயம்

பருத்தித்துறை மாதனையைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு புதிய செம்மணி வீதியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நமசிவாயம் 09.03.2020 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சுப்பிரமணியம் சுந்தரம் தம்பதிகளின் பாசமிகு மகனும், தவமணியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/ கோப்பாய் மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கல்வியங்காடு புதிய செம்மணி வீதி சிதம்பரப்பிள்ளை, கந்தையா சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, இராசமாணிக்கம், மாணிக்கவாசகர், நாகரத்தினம், சு.பாலகிட்டினன் மற்றும் சு.இராசேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் நவமணி, தங்கராஜா இராசமணி, நாகேந்திரம் மகேஸ்வரி, குமாரசாமி நேசமணி மற்றும் பூபாலராஜா ஞானமணி, மகேந்திரம் பூமணி, இரட்ணகோபால் ஜெயமணி ஆகியோரின் மைத்துனரும், பிரசாத், காண்டீபன் சோபிதா ஆகியோரின் சிறிய தந்தையும், சுந்தரதாஸ், சாவித்திரி, ஜெயமணி, ரகு ஆகியோரின் மாமனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2020) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/31821)(11,17)

தகவல்:- **குடும்பத்தினர்.**

**021 223 0370**

# பிறப்புக் குறைபாடுகளை தவிர்க்க முன்வருவோம்!



வைத்தியர் கோ.றஜீவ்
*தாய் சேய் நல வைத்திய அதிகாரி*
*பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்*
*பணிமனை, யாழ்ப்பாணம்.*


குடும்ப நல உத்தியோகத்தரை அல்லது வைத்தியரை கர்ப்பத்தின் முன் தவறாமல் பாருங்கள். ஒரு பெண் கர்ப்பத்தைத் திட்டமிடும்போது தனது சுகாதார உத்தியோகத் தரை பார்ப்பது முக்கியமானது. கர்ப்பகாலம் முழுவதும் மருத்து வரை குறித்த காலத்தில் தவறாமல் பார்ப்பது முக்கியம், நீங்கள் ஒரு குழந்தையைப் எதிர் பார்க்கிறீர்கள் அல்லது அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தால், கர்ப்பத்திற்கு முறையாக தயாராகத் தொடங்க வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 3ஆம் திகதி உலக பிறப்பு குறைபாடுகள் தினம் கடைப்பிடிக்கப்படு கின்றது. பல வகையான பிறப்பு குறைபாடுகள் உள் ளன, மேலும் அனைத்து பிறப்பு குறைபாடுகளுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் எங்கள் கூட்டுக் குரலை இந்த நாள் அங்கீகரிக்கிறது. முதல் உலக பிறப்பு குறைபாடு நாள் 2015ஆம் ஆண்டில் கடைப் பிடிக்கப்பட்டது.

பிறப்பு குறைபாடு என்பது குழந்தை பிறக்கும்போதே அதன் உடலில் இருக்கும் தொழிற்பாடு அல்லது கட்ட மைப்பு ரீதியான பின்னடைவான ஒரு நிலை. குழந்தை பிறந்த உடனேயே சில பிறப்பு குறைபாடுகளைக் காணலாம். உதாரணமாக பிளவடைந்த உதடுகள் அல்லது கூடுதல் கை அல்லது கால்விரல்கள், இதய குறைபாடுகள் அல்லது காது கேளாமை பேரன்றன. ஏனையவற்றைக் கண்டுபிடிக்க சிறப்புச் சோதனைகள் தேவைப்படலாம். சில பிறப்பு குறைபாடுகள் வாழ்க்கை யின் பிற்பகுதி வரை கவனிக்கப்படுவதில்லை.

**காரணிகள்**

பிறப்புக் குறைபாடுகள் பல்வேறுபட்ட காரணிகளால் ஏற்படுகின்றன. பெற்றோரிடமிருந்து குழந்தைகளுக்கு கடத்தப்படக்கூடிய மரபணுக்களால் சில பிறப்பு குறைபா டுகள் ஏற்படுகின்றன. நிறமூர்த்த மாற் றங்கள், கர்ப்ப காலத்தில் பயன்படுத் தப்படும் சில மருந்துகள், தொற்று நோய்கள் மற்றும் இரசாயனங்கள் ஆகியவற்றாலும் பிறப்பு குறைபாடு கள் ஏற்படுகின்றன. பல பிறப்பு குறை பாடுகளுக்கு காரணம் அறியப்பட வில்லை.



ஒவ்வொரு ஆண்டும், உலகளவில் சுமார் 36 வீதமான குழந்தைகளில் கடுமையான பிறப்பு குறைபாடுகள் ஏற்படுகின்றன. இதன் பொருள் ஸ்பைனா பைபிடா மற்றும் பிறவி இதய குறைபாடுகள் போன்ற நிலைக ளால் மில்லியன் கணக்கான குழந்தை கள் மற்றும் அவர்களின் குடும்பங்களைப் பாதிக்கின் றன. பிறப்பு குறைபாடுகள் குழந்தைகளை அவர்கள் பிறந்த இடம், அவர்களின் சமூக பொருளாதார நிலை, அல்லது அவர்களின் இனம் போன்றவற்றாலும் தீர் மானிக்கப்படுகின்றன. எல்லா பிறப்பு குறைபாடு களையும் தடுக்க முடியாது என்பதை நாம் அனைவ ரும் அறிந்திருக்க வேண்டும். ஆனால், பெண்கள் கர்ப்பமாக இருப்பதற்கு முன்பு சுகாதார நிலைமை களை நிர்வகிப்பதன் மூலமும் ஆரோக்கியமான நடத் தைகளைக் கடைப் பிடிப்பதன் மூலமும் பெண்கள் ஆரோக்கியமான குழந்தையைப் பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்க முடியும். கர்ப்பத்தின் முன் கூட்டிய திட்டமிடலும், தீங்கு விளைவிக்கும் பொருள்க ளைத் தவிர்க்கவும், ஆரோக்கியமான வாழ்க்கை முறையைத் தேர்வு செய்தலும், சுகாதார வழங்கு நர்களின் ஆலோசனைகளைப் பின்பற்றுவதும் இவற் றைக் குறைக்க உதவும்.

**மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் சில**

சில நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் உங்கள் ஆபத்தைக் குறைக்க முடியும்:

- கர்ப்பம் தரிப்பதற்கு முன் உங்கள் குடும்ப நல உத்தியோகத்தரை அல்லது மருத்துவரைச் சந்தி யுங்கள்.
- உங்கள் ஆபத்து காரணிகளை அறிந்து கொள் ளுங்கள்.
- கர்ப்பத்திற்கு முன்னும் பின்னும் தினசரி போலிக் அசிட் எடுத்துக் கொள்ளுங்கள்.
- ஆரோக்கியமான உடல் எடையை பேணுங்கள்.
- மருந்துகளைச் சரியான வைத்திய ஆலோசனை யில் பயன்படுத்துங்கள்.
- கர்ப்பத்திற்கு முன் மருத்துவ நிலைமைகளை கவனித்துக் கொள்ளுங்கள்.
- தொற்றுநோய்கள் பரவாமல் தடுப்பு முறைகளை பேணுங்கள்.
- அறியப்பட்ட தீங்கு விளைவிக்கும் பதார்த்தங் களைத் தவிர்க்கவும்.

கர்ப்பம் தரித்தலுக்கு 3 மாதங்கள் முதலே ஒவ்வொரு நாளும் ஒரு போலிக் அமில மாத்திரைகளை உட் கொள்ளுங்கள். போலிக் அமிலம் பி விற்றமின். ஒரு பெண்ணின் உடலில் போதுமான ஃபோலிக் அமிலம் குறைந்தது 3 மாதத்திற்கு முன்பும், கர்ப்ப காலத்திலும் இருந்தால், அது வளரும் மூளை மற்றும் முது கெலும் புகளின் பிறப்பு குறைபாடுகளைத் தடுக்க உதவும். குடும்ப நல உத்தியோகத்தரை அல்லது வைத்தியரை கர்ப்பத்தின் முன் தவறாமல் பாருங்கள். ஒரு பெண் கர்ப்பத்தைத் திட்டமிடும்போது தனது சுகாதார உத்தி யோகத்தரை பார்ப்பது முக்கியமானது. கர்ப்ப காலம் முழுவதும் மருத்துவரை குறித்த காலத்தில் தவறாமல் பார்ப்பது முக்கியம், நீங்கள் ஒரு குழந்தையைப் எதிர் பார்க்கிறீர்கள் அல்லது அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தால், கர்ப்பத்திற்கு முறையாக தயாராகத் தொடங்க வேண்டும்.

கர்ப்ப காலத்தில் எந்த நேரத்திலும் மதுவைத் தவிர்க் கவும், சிகரெட் பிடிப்பதைத் தவிர்க்கவும். கர்ப்பத்தின் போது மருந்துகளை மருத்துவ ஆலோசனையின்படி மாத்திரமே உட்கொள்ள வேண்டும்.

**நோய்களிடம் எச்சரிக்கையாக இருப்பது மிக அவசியமானது**

ரூபெல்லா (ஜெர்மன் சின்னமுத்து) ஒரு வைரஸ் தொற்று ஆகும். கர்ப்ப காலத்தில் ருபெல்லா இருப்ப தால் கருச்சிதைவு ஏற்படலாம் அல்லது காது கேளாமை, அறிவுசார் இயலாமை, இதய குறைபாடுகள் மற்றும் குருட்டுத்தன்மை ஏற்படலாம்.

டோக்ஸோபிளாஸ்மோசிஸ் என்பது மண்ணில் வாழும் ஒட்டுண்ணியால் ஏற்படும் நோய். சமைக்கப்படாத இறைச்சி அல்லது கழுவப்படாத காய்கறிகளைச் சாப் பிடுவதன் மூலமோ அல்லது விலங்கு களின் மலத்துடன் தொடர்பு கொள் தொற்றுநோயாக மாறலாம். நீங்கள் கர்ப்பமாக இருக்கும்போது முதல்மு றை யாக நோய்த்தொற்று ஏற்பட்டால், இந்த நோய் உங்கள் குழந்தைக்குச் செல்லலாம்.

பாலியல் ரீதியாக பரவும் நோய்த் தொற்றுகள் (எஸ்.டி.ஐ) கடுமையான பிறப்பு குறைபாடுகளை ஏற்படுத்தும். பாலியல் ரீதியாக பரவும் நோய்த் தொற்றுக்கு சிகிச்சைய ளிப்பது நீங் கள் கருவுக்கு தீங்கு விளைவிப்பதைத் தடுக்கலாம் அல்லது குறைக்கலாம். ஷிகா வைரஸ் தென் அமெரிக்கா, மத்திய அமெரிக்கா மற்றும் வட அமெ ரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கர்ப்ப காலத்தில் வைரஸால் தொற்றுநோயானது மைக்ரோசெபாலி (ஒரு குழந்தையின் தலை மற்றும் மூளை இயல்பை விட சிறியதாக இருக்கும் பிறப்பு குறைபாடு) மற்றும் பிற மூளை அசாதாரணங்கள் உள்ளிட்ட கடுமையான பிறப்பு குறைபாடுகளை ஏற்ப டுத்தும்.

**ஆரோக்கியமான வாழ்க்கை முறையைத் தேர்வுசெய்க**

நீரிழிவு நோயைக் கட்டுக்குள் வைத்திருங்கள். கர்ப்ப காலத்தில் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவது பிறப்பு குறைபாடுகள் மற்றும் கர்ப்பத்திற்கான பிற பிரச்சினைகளுக்கான வாய்ப்புகளை அதிகரிக்கிறது. இது பெண்ணுக்கு கடுமையான சிக்கல்களையும் ஏற் படுத்தும். கர்ப்பத்திற்கு முன்னும் பின்னும் சரியான சுகாதாரப் பாதுகாப்பு பிறப்பு குறைபாடுகள் மற்றும் பிற மோசமான விளைவுகளைத் தடுக்க உதவும்.

கர்ப்பம் ஓர் உற்சாகமான நேரம், ஆனால் இது மன அழுத்தத்தையும் ஏற்படுத்தும். கர்ப்பத்திற்குத் தயா ராக, கர்ப்ப காலத்தில் ஆரோக்கியமாக இருக்க, உங் கள் குழந்தைக்கு வாழ்க்கையில் ஆரோக்கியமான தொடக்கத்தைத் தருவதற்கு உங்களால் முடிந்த அனைத்தையும் செய்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத் திக் கொள்வது மன அமைதியைப் பெற உதவும்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இதுவுமொரு அரசியல் ஆதாயக் கொலையா?

நீர்கொழும்பு பெரியமுல்லவில் நேற்றுமுன்தினம் கூரிய ஆயுதத்தால் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். மதுபோதையில் வந்த குழுவொன்றே இந்தத் தாக்குதலை மேற்கொண்டது என்று கூறப்ப டுகின்றபோதும் இந்தச் சம்பவத்தால் சில சந்தேகங்கள் எழுவதையும் தவிர்க்க முடியாதுள்ளது.

பெரும்பான்மையினக் குழுவினரால் பிறிதொரு இனத்தைச் சேர்ந்தவர்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் இனங்களிடையே முறுகலை ஏற்படுத்தும் முயற்சியா என்ற கோணத்திலும் ஆராய வேண்டியுள்ளது. ஏனெனில் இது போன்ற சம்பவங்கள் மூலம் முன்னர் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள் அரங்கேற்றப்பட்டிருந்தன.

விடுதி ஒன்றில் இரவு அத்துமீறி நுழைந்த 6 பேர் பலவந்தமாக மதுபானம் அருந்த முயற்சித்தபோது விடுதி ஊழியர்கள் தடுத்தனர், அப்போது விடுதியின் ஊழியர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

பௌர்ணமி தினமாக அன்று மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்பட்டிருந்த நிலையில் விடுதிகளில் மதுபானம் அருந்தத் தடை செய்யப்பட்டிருந்த நிலையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இந்த வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் எந்தவித அச்சமும் இன்றி பகிரங்கமாக விடுதி ஒன்றில் மதுபானம் அருந்த அனுமதிக்குமாறு தர்க்கப்பட்டுள்ளனர். விடுதியின் ஊழியர்கள் மறுத்தபோது கூரிய ஆயுதங்களைக் கொண்டு விடுதி ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் என்கிறது பொலிஸ் தரப்பு.

இந்தச் சம்பவம் ஏதேச்சையாக நடந்தது என்று கூறப்பட்டாலும் அந்தக் குழுவினர் தாக்குதலுக்குரிய ஆயத்தங்களுடனே அங்கு வந்துள்ளனர் என்பதை அங்கு நடைபெற்ற சம்பவங்கள் புடம்போட்டுக் காட்டுகின்றன. இது தற்போது தேர்தல் ஒன்று நடக்கவுள்ள நிலையில் இனங்களுக்கிடையே முறுகலை ஏற்படுத்தி அதில் ஆதாயம் தேட எடுக்கப்பட்ட முயற்சியா என்று எண்ண வைக்கின்றது.

கடந்த காலங்களிலும் சிறுபான்மை மக்கள் மீது இவ்வாறான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. புலிகள் என பெரும்பான்மை இன மக்களை அச்சப்படுத்தி தமிழ் மக்கள் மீது அடக்குமுறைகளை ஏவிய தெற்குத் தலைமைகள், மற்றொரு சிறுபான்மை இனமான முஸ்லிம் மக்கள் மீதும் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டிருந்தன. அவற்றின் மூலம் பெரும்பான்மையின மக்கள் மத்தியில் தங்களைக் கதாநாயகர்களாகக் காட்டிக் கொண்டு ஆதாயம் தேடிக் கொண்டன.

தேர்தல் ஒன்று நெருங்கும் நிலையில் வடக்கில் முன்னாள் போராளிகளைத் தொடர்புபடுத்திக் கைதுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமிழ் அரசியல்வாதி ஒருவரைக் கொலை செய்ய முயற்சிக்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டிலேயே இந்தக் கைதுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புக் கெடுபிடிகளை அதிகரித்து தமிழ் மக்களை அடக்கும் செயற்பாட்டின் முதற்கட்ட நடவடிக்கை இதுவா என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. புலிகள் மீளுருவாக்கம் என்ற பூச்சாண்டியைக் காட்டிக் கடந்த காலங்களில் அரங்கேற்றப்பட்ட சம்பவங்கள் அவ்வாறானவையே.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் அடிப்படைவாதம் என்ற விம்பத்தை முன்னிறுத்திய கோத்தாபய ராஜபக்ச பெரும்பான்மையின மக்களின் ஆதரவுடன் ஜனாதிபதியாகத் தெரிவாகியிருந்தார். அதன்பின்னரும் ராஜபக்ச தரப்பு முஸ்லிம் அடிப்படை வாதம் என்ற கோசத்தை பெரும்பான்மை இன மக்களின் மத்தியில் முன்னிறுத்தி வருகின்றது. தங்களது அமைச்சரவையில் முஸ்லிம் ஒருவருக்கு இடமளிக்காது தனது இனவாதப் போக்கைக் காண்பித்திருந்தது.

இனவாதத்தையும், மதவாதத்தையும் விதைத்துத் தங்கள் அரசியல் நோக்கங்களைக் கடந்த காலங்களில் நிறைவேற்றிக் கொண்ட அரசியல் தலைமைகள், தற்போது நடக்கவுள்ள பொதுத் தேர்தலிலும் அதைப் பயன்படுத்தப் பின்னிற்க மாட்டார்கள். பெரியமுல்லவில் நடந்த சம்பவத்தில் ஒரு தரப்பினர் நிதானித்துச் செயற்பட்டமை பாராட்டுக்குரியது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் கடந்த காலப் பட்டறிவுகளைக் கொண்டு மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டியது அவசியமாகின்றது.

# நாய்களைப் போன்று எம்மைத் தாக்குகின்றனர்

## வேதனைப்படுகிறார் தயாசிறி



**கொழும்பு, மார்ச் 11**

**அரச தலைவர்களால் சுதந்திரக் கட்சியினர் மிருகங்களைப் போல தாக்கப்படுகின்றனர் என்று, கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.**

பொத்துஹெரவில் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'எங்கள் சொந்த அணிகளுக்குள் அச்சுறுத்தல்கள் இருந்தபோதிலும், ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் கோத்தாபய ராஜபக்ஷவுடன் உறுதியாக நின்றிருந்தோம். ஆனால், இப்போது அரசின் தலைவர்களால் நாங்கள் மிருகங்களைப் போல தாக்கப்படுகிறோம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பிற இடதுசாரிக் கட்சிகளுடன் பொதுமக்கள் முன்னணி கூட்டணி வைத்திருந்ததால் தான், ஜனாதிபதித் தேர்தலில், கோத்தாபய ராஜபக்ஷ 6.9 மில்லியன் வாக்குகளைப் பெற்றார் என்பதை நன்றி இல்லாத சிலர் மறந்து விட்டனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் வேறுபட்ட கருத்துக்கள் இருந்தன. சிலர் கை சின்னத்தின்கீழ் போட்டியிடப் பரிந்துரைத்தனர், மற்றவர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் வேரூன்றியிருந்தனர். அந்த வழிகளில் நாங்கள் ஒரு முடிவை எடுத்திருந்தால், கோத்தாபய ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டிருப்பார். ஆனால், நாங்கள் அவருக்கு ஆதரவாக நின்றோம். சிலர் இந்த உண்மையை மறந்து நாய்களின் நிலைக்கு எம்மை இழிவுபடுத்தியுள்ளனர். பொது எதிரியான ஐக்கிய தேசியக் கட்சியைத் தாக்குவதற்குப் பதிலாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேன மீது அரச தலைவர்கள் தாக்குகிறார்கள்.

அவர்கள் சுதந்திரக் கட்சியை அழிக்கும் பரப்புரையைத் தொடங்கியுள்ளனர். இது எளிதாக இருக்காது. சுதந்திரக் கட்சி இல்லாமல், பொது மக்கள் முன்னணி இருக்காது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மக்களிடமிருந்து மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைக் கோரிக் கொண்டு, ஆட்சிக்கு வர ஆதரவு அளித்த சுதந்திரக் கட்சி மற்றும் மைத்திரிபால சிறிசேனவைத் தாக்குகிறார்கள். மைத்திரிபால சிறிசேனவுடன் தொடர்பு வைத்திருக்கும் எவருக்கும் வாக்களிக்க வேண்டாம் என்று அவர்கள் மக்களிடம் கேட்கிறார்கள், என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

## சுதந்திரம், உரிமை வேண்டி பெண்ணொருவர் நாடு சுற்றிப்பயணம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, பெண்களின் சுதந்திரம் மற்றும் உரிமையை வலியுறுத்தி கொழும்பைச் சேர்ந்த பெண் ஒருவர், இலங்கையின் அனைத்து மாவட்டங்களுக்கும் தனியாக மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார்.



கொழும்பைச்சேர்ந்த ரோமா ஹோலன் வோல்டன் நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார். இவர் கடந்த 8 ஆம் திகதி கொழும்பில் இருந்து பயணத்தை ஆரம்பித்தார்.

யாழ்ப்பாணம் நாவற்குழியில் வரவேற்கும் வளைவில், சிறுவர், பெண் பொலிஸ் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி அவரை மாலையிட்டு வரவேற்றார். (க-111)

## தேவாலயங்களுக்கு கொழும்பில் பாதுகாப்பு

கொழும்பு, மார்ச் 11

கல்கிசை தொடக்கம் நீர்கொழும்பு வரையான கரையோரப் பிரதேசங்களில் உள்ள கிறிஸ்தவ தேவாலயப் பகுதிகளில் சிறப்பு பாதுகாப்புத் திட்டத்தைப் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படை நடைமுறைப்படுத்தவுள்ளது.

கல்கிசை தொடக்கம் நீர்கொழும்பு வரையான கரையோரப் பகுதிகளில் உள்ள தேவாலயங்களில், வழிபாட்டு நேரங்களில் இந்த சிறப்புப் பாதுகாப்புத் திட்டம் நடை முறைப் படு த்தப்படும். தேவாலயங்கள் மற்றும் தேவாலயப் பகுதிகளில் பாது காப்பை உறுதிப்படுத்தும் பணிக்காக, சிறப்பு அதிரடிப்ப டையின் உந்துருளி அணியொன்றும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் நடமாடும் சந்தேக நபர்களை உந்துருளி அணியைச் சேர்ந்த சிறப்பு அதிரடிப்படையினர் சோதனைக்கு உட்படுத்துவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## டெங்கு வாரம் ஒத்திவைப்பு

நாடளாவிய ரீதியில் இன்று புதன்கிழமை தொடக்கம் நடைபெறவிருந்த டெங்கு வாரம் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

இதனை மத்திய சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டு அலகினர் அனைத்து திணைக்களத் தலைவர்களுக்கும் நேற்று அறிவித்துள்ளனர்.

நாட்டில் பரவி வரும் டெங்கைக் கட்டுப்படுத்தும் செயற்பாடாக சுகாதாரத் திணைக்களம், பொலி ஸார், படையினர், பிரதேச உள்ளூராட்சி சபையினர், பிரதேச செயலகம் ஆகியவை இணைந்து இன்று தொடக்கம் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை டெங்கு வாரத்தைக் கடைப்பிடிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மறுஅறிவித்தல் வரை டெங்கு வாரம் கடைப்பிடிக்கும் திட்டத்தை நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ -9)

## தீக்காயங்களுடன் பெண்ணின் சடலம்

கொழும்பு, மார்ச் 11

சிலாபம் - முன்னேஸ்வரம் பகுதியில்தீக்காயங்களுடன்பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தமக்குக் கிடைத்த தகவலுக்கமைய சடலம் மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 78 வயதான பெண்ணொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் சிலாபம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-22)



# பாரவூர்திகளை வழி மறித்து வடமராட்சியில் போராட்டம்

## பொலிஸார் சமரச முயற்சி

**வடமராட்சி,மார்ச் 11**

**வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்துக்கு உட்பட்ட பாரவூர்திகள் மற்றும் கன்ரர் வாகனங்களுக்கு பாரவூர்திச் சங்கம் அனுமதி வழங்க முடியாது என்று தெரிவித்ததை அடுத்து, பிரதேச மக்கள் பாரவூர்திகளை வழி மறித்து 4 மணி நேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பருத்தித்துறைப் பொலிஸார் இரு தரப்புடனும் சமரசத்தில் ஈடுபட்டனர். "இன்று உழவு இயந்திரங்களால் பாரவூர்திகளுக்கு ஏற்றிச் செல்வதற்காக பறிக்கப்பட்ட மணலை மட்டும் ஏற்றிச் செல்வதற்கு அனுமதிக்கவும். வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்துக்குட்பட்ட கன்ரர்கள் மற்றும் பாரவூர்திகளுக்கு அனுமதி பெற்றுக் கொள்வது தொடர்பாக வடமராட்சிக் கிழக்குப் பிரதேச செயலாளர் தலைமையில் முடிவை எட்டிய பின்னர் மணல் அகழ்வு , ஏற்றிச் செல்லல் தொடர்பில் பரிசீலிக்கலாம்" எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

வடமராட்சிக் கிழக்குப் பகுதிகளில் மணல் அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போது, பிரதேசத்தின் கன்ரர் மற்றும் பாரவூர்திகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் அனுமதி வழங்குவது என்ற உடன்பாட்டின் அடிப்படையில் கிராம மக்களால் அனுமதி வழங்கப்பட்டு, மணல் அகழ்வு, மற்றும் விநியோகப் பணிகள் இடம்பெற்று வந்தன.

புதிதாக கன்ரர் மற்றும் ஊர்திகளை பிரதேச மக்கள் கொள்வனவு செய்து பிரதேச செயலாளரின் அனுமதியுடன், பாரவூர்தி உரிமையாளர் சங்கத்தில் பதிவு செய்வதற்குச் சென்றபோது, அந்தக் கடிதத்தைத் தம்மால் ஏற்று பதிவு செய்ய முடியாது என்று பாரவூர்தி உரிமையாளர்கள் சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார். இதனை அடுத்தே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காலை 6 மணியிலிருந்து பாரவூர்திகளை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். பாரவூர்திச் சங்கச் செயலாளரை மக்கள் பொலிஸாருடன் சென்று சந்தித்தனர். அவர் மாவட்டச் செயலகத்தால் புதிய வாகனங்கள் எதையும் பதிவு செய்ய வேண்டாம் என்று கடிதம் ஒன்று தமக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவித்தார். வடமராட்சிக் கிழக்கு குடத்தனைப் பகுதி வாகனம் ஒன்றுக்கு அண்மையில் அனுமதி எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது என்று அங்கிருந்தவர்களால் கேட்கப்பட்டது. அது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சிபாரிசின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வடமராட்சிக் கிழக்குப் பிரதேச செயலரிடம் இது தொடர்பில் கேட்ட போது, குறித்த விடய அதிகாரி பிற பணி ஒன்றின் காரணமாக வெளியே சென்றுள்ளார். இதனால் இது தொடர்பில் என்னால் பதில் கூற முடியாது என்று பதிலளித்தார்.

மாவட்டச் செயலாளரால் கடந்த வருடம் 11 ஆம் மாதமே கடிதம் வடமராட்சிக் கிழக்குப் பிரதேச செயலகத்துக்கு அனுப்பப்பட்டதாகக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கு பின்னர் வாகனங்களைப் பதிவு செய்ய அவரால் இம்மாதம் எவ்வாறு சிபாரிசு கடிதம் வழங்க முடியும் என்று பிரதேச மக்கள் கேள்வி எழுப்பினர்.

(க-160)

# பௌத்த பிக்குகளுக்கு அரசியல் வேண்டாம்!


## மகாநாயக்க தேரர்கள் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 11

பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுகின்றமையால் நாடு எந்தப் பயனையும் அடையாது என இலங்கையின் முக்கிய பௌத்த பீடங்களான மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பிக்குகள் அரசியலில் ஈடுபடுகின்றமை புத்த சாசன, மதம், தர்மம் மற்றும் பௌத்த பரம்பரையின் பெரும் சரிவுக்கு வழிஏற்படுத்தியுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ள்னர். 'மார்ச் 12' அமைப்பின் பிரதிநிதிகள் திருத்தப்பட்ட மார்ச் 12 அறிக்கையை மகாநாயக்கர்களுக்குக் கையளித்தபோதே, அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். (ம)

# சிறப்புக் கொடுப்பனவு வழங்குமாறு கோரிக்கை



யாழ்ப்பாணம்,மார்ச் 11

எரிபொருள் விற்பனை நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்குச் சிறப்பு கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடக்குப் பிராந்திய நிறைவேற்று அதிகாரி ஆர்.ஜெயபாலன் கோரிக்கை விடுத்தார்.

ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தின் திறப்பு விழா நிகழ்வில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் தனியார் எரிபொருள் விற்பனை நிலையங்களில் பணியாளர்களுக்குக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

ஆனால் கூட்டுறவுச் சங்கங்களின் எரிபொருள் விற்பனை நிலையங்களில் அவ்வாறான நடைமுறை இல்லை. பணியாளர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரித்து எரிபொருள் விற்பனை நிலையங்களில் வியாபார நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளால் விற்பனை நிலையங்களும் வளர்ச்சியடையும்.

எரிபொருள் விற்பனை நிலையங்களில் பணியாற்றுவது மிகவும் கஷ்டமானது. அவர்களுக்குச் சிறப்புக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொடுக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தற்போது கூட்டுறவுச் சங்கத்தின் துரிதமான முயற்சியால் இந்த எரிபொருள் நிரப்பும் நிலையம் திறந்து வைக்கப்பட்டது. இதன் ஊடாக தீவுப் பகுதி மக்கள் எதிர்காலத்தில் பெரிதும் நன்மை அடைவர். வடக்கு மாகாணத்தில் உள்ள அநேகமான எரிபொருள் விற்பனை நிலையங்கள் எமது பிராந்திய முகாமையாளரின் பெரும் முயற்சியால் அபிவிருத்தி செய்யப்பட்டும் வருகின்றன. எரிபொருள் நிரப்பும் நிலையங்களை அபிவிருத்தி செய்வதன் ஊடாக நுகர்வோர் அதன் மூலம் நன்மை பெறுவர். - என்றார்.

நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்ததாவது:

ஒரு பிரதேசத்தில் எரிபொருள் விற்பனை நிலையங்கள் இருப்பதன் ஊடாகவே அப்பிரதேசம் முன்னேற்றமடையும். அவ்வாறு ஊர்காவற்றுறையில் திறந்து வைக்கப்பட்ட இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக இப்பிரதேசம் அதிக நன்மையடையும். பிரதேசங்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இருப்பதன் மூலம் அப்பிரதேசத்தில் பொருளாதாரமும் வளர்ச்சியடையும். - என்றார். (க-17)

# பெருந்திருவிழாவும் வசந்த விழாவும்

யாழ்ப்பாணம், மார்ச் 11

வண்ணார்பண்ணை வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவும் வண்ணையின் வசந்த விழாவும் எதிர்வரும் 28, 29, 30 ஆகிய தினங்களில் நடைபெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகும். மாலை 4.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், மாலை 5 மணிக்கு அம்பாள் வெள்ளி இரதத்தில் ஆரோகணமாகி கிராமப் பிரவேசம் புறப்படல் இடம்பெறும். எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிராயச்சித்த அபிசேகம் நடைபெறும். எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை மஹா குளிர்த்திப் பொங்கல் நடைபெறும். மாலை 5 மணி தொடக்கம் வலுந்துப்பானை ஏற்றப்பட்டு 108 பானைகளில் பொங்கலிடப்படும். (க)



# கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு

கொடிகாமம், மார்ச் 11

கவிஞர் ந.ப. கங்காவின் 'விதை' கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நதியோர நாணல்கள் இலக்கிய மன்றத் தலைவர் வ.ஜசிந்தன் தலைமையில் இடம்பெற்றது.


இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ம.இரகுநாதன், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் தி.கார்த்திகேயன், தென்மராட்சிப் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அன்பரசி அருட்செல்வன், மூத்த கலைஞர் கலைமாமணி வ.ஏழுமலைப்பிள்ளை, ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியர் செல்வி நா.ரஞ்சினிதேவி, கலை ஆர்வலர்கள், இலக்கியப் படைப்பாளிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ந-159)

# ஊழல் மோசடி செய்தோர் தேர்தலுக்கு முன்னர் கைது

## தினேஷ் குணவர்த்தன திட்டவட்டம்

கொழும்பு, மார்ச் 11

**மத்திய வங்கி பிணைமுறிகளில் மிகப் பெரிய ஊழல் மோசடிகளைச் செய்தவர்கள் தற்போது தலைமறைவாகி வாழ்கின்றனர். எனினும்பொதுத் தேர்தலுக்கு முன்னர் முக்கியமான சிலர் கைதாவார்கள்.**



இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த ஐந்தாண்டு காலத்தில் அரசு மிகப் பெரிய குற்றச்செயல்களை முன்னெடுத்துள்ளது. அதில் மத்திய வங்கி பிணைமுறி ஊழல் என்பது மிகப்பெரிய குற்றச்செயலாகும். இந்த குற்றத்துடன் தொடர்புபட்ட எவரையும் எமது அரசு விட்டு வைக்காது. இப்போது ஒரு சிலர் மீதான பிடியாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. சிலர் தலைமறைவாகியுள்ளனர். இவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள். அதேபோல் முக்கிய குற்றவாளிகள் சிலர் தேர்தலுக்கு முன்னர் கைதாவார்கள்.

நாட்டை விட்டு வெளியேறியுள்ள சிலர் மீதான தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அர்ஜுன் மகேந்திரன் உள்ளிட்ட சிலர் கைது செய்யப்பட வேண்டும் என்பதில் அரசு தீவிர முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. எமது முயற்சிகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றதே தவிர எவரையும் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கம் எமக்கு இல்லை.- என்றார். (எ)

# நாம் ஏற்படுத்திய அரசு எம்மை விமர்சிக்கிறது

## பியதாஸ கவலை

கொழும்பு, மார்ச் 11



எங்களால் எதிர்பார்ப்புடன் ஏற்படுத்தப்பட்ட அரசு தற்போது நாங்களே வெறுப்படையும் வகையில் எங்களை விமர்சிக்கின்றது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

கண்டியில் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கட்சியில் உறுப்பினர்களுக்கு அரச பொறுப்புக்கள் பெற்றுக்கொடுக்கும்போது, இடமாற்றம் வழங்கும் போது பிரச்சினைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று மாகாண சபையில் சேவையில் இருந்தவர்கள் தற்போது அதிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு விலக்கப்பட்டவர்களுக்குப் பதிலாக அனுபவமற்றவர்களே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எமது தரப்பினர் தொடர்ச்சியாக விமர்சிக்கப்படுவதன் காரணமாக கட்சி ஆதரவாளர்களிடேயே பெரும் சிக்கல்கள் தோன்றியுள்ளன. இந்த விடயங்கள் தொடர்பாக வெளிப்படையாகக் கலந்துரையாட வேண்டும்.

எமது கட்சியுடன் தொடர்புடையவர்களுக்கு வாக்களிக்கக் கூடாதெனக் கூறப்படுகின்றது. எமது கட்சியை விமர்சிப்பதையே பெரும்பாலான அமைச்சர்கள் முதன்மையான விடயங்களாகக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் நாட்டில் முக்கிய பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்துவது கிடையாது.

எங்களால் எதிர்பார்ப்புடன் ஏற்படுத்தப்பட்ட அரசு தற்போது எங்களுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது. - என்றார். (எ)



கைதடி உதவும் கரங்கள் அமைப்பால் ஜே/290 கிராம அலுவலர் பிரிவில் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பம் ஒன்றுக்கு மலசலகூடம் அமைப்பதற்கு தேவையான பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஜ-159)

# பிணை முறி மோசடியின் சூத்திரதாரி கைதாவார்!

## கப்ரால் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 11

மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய முக்கிய தரப்பினரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க உட்பட 10 பேரைக் கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில் இந்த மோசடியின் முக்கிய சூத்திரதாரி கைது செய்யப்படுவார். இவ்வாறு முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 மற்றும் 31 ஆம் திகதிகளில் இடம்பெற்ற பிணைமுறி வழங்கலின்போது மோசடிகள் இடம்பெற்றுள்ளன எனப் பலதரப்பட்ட விசாரணை மற்றும் குழு அறிக்கைகளின் ஊடாக அறிந்து கொள்ள முடிந்துள்ளது.

அந்தச் சந்தர்ப்பத்தில் நிதியமைச்சராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க பதவி வகித்தார். அர்ஜுன அலோசியஸுடன் கொண்டிருந்த தொடர்பு, மத்திய வங்கியின் ஆளுநராக சிங்கப்பூர் நாட்டவர் நியமிக்கப்பட்டமை ஆகிய விடயங்கள் அனைத்தும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டுள்ளன.

பிணைமுறி மோசடி தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு உட்பட பலதரப்பட்ட குழுக்களால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசு பிரதான தடையாகச் செயற்பட்டது. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பான விசாரணைகளுக்கு தடைகளை ஏற்படுத்தினார் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பகிரங்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசு ஆட்சியமைத்து 3 மாத காலத்திற்குள் தற்போதே பிணைமுறி விவகாரத்திற்கு முதற் கட்ட சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க உட்பட 10 பேரைக் கைது செய்யுமாறு நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதில் எவ்வித அரசியல் நோக்கமும் கிடையாது.- என்றார். (எ)




# 94 வயதான மூதாட்டிக்கு வவுனியாவில் கௌரவிப்பு

வவுனியா, மார்ச்.11

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வவுனியா ஓமந்தை இளமருதங்குளத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது திருநாவற்குளத்தில் வசித்து வருபவருமான 94 வயதுடைய சுப்பர் பாக்கியம் கௌரவிக்கப்பட்டார். வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பினால் அவருக்கு கௌரவிப்பு வழங்கப்பட்டது.

தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ்.சந்திரகுமார், மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீனிவாசன், வைரவபுளியங்குளம் கிராம சேவையாளர், சமூக சேவையாளர்கள், கிராம மட்ட அமைப்பினர் இணைந்து கௌரவிப்பை வழங்கினர். (க-110)





# குருதிக்கொடை நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 11

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சமூக சிற்பிகள் நிறுவனத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு அருகாமையில் உள்ள றிம்மர் மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளிட்ட பலர் பங்குபற்றி குருதிக் கொடை வழங்கினர். (ஜ-105)


### வெளிநாடுகளில் இருந்து

# நாடு திரும்பியவர்கள் வீடுகளிலே இருங்கள்!

## சுகாதாரத்துறையினர் அறிவுறுத்தல்

கொழும்பு, மார்ச் 11

**வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்கு மீளத் திரும்பியவர்கள் 14 நாள்களுக்கு வெளியே செல்வதைத் தவிர்த்து வீடுகளிலேயே தங்கியிருக்க வேண்டும் என சுகாதாரத் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.**



கொரோனா வைரஸ் தாக்கம் குறித்து விளக்கமளிப்பதற்காக கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடக சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்கஇவ்வாறுதெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது: தனி நபராகவோ அல்லது குழுக்களாகவோ வெளிநாடுகளுக்கு மேற்கொள்ளும் பயணங்களை மக்கள் குறைத்துக்கொள்ள வேண்டும். தென்கொரியா, இத்தாலி மற்றும் ஈரான் முதலான நாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் விமானப் பயணிகளை இறுக்கமாகக் கண்காணிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது - என்றார். (ம)

# நிதியை திருப்பி அனுப்பவில்லை

## கூறுகிறார் முன்னாள் மாவட்டச் செயலர்



யாழ்ப்பாணம், மார்ச் 11

வடக்கு மாகாண சபை இயங்கிய காலத்தில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு கிடைத்த நிதி அனுமதிக்கும் மேலாக பணியாற்றினோம். தவிர கிடைத்த நிதி அனுமதிக்கு குறைவாக எந்த ஆண்டும் பணி செய்யவில்லை. இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபைக்குக் கிடைத்த எந்தவொரு நிதியும் திரும்பாமல் கொழும்பு அரசின் நிரல் அமைச்சுக்கள் ஊடான ஒதுக்கீட்டு நிதியே திருப்பி அனுப்பப்பட்டதாக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் முன்வைத்த குற்றச்சாட்டுத் தொடர்பில் கேட்ட போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைக்குரிய நிதி மாகாண சபையைச் சார்ந்த விடயம். ஆனால் கொழும்பு அரசின் ஊடாக மேற்கொள்ளும் திட்டங்களை நாம் மேற்கொண்ட சமயம் எந்தவொரு திட்டமோ அல்லது ஒதுக்கீடோ நாம் பயன்படுத்தாமல் விட்டதே கிடையாது. அவ்வாறு எவர் தெரிவித்தாலும் அது தவறான கூற்று.

ஏனெனில் எமக்குக் கிடைத்த அனுமதி மட்டுமன்றி வாய்மொழி மூலம் கூறிய கூற்றின் நிதியைக் கூட சிரமத்தின் மத்தியில் பெற்று பணியாற்றினோம். அதனால் ஒதுக்கப்பட்ட நிதிக்கும் மேலதிகமாக பணியாற்றி அந்த நிதியையும் பெற்று வழங்கிய வரலாறே உண்டு. இருப்பினும் மாகாண சபையின் இறுதிக் காலத்தில் மத்திய அமைச்சர்கள் மாகாண சபைக்கு உட்பட்ட விடயங்களுக்கு மாவட்டச் செயலகம் ஊடாக நிதியை ஒதுக்கிய சமயம் அதற்கான நிதியை எம்மிடம் ஒப்படைத்தால் மட்டுமே நடைமுறைப்படுத்த அனுமதிக்கப்படும் அல்லது அதற்கான செலவு மதிப்பீடோ அல்லது ஒப்புதலோ தர முடியாது என மாகாண சபை தடுத்தமையால் நிதி கிடைக்காமல் போன சந்தர்ப்பம் உண்டு - என்றார். (ஒ.5.105)

# சஹ்ரானுக்கு நிதி வழங்கிய 7 பேரைத் தேடி வலை வீச்சு!

கொழும்பு, மார்ச் 11

உயிர்த்த ஞாயிறுத் தற்கொலைத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹாஷிமுக்கும், அவரது தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புக்கும் நிதி உதவி அளித்த முக்கிய 7 நபர்கள் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

விசாரணைகளில் இதுவரை வெளிப்படுத்தப்பட்ட விடயங்களைக் கொண்டு இந்தச் சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணி ஒருவர், பொறியியலாளர் ஒருவர், இரு வைத்தியர்கள், இரு வாகன விற்பனையாளர்கள் இந்த 7 பேரில் உள்ளடங்குகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது. இந்த 7 பேரும் நாட்டிலிருந்து வெளியேறி வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ளனர் என்று சந்தேகிக்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், அவர்களில் சிலர் ஆஸ்திரேலியா, துருக்கி மற்றும் அமெரிக்காவில் இருக்கின்றமை தொடர்பாக தகவல் கிடைத்துள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.

அதனால் இன்டர்போல் மற்றும் சர்வதேச உளவுத் துறைகளின் உதவியோடு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பட்டதாரிகளுக்கான பயிற்சி மே மாதம்

கொழும்பு, மார்ச் 11

புதிதாக அரச சேவைகளுக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கான பயிற்சி வேலைத்திட்டம் எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதி ஆரம்பமாவுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைய இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலர் சிறிபால ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அத்தோடு, தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளின் பெயர் விவரம் என்பன இன்று புதன்கிழமை இணையதளத்தில் வெளியிடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பட்டதாரிகள் அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள் என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவித்திருந்தார். அதன்படியே பட்டதாரிகள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)


# உள்ளேயா, வெளியேயா?




தவக்காலம் எமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. நம்மை நாமே நிதானித்து அறிந்தால் ஆண்டவர் இயேசுவின் வருகையின் போது கிறிஸ்துவோடு காணப்படும் கூட்டத்தில் இருப்போமா? அல்லது கைவிடப்பட்டோர்களோடு தவிப்போமா? என்று எம்மை நாமே கேட்டுக்கொள்ளலாம். நோவாவின் பேழைக்குள் இருந்தவர்கள் அன்று பாதுகாக்கப்பட்டார்கள். வெளியே நின்றவர்களே தண்ணீரினாலே அழிந்தார்கள். நீ கிறிஸ்துவாகிய அடைக்கலத்தின் பேழைக்குள் இருக்கிறாயா அல்லது உலகின் அழிவுப் பாதையில் நின்று கொண்டிருக்கிறாயா? (ஆதி 7.16) பாஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் தோய்க்கப்பட்ட வீடுகளுக்குள் இருந்தவர்கள் அன்றுதப்பினார்கள். வெளியே இருந்தவர்கள் சங்கார தூதனால் அழிவுக்கு உள்ளானார்கள். குடி, வெறி, காமம், போதைப் பொருள் அரசியல் பழிவாங்கல் பதவியாசை என்று வெளியே நின்று கொண்டிருக்கிறாயா? அல்லது ஆண்டவனின் கட்டளையின்படி செயற்பட்டுக் கொண்டிருக்கிறாயா? என்று எம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். கிறிஸ்து நமது பாவங்களுக்காகப் பலியானார் எனவே நாம் கிறிஸ்துவின் அன்புக்குள்ளே வாழ்வோம். அப்போதுதான் கற்பாறையின் மேல் அடித்தளம் அமைத்துக் கட்டிய வீடாக எமது வாழ்வு அமையும் (சங் 103.02).

அ.றெக்ஸ்,ஈச்சமோட்டை

# சர்வதேச மகளிர் தின விளையாட்டு நிகழ்வு



கொடிகாமம்,மார்ச்.11

கைதடி நாவற்குழி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் சர்வதேச மகளிர் தின விளையாட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கடற்கரை மைதானத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் திருமதி செல்வராஜ் விக்டோரியா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சகிலா மோகன்வசந்தன், சிறப்பு விருந்தின ர்களாக கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலை அதிபர் சி .சோமசுந்தரம், சாவகச்சேரி பிரதேச செயலாளர் திருமதி கிரிஜா வாசுதேவன், தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ப. சதீஸ்வரன், பொதுச் சுகாதார பரிசோதகர் ம.பிரபாகரன், ஜே/287 கிராம அலுவலர் த.மாதுங்கன், ஜே/297 சமுர்த்தி உத்தியோகத்தர் இ.நிருபாகரன், ஜே/297 பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி யுகின் பிரதீபன் சயந்தினி ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக ஜே/311 கிராம அலுவலர் திருமதி மதுசன் சோபிகா, சமுர்த்தி உத்தியோகத்தர் றோஜான் சஞ்சீவன், கோப்பாய் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி குமரதீபன் பிரியா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பேணி அடுக்குதல், ரயர் கொழுவுதல், பிஸ்கட் சாப்பிடுதல், தடைதாண்டல், பென்சிலில் நாணயம் அடுக்குதல், முடிச்சுப் போடுதல், யானைக்கு கண் வைத்தல் கிளித்தட்டு,வளையம் கொழுவுதல், பொருள் சேகரித்தல் போன்ற பல்வேறு விளையாட்டுக்கள் நடைபெற்றன. (ஜ-159)

# கொழும்புப் பங்குச் சந்தையில் வீழ்ச்சி நடவடிக்கை தற்காலிக இடைநிறுத்தம்

கொழும்புப் பங்குச் சந்தையில் நேற்றுக் காலை பங்குப் பரிவர்த்தனை நடவடிக்கைகள் ஆரம்பித்தபோது சில பங்கு விலைச் சுட்டி 124.18 புள்ளிகளால் குறைவடைந்தது. இது முன்னைய பங்குச்சந்தை நடவடிக்கையுடன் ஒப்பிடும்போது 5 வீதத்துக்கும் அதிகமாக வீழ்ச்சியடைந்ததனால் பங்குப் பரிவர்தனை விதிகளின்படி பங்குச் சந்தை நடவடிக்கை யைத் தற்காலிகமாக இடைநிறுத்த கொழும்புப் பங்குச் சந்தை முடிவு செய்தது. (ம)

# தரிப்பிடங்களில் நிறுத்தாமல் பயணிக்கும் இ.போ.ச.பஸ்கள்

**யாழ்ப்பாணம்,மார்ச் 11**

**இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்கள், பஸ் தரிப்பிடங்களில் நிறுத்தாமல் தொடர்ச்சியாகப் பயணிக்கின்றன. இதனால் ஏற்படும் வருமான வீழ்ச்சிக்கு பஸ்ஸில் பணியாற்றுவோரே காரணம் என்று மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

கொடிகாமத்துக்கு அப்பால், ஏ9 பிரதான வீதியில் தினமும் பத்து நிமிடங்களுக்கு ஒரு பஸ் சேவையில் ஈடுபடுகின்றது. கொடிகாமத்துக்கு அப்பால் ஒவ்வொரு பயணிகள் வாகனத் தரிப்பிடங்களிலும், பயணிகள் நிற்கும் நிலையில், அரச பஸ்ஸில் ஆசனம் இருக்கின்ற போதும், நிறுத்தி ஏற்றாமல் செல்வதை அவதானிக்க முடிகிறது. அதேவேளை பயணிகள் நிற்க முடியாத நிலையில் வரும், தனியார் பஸ்கள், தரிப்பிடங்களில் நிற்கும் பயணிகளை ஏற்றிச் செல்வதையும் காணமுடிகிறது.

இது தொடர்பாக அரச பஸ்ஸில் பணியாற்றும் சாரதி மற்றும் நடத்துநர்களைக் கேட்டால், தமக்கு ஒதுக்கப்பட்ட நேரத்துக்குள் புறப்படும் பஸ் நிலையத்திலிருந்து இறுதிப் பஸ் நிலையத்துக்கு வந்தடைய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளதால், தரிப்பிடங்களில் நிறுத்திப் பயணிகளை ஏற்றிச் செல்ல மேலதிக நேரம் தேவைப்படும். அதனால் தண்டம் விதிக்கப்படலாம் என்ற அச்சத்தில் தரிப்பிடங்களில் நிற்கும் பயணிகளை ஏற்றிச் செல்வதைத் தவிர்க்கின்றோம் - என்றனர்.



மக்களுக்கான பயண சேவைகளை வழங்கவே அரசால் பஸ் சேவை நடத்தப்படுகிறது. பயணிகளை ஏற்றிச் செல்வதால் சபைக்கு வருமானம் அதிகரிக்கும். அதனால் சிறிது நேர தாமதம் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தாது. தூர இடங்களிலிருந்து வரும் அரச பஸ்கள் மணிக் கணக்கில் யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் குறைந்தது இரண்டு மணித்தியாலங்கள் தரித்து நிற்கின்றன. தரித்து நிற்கும் நேரத்தில் குறைந்த அளவு நேரம் தாமதமாகப் பயணிகளை ஏற்றி வரலாம். தரிப்பிடங்களில் நிற்கும் பயணிகளை ஏற்றிச் செல்வதால், அரசுக்கு நட்டம் ஏற்படாது. அரச பஸ்களில் பயணிகள் பயணிக்க விரும்பினாலும், அவை நிறுத்தாமல் செல்கின்றமையால் அடுத்து வரும் தனியார் பஸ்களில் பயணிக்க வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்திலிருந்து தூர இடங்களுக்கான அரச பஸ்கள் சாவகச்சேரி, கொடிகாமம் போன்ற பஸ் நிலையங்களுக்குச் செல்வதாகக் கூறினாலும், இருக்கைகள் உள்ள நிலையிலும் ஏற்றாமல் வேறு பஸ்களில் வருமாறு கூறிவிட்டு புறப்பட்டுச் செல்கின்றன.

சபையின் அதிகாரிகள் உரிய வகையில் கண்காணித்து தரிப்பிடங்களில் நிறுத்தாமல் செல்லும் பஸ்களின் சாரதிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (க-9)



# மாட்டிறைச்சிக் கடையை மீள இயக்கக் கோரிக்கை

மன்னார்,மார்ச் 11

நறுவிலிக்குளத்தில் மாட்டிறைச்சி விற்பனை நிலையத்தை மீளச் செயற்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


நறுவிலிக்குளம் மாதிரிக் கிராமத்தில் நீண்டகாலமாக இயங்கி வந்த மாட்டிறைச்சிக் கடையின் செயற்பாடுகள், கடந்த 2016 ஆம் ஆண்டு நானாட்டான் பிரதேச சபையால் நிறுத்தப்பட்டன.

கிறிஸ்தவ மக்கள் செறிந்து வாழும் நறுவிலிக்குளத்தில் 350 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. அந்தப் பகுதியில் மாட்டிறைச்சிக்கடை இல்லாத காரணத்தால், ஞாயிறு மற்றும் சிறப்பு நாள்களில் மாட்டிறைச்சிக்கு மக்கள் அலைய வேண்டியுள்ளது.

"இறைச்சிக்காக வங்காலை அல்லது நானாட்டான் போன்ற தூர இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. நானாட்டான் பிரதேச சபையால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மாட்டிறைச்சிக் கடையை மீளவும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் தி.பரஞ்சோதி தெரிவித்ததாவது:

முன்பிருந்த மாட்டிறைச்சிக்கடை நறுவிலிக்குளத்தில் மல்லிகை நட்டிக்குளத்தின் அருகில் காணப்பட்டதால், நானாட்டான் சுகாதார அதிகாரியின் வேண்டுகோளுக்கு அமைவாக மூடப்பட்டது. இந்த மாதிரிக் கிராமம் எமது பிரதேச சபைக்குச் சொந்தமானது. கிராமத்து அமைப்புகள் சம்மதம் தெரிவித்தால், அவ்விடத்தில் இறைச்சிக்கடை மீள இயங்க முடியும் - என்றார். (க-213)



*கிரான் பிரதேசத்திற்கான உலக தரிசனம் நிறுவனத்தினரால் ரெஜி கலாசார மண்டப சுற்று சுவரில் சுவரோவியம் வரையப்பட்டது. கோறளைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் திருமதி சோபா ஜெயஞ்சித்தின் வேண்டுகோளுக்கமைவாக சனசமூக உத்தியோகத்தர் ஜனாப் அ.காருன் மேற்கொண்ட நடவடிக்கையினால் இந்த ஓவியங்கள் வரையப்பட்டன.* (ம-150)

# கீரிமலை மெய்கண்டார் ஆதீனம் மீள் உருவாக்கம்

கீரிமலை மெய்கண்டார் ஆதீனம் மீள் உருவாக்கம் பெற்று 3 ஆம் குருமகா சந்நிதானமாக தவத்திரு உமாபதி சிவம் அடிகளார் பதவியேற்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை கீரிமலை குழந்தைவேல் சுவாமி சிவாலய ஈழத்து தமிழ் சித்தர் பீடத்தில் நடைபெற்றது.

அகில இலங்கை சைவ மகா சபையின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற நிகழ்வில், தென் கயிலை ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளாரால் உமாபதி சிவம் மூன்றாம் குருமகா சந்நிதானமாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

சிவத்தமிழ் சிவாச்சாரியார்கள் பன்னிருவர் இணைந்து மேற்கொண்ட செந்தமிழ் யாகத்துடன் இந்த நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில், வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தை சேர்ந்த துறவிகள், குருமார்கள், ஆலய தர்மகர்த்தாக்கள், கல்வியியலாளர்கள், மருத்துவர்கள், சட்டத்தரணிகள், சிவதொண்டர்கள் எனபலரும்கலந்துகொண்டனர்.அத்துடன் நிகழ்வில் கலந்து கொண்டவர்களை உள்ளடக்கி 20 பேர் கொண்ட ஆதீன செயலணி உருவாக்கப் பட்டது. (ஐ)

# உணவகத்துக்குள் தாக்குதல் ஒருவர் இறப்பு: மூவர் காயம்

நீர்கொழும்பு, மார்ச் 11

நீர்கொழும்பு - பெரியமுல்லை பகுதியிலுள்ள உணவகமொன்றினுள் அத்துமீறி நுழைந்த குழுவொன்று அதன் உரிமையாளர் மற்றும் பணியாளர்கள் மீது நடத்திய தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். மூவர் காயமடைந்தனர்.

குறித்த உணவகத்துக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 9.30 மணியளவில் சென்ற 6 பேர் கொண்ட கும்பல் அங்கு மது அருந்த முற்பட்டபோது, அதன் உரிமையாளர் மற்றும் பணியாளர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து இரு தரப்புக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்போது அத்துமீறி நுழைந்த குழுவினர் உணவகத்தின் உரிமையாளர் மற்றும் பணியாளர்கள் மீது ஆயுதங்களினால் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான உரிமையாளர்.உள்ளிட்ட 4 பேர் காயமடைந்த நிலையில், நீர்கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும் பணியாளர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். கெக்கிராவ - கனேவல்பொல பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக இதுவரையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் ஏனைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம)



# பாதுகாப்புத்துறையில் தலையிட ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை

## பொன்சேகா விளாசல்

**கொழும்பு, மார்ச் 11**

**பாதுகாப்பு அமைச்சை தன்னகத்தே வைத்திருக்க முடியாத ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ எவ்வாறு பாதுகாப்புத் துறையினருக்குக் கட்டளையிட முடியும் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேள்வி எழுப்பியுள்ளார்.**



மீரிகம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே பொன்சேகா இவ்வாறு குறிப்பிட்டார்.

'ஜனாதிபதியின் இந்தச் செயற்பாட்டால் உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களைப் போன்று மீண்டுமொரு சம்பவம் இடம்பெற்றால் நாட்டில் பொறுப்புக் கூறுவதற்கும் யாரும் இல்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் பற்றி விசாரணைகளை முன்னெடுப்பதற்கான குழுவில் நானும் அங்கத்துவம் வகித்தேன். 68 பக்கங்களில் நான் தனியாக ஒரு அறிக்கை தயாரித்திருக்கிறேன். அதில் முதலாவது குற்றவாளியாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், இரண்டாவது குற்றவாளியாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், மூன்றாவது குற்றவாளியாக நீதித்துறை அமைச்சரையும், நான்காவது குற்றவாளியாக முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தனவையும் குறிப்பிட்டிருக்கிறேன்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வெளியிட்ட கருத்துக்களும், இலங்கையை சிங்கள பௌத்த நாடு அல்ல என்று ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கத்துவம் வகித்த சிலர் வெளியிட்ட கருத்துகளாலுமே ஜனாதிபதித் தேர்தலில் நாம் தோல்வியைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இறுதி நேரத்தில் இவ்வாறு நடைபெற்றாலும் 2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்து 100 நாள்களில் நாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றினோம் - என்றார். (ம)

## உறுப்பினர் நியமனம்

புதுக்குடியிருப்பு, மார்ச் 11

புதுக்குடியிருப்புப் பிரதேசசபையில் வெற்றிடமாக காணப்பட்ட உறுப்பினர் பதவிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ரெலோவைச் சேர்ந்த ஆறுமுகம் சாந்தி நியமிக்கப்பட்டுள்ளார். பிரதேசசபை முன்னாள் உறுப்பினரும், அகில இலங்கை சமாதான நீதிவானுமான சபா. திருச்செல்வம் முன்னிலையில் நேற்றுமுன்தினம் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றார். (ஜ-222)



## கோப்பாய் கலாசாலையில் திருவள்ளுவர் திருநாள்

கோப்பாய், மார்ச் 11

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் திருவள்ளுவர் திருநாள், மாசி மாத உத்திர நட்சத்திர நாளான நேற்றுச் செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சுஜீவா சிவதாஸ் கலந்து கொண்டார்.

கலாசாலையில் அமைந்துள்ள திருவள்ளுவர் திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

தொடர்ந்து கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் சிறப்புரையாற்றினார்.

தமிழ் சிறப்புக் கற்கை நெறி ஆசிரிய பயிலுநர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

அதேவேளை பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் கலாசாலையில் கல்வி பயிலும் அனைத்து ஆசிரிய பயிலுநர்களுக்கும், திருக்குறள் தொடர்பான நூல்கள் இலவசமாக வழங்கப்பட்டன. (க)

## தென்கொரியாவில் இருந்து வந்த

# 181 பொதுமக்களும் தீவிர கண்காணிப்பில்!

கொழும்பு, மார்ச் 11

தென் கொரியாவில் இருந்து நாடு திரும்பிய 181 பேர் மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழக கொரோனா தடுப்புப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை நாடு திரும்பிய நிலையில், மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 179 பேர் இலங்கையர்கள். இருவர் கொரியர்கள்.

கொரோனா தனிமைப்படுத்தல் மையங்களாக வத்தளை, ஹெந்தலை பகுதியிலுள்ள தொழுநோய் வைத்தியசாலை, கந்தக்காடு புனர்வாழ்வு மையம் மற்றும் மட்டக்களப்புப் பல்கலைக்கழகம் ஆகியன தெரிவு செய்யப்பட்டிருந்தன.

இந்த நிலையில், ஹெந்தலப் பகுதி மக்கள் நடத்திய தொடர் போராட்டங்களையடுத்து அரசாங்கம் அந்த முடிவிலிருந்து பின்வாங்கியதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. அத்தோடு, கொரோனா தனிமைப்படுத்தல் மையமாக மட்டக்களப்பு மாத்திரமே செயற்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

எனினும் இதற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி முரளிதரன் மறுப்புத் தெரிவித்திருந்தார். கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நபர்களை மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகத்துக்கு அழைத்துச் சென்று சோதனை செய்யவுள்ளதாக வெளியாகும் தகவல்கள் பொய்யானவை என்றும் கூறியிருந்தார்.

இவ்வாறிருக்கையில், நேற்றுக் காலை நாடு திரும்பியவர்கள் மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## 181 பேரில் எவருக்கும் கொரோனா இல்லை

கொழும்பு, மார்ச் 11

தென் கொரியா மற்றும் இத்தாலியில் இருந்து இலங்கைக்கு நேற்று வருகைதந்த 181 பேரில் எவருக்கும் கொரோனா தொற்று இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்டுநாயக்க விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முதல்கட்ட சோதனைகளின் அடிப்படையில் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ம)





கிளிநொச்சி குமுழமுனை கதிரவன், பேதுரு, கரடிக்குன்று ஆகிய முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன. (க-222)



வாழ்க்கையின் பொதுவான விஷயங்களை நீங்கள் அசாதாரணமான முறையில் செய்யும்போது, உலகத்தின் கவனத்தை நீங்கள் ஈர்க்கிறீர்கள்.

ஜோர்ஜ் வொஷிங்டன் கார்வ

■ உ. பவனிதன்

# அறிவின் மூலம் உலகை வெல்வதற்கு நூலகங்களை உபயோகிப்போம்

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்பது பொன்மொழி. வாசிப்பு என்பது ஒவ்வொரு சுய மனிதனது சுயநலங்களை'யும் விடுவித்துப் பொதுநலம் பேண உதவுவது. பாரதிதாசன் தன் கவிதையில் "இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம் இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை" என்று கூறிய தன் மூலம் அறிவைப் பெற்றுக்கொள்ளக்கூடிய முக்கிய இடமாக அக்காலத்தில் சுவடிச்சாலை என்று அழைக்கப்படுகின்ற நூலகத்தைக் கூறியுள்ளார். பல்வேறு நூல்களின் உயிர்நாடி போன்றது நூலகம். தேன் மொய்க்கும் இடத்தைத் தேடி ஓடும் வண்டு போல் நூலகம் இருக்கும் இடத்தை நோக்கி நாம் செல்ல வேண்டும்.

அப்போதுதான் நூலகத்தின் மீதான ஈர்ப்பு, அது ஏற்படுத்தும் தாக்கம் என்பவற்றை மக்கள் அறிய முடியும். அதன் மூலம் உலகை வெல்லக்கூடிய அறிவுத் தாகம் நிறைந்தவர்களாய் அவர்கள் மாற முடியும். அறிவுஎன்பதுகிணற்றுத்தவளை போன்றது. நாம் ஆராயும் வரை அது வெளிப்படாது. ஆராயத் தொடங்கிவிட்டால் கலங்கரை விளக்குப்போல் பிரகாசிக்கும். பிறருக்கு இனிமையையும், விருப்பினையும் தரவல்ல நல்ல நூலகங்கள் அறிவை இலவசமாகத் தருகின்றன. ஒரு நாட்டிலுள்ள நூலகங்களின் எண்ணிக்கையைப் பொறுத்துத்தான் அந்நாட்டிலுள்ளவர்களது அறிவாட்சித் திறன், ஆற்றல்கள், பண்புகள் என்பன அளவிடப் படுகின்றன என்கின்றனர் மேலைநாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட தத்துவஞானிகள். நூலகங்கள் புத்தகங்களின் உறைவிடம் மட்டுமல்ல அறிஞர்களின் அனுபவத்தை எழுத்துருவில் தாங்கி நிற்கும் சரித்திர சான்றுகளும்கூட.

தொடக்க காலத்தில் புவியியல் தொடர்பான வரைபடங்களைப் பாதுகாக்கும் இடமாகக் கருதப்பட்டுப் பராமரிக்கப்பட்ட இடங்களே பிற்காலத்தில் நூலகங்களென புத்தகங்களைப் பாதுகாக்கும் இடங்களாக மாறின என்றால் ஆச்சரியமாகக் கூட இருக்கும். தனியார் நூலகங்கள், பொதுநூலகம், பள்ளிக்கூட நூலகம், கல்லூரிநூலகம், போன்ற பல வடிவங்களில் இவை இருந்தாலும் எல்லாமே பொதுவாக புத்தகங்களின் இருப்பிடங்களாகவே செயற்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. தற்போது இந்த நிலையங்களில் அச்சிடப்பட்ட நூல்கள், ஒலி, ஒளி வடிவிலான படைப்புக்களும் பேணப்படுகிறது.

வீடு இல்லாமல் நாம் நமது குடும்பம் சுகமாகவும், மகிழ்வாகவும் வாழ இயலாது. " கோவில் இல்லாத ஊர் பாழ்" என்பர். அதே போலத்தான் பாடசாலையும் ஒரு கோவிலே பள்ளிக்கூடம் கல்விக்கு அவசியம். அறிவுக்கு துணை, நூலகமோ அறிவுக்கு விருந்து, அறிவுக்கு மருந்து. நூலகங்கள் எமக்குத் தேவையான போது தேவையான நூல்களைத் தருவன. அவற்றை கையில் வைத்துப் படிக்கும் வசதி அங்கு உண்டு. நாம் எல்லா நூல்களையும் பணம் கொடுத்து வாங்குவது சாத்தியம் ஆகுமா? நூல் பிரியோராக இருக்கும் சிலர், மாதத்தில் ஒரு



நூலையாவது வாங்கும் பழக்கம் உள்ளவராக இருப்பர். இது மாணவர்களுக்கோ அறிவு தேட, ஆய்வு செய்ய விரும்புவர்களுக்கோ இயலாத காரியம். இலவசமாகவே புத்தகங்களைப் பெற்று எம் அறிவுப் பசிக்கு தீனி போடுவன நூலகங்கள். புத்தகங்களை ஒரே இடத்தில் சேகரித்துப் பேணி வைத்து , வேண்டிய நேரத்தில் எவரும் தாம் அறிய விரும்பும் விடயங்களை வாசித்து அறிவு பெற வாய்ப்பளிக்கும் பணியை நூலகங்களே செய்கின்றன. நூலகங்களிலே பொதுமக்களின் வாசிப்பு பயன்பாட்டுக்காக பலதுறைகளிலுமான பல நூறு புத்தகங்கள் இருக்கும். நூல்களின் உறைவிடமாக மட்டுமல்ல ஒரு சமுதாய அறிவு எழுச்சியின் வரலாற்று அடையாளமாக யாழ்ப்பாணப் பொது நூலகமும் இலங்கை தேசிய நூலகமும் தஞ்சாவூரின் சரஸ்வதி மகால் போன்ற நூலகங்களும் காணப்படுகின்றன.

நூலகங்களிலே நூல்கள் டியூயி தசம முறையில் வெவ்வேறு பகுதிகளில் நிரற்படுத்தப்பட்டிருக்கும். குறிப்பாக அகராதிகள், கலைக்களஞ்சியம், சிறப்புச் சஞ்சிகைகள் என்பன காணப்படும். இவற்றை உடனுக்குடன் தருவதற்கு செய்யப்பட்டிருக்கும் கணினி தொழிற்பாடுகள், களஞ்சியப் பாவனை விதிமுறைகள் போன்ற கட்டமைப்புக்கள் அங்கே இருக்கும். வாசகர்கள் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களிலே அமர்ந்திருந்து வாசிக்க அங்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கும். நூலகங்களில் சிறுவர் பகுதி, உசாத்துணை நூற்பகுதி, பொது வாசிப்புக் கூடம் என்ற மூன்று பகுதிகள் இருக்கும். படிக்கும் பிரதேசம் முழுவதும் அமைதி நிலவும். படிப்பவர்களின் கவனத்தை எவ்வகையிலும் திசை திருப்பாத வகையில் நூலகங்களில் புழங்குபவர்கள் மௌனமாகவே நடமாடுவார்கள். இந்த வகையில் நூலகம் என்பது ஒரு முறைசாராக் கல்வி நிலையமாக இருந்து எமக்கு உதவுகிறது. அறிவின் மூலம் உலகை வெல்லவும் உதவுகிறது.

**" புலவர்கள் விளைவது புத்தக வயலில்**
**புத்தகம் விளைவது புலவர்கள் வயலில் "**



### உடலுக்குத் தேகாப்பியாசம் போன்றதே மனதுக்கு வாசிப்பு

சிந்திப்பவன் மனிதன், சிந்திக்கும் போது மேலும் மேலும் பல விடயங்களை மனிதன் அறிய விரும்புகிறான். யாரிடமாவது கேட்டு அறிகிறான். மிகவும் தெளிவாகவும், விளக்கமாகவும், விரிவாகவும் ஆறுதலாகவும் புதிய விடயங்களைக் கற்கிறான். அந்தத் தேவைகளுக்கெல்லாம் அவன் புத்தகங்களைத்தான் நாடுபவனாக இருக்கிறான். ரிச்சார்ட் ஸ்டீல் என்ற அறிஞர் "உடலுக்குத் தேகாப்பியாசம் போன்றதே மனதுக்கு வாசிப்பு" என்று கூறினார். உண்மையில் வாசித்தலானது வெறும் பயிற்சி மட்டுமல்ல. அதனால் வரும் அளப்பரிய அறிவு ரீதியான நன்மைகளுடன் நாம் பெறும் ஆனந்தமும், ஆத்ம திருப்தியும் தர வல்லன.

"நவில்தோறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு" என்பார் திருவள்ளுவர். நல்ல நூல்களே நல்ல நண்பர்கள். அவை அறிவுக்களஞ்சியங்கள். நூல்கள் வாயிலாக எத்தனையோ புதிய விடயங்களை நாம் படித்து அறிந்து கொள்கிறோம். கட்டுரைகள், கதைகள், கவிதைகள், நாடகங்கள், நவீன தொழில் நுட்பங்கள், கணினிச் செயன்முறைகள் என்று எதை எதை அறிந்து அறிவைப்பெருக்க வேண்டுமோ அவையெல்லாம் அங்கு தாராளமாக உண்டு.

நூல்கள் பாமர மக்களாலும் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய வகையில் நூலகத்தில் உள்ளன. கல்வித்துறைகள் அனைத்தையும் திறம்பட அறிவிக்க வல்லன. எனவே கல்விப்பெரும் செல்வத்தை உலகுக்கு வரையாது வழங்கும் வண்மை நூல்களுக்கன்றி பிறிதெதற்குமில்லை. இன்றுள்ள நிலையில் உலகில் உள்ள நூல்கள் அனைத்தையும் ஒன்று விடாது எரியூட்டியோ , கடலிலிட்டோ அழித்து விட்டால் என்ன நிகழும் என்பதைக் கற்பனை கண்கொண்டு கூடக் காண விரும்பாத அளவுக்கு அவை நூலகங்களில் இருந்து அறிவை வளர்க்க உதவுகின்றன. நூலகங்க ளால் மக்கள் காலங் காலமாக அளப்பரிய நற்பயன்கள் பெற்று வந்தமையே அப்பிணைப்புக்குக் காரணமாகும்.

வேதங்களும் வேதகாலத்து மகரிஷிகள் கண்ட ஆழ்ந்தகன்ற தத்துவ தரிசனங்களுஞ் செவிவழியாகக் கேட்கப்படும் அவை மனதிற் பதிக்கப்பட்டும் பின்னர் ஏடுகளில்பொறிக்கப்பட்டும்பிற்காலத்தில்நூல்களாக்கப்பட்டும் அவை பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. அவை பல்கிப் பெருகி வீடுகளில் வைக்க முடியாத நிலையினிலே அவை நூலகங்களில் சேமித்து வைக்கப்பட்டு பயன்படத்தக்க முறையிலும் கழிப்பதற்கு நூல்கள் போற் சிறந்தன பிறிதில்லை. இதற்காக நாம் நூலகங்களைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்மூலம் தவறான வழியில் ஒரு மனிதன் சென்றுவிடாது அறிவுசார் வழியை நோக்கி அவன் செல்ல முடியும். மனித வாழ்வுக்கு மிக இன்றியமையாத அறிவு எனும் செழுஞ்சுடரை உலகின் மூலை முடுக்கெல்லாம் பரவச் செய்யும் ஒப்பற்ற கருவிகளாக நூலகங்கள் மதிக்கப்படுகின்றன.

அவை மனிதன் பூரண வாழ்வு வாழ்வதற்கு வழிகாட்டிகளாய் அமைகின்றன. அறிவெனும் பெருநிதியத்தை விரும்பியவர்கள் விரும்பிய வேளையில் விரும்பிய அளவு பெற்று அனுபவித்து இன்புறுதற்கமைய களஞ்சியங்களாய் அவை விளங்குகின்றன. நல்ல நண்பர்களிலும் பார்க்கப் பேருதவி புரிகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் எக்கச்சக்கமாக நூலகங்கள் இருந்தாலும் அவை இன, மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்டிருக்கின்றமை வருத்தத்துக்குரியது. உதாரணமாகச் சொல்லப்போனால் யாழில் உள்ள நூலகத்தில் பெரும்பான்மையாகத் தமிழ் நூல்களும் மற்றும் காலியில் உள்ள நூலகத்தில் சிங்களத்தில் நூல்களும் காணப்படுகின்றன. இவை தவிர்க்கப்பட வேண்டும்.

அறிவு பெற்றுக்கொள்ளலானது எல்லோருக்கும் சமமான ஒன்று. இக்காலத்தில் நாம் வீட்டிலிருந்து கொண்டே இணைய வசதி மூலம் நூல்களை இரவல் வாங்கி படிக்க முடியும். இவை நூலகங்களின் தொழில்நுட்ப வளர்ச்சி என்று கூறலாம். மாணவர்களின் நிலை பற்றிச் சற்று எடுத்து நோக்கினால் பாடசாலையில் பயிலும் பாடங்களோடு மாத்திரம் மாணவனின் கல்வி முற்றுப் பெறுவதில்லை. கரையற்ற கல்விக்கடலிலுள்ள அதாவது நூலகங்களில் உள்ள பற்பல நல்ல நூல்களையும் வாசித்தல் வேண்டும். இதன்மூலம் மாணவர்கள் உலகை வெல்லக் கூடிய நற்பயிராய் வளர முடியும். நூல் வாசிப்புத் திறனிலே தேர்ச்சி பெற்ற மாணவனின் உள்ளம் தணியாத பசி கொண்டதாய் இருக்கும். அதாவது மணிமேகலை எனும் காப்பியத்திலே 'யானைத்தீப்பசி'என்னும் நோய் கொண்ட காயசண்டிகை வருகிறாள். அவளுக்கு உண்ண உண்ணப் பசி தீராது. அதேபோல மாணவர்களும் யானைத்தீப்பசி போல நல்ல நூல்களைத் தேடித்தேடிப் படிக்க வேண்டும். நூல்களின் மகிமை நூலகங்களிலேயே காணப்படுகின்றன. இந்த உலகினை வெல்வதற்கு இந்த உலகத்தைப்பற்றி அறிய எமக்கு தேவையானது உலக அறிவு. இவற்றைத் தரக்கூடிய ஓர் இமாலய மலையே நூலகங்கள் ஆகும். நூலகங்களின் மூலம் உலக அறிவு அதாவது, அரச தலைவர்கள், உலக அரசியல் , உலக நாடுகளின் வரலாறு, போன்ற புதுப்புது விடயங்களை நாம் பெற்றுக்கொள்கிறோம். அறிவுப்பசி நிறைந்த ஒருவனுக்கு தீன்கனியாக வந்து உதவுவது நூலகங்கள். இவற்றின் மூலம் நாம் புரிந்து கொள்வது என்னவென்றால் நூலகங்களானது எம்மை இந்த உலகில் அறிவுள்ளவராய் மாற்றுகின்றன.

பற்பல மேதைகளும் அறிஞர்களும் பாடசாலைக்கல்வியை விடுத்து நூலக அறிவின் மூலமே அந்தப் பெரிய நிலைக்குச் சென்றிருக்கின்றனர் என்பதனைச் சான்றுகள் மூலம் அறிய முடிகிறது. ஆகவே இந்த உலகை அறிவின் மூலம் நாம் வெல்ல வேண்டுமானால் நூலகங்கள் இன்றியமையாத ஒன்றாகும். பிரான்ஸிஸ் பேகன் என்ற அறிஞர் "வாசிப்பு ஒரு மனிதனை முழுமையாக்குகிறது" (reading make the full man) என்கிறார். கல்வி அறிவை விசாரிக்க விரும்பும் சமூகத்துக்கு மாத்திரமல்ல பொது மகனொருவனுக்கும் நூலகமானது அறிவு வழங்கவல்லது. சமூகம் ஒன்றின் அடிப்படை அறிவை மேம்படுத்த உந்துசக்கியாக அமைவது. எனவே நூலகங்கள் மாணவருக்கும், வளரும் சமுதாயத்துக்கும், நம் ஒவ்வொருவருக்கும் ஆற்றும் பணியை மனதிலிருத்துவோம். அறிவின் மூலம் உலகை வெற்றி கொள்ள நூலகங்களைப் பயன்படுத்திப் பயன் பெறுவோமாக!

# யாகாவார் ஆயினும் நாகாக்க...




"ஐயா அமைதியும் மௌனமும் எவ்வளவு பெரிய தண்டனை என்று எனக்குத் தெரியும். அதேதான் வார்த்தைகளும் செய்யும். வார்த்தையை விடக் கூடாது" என்று யாகாவாராயினும் குறளைச் சொன்னார் என் மதிப்புக்குரிய ஒருவர் காயப்படுத்தும் வார்த்தைகளே இவ்வுலகில் இருப்பதிலேயே கொடிய விடமாகும். "டேய் உன்னை பேசுபவர்களின் வார்த்தையை ஏன்டா தலைக்குப் போட்டுக்கிற பேசுபவர்கள் பேசட்டும் நீ உன் வேலையை செவ்வனே செய்" என் ஆசான் எனக்கு அறிவுரை வழங்கிய வார்த்தைகள் தான் அவை.

இகழ்ந்து பேசுபவர்களின் வார்த்தையை இதயத்திற்கு கொண்டு சேர்க்கவே கூடாது. வார்த்தைகள் வெறும் ஒலி மட்டும் தான் ஆனால் அது செய்யும் பாதிப்பு என்பது விபத்தை விடவும் ஆபத்தானது. அந்த ஒலி இசையாக இருந்தால் இதயம் இதப்படும்.

இரைச்சலாக இருக்கும் போது இம்சைப்படும். அடுத்தவர்களுக்கு இம்சை கொடுக்கும் வார்த்தையை கட்டுப்படுத்துங்கள். மனம் அறிந்து அவர்களுக்கு தேவையான சொற்களை மட்டுமே அவிழ்த்து விடுங்கள். வார்த்தைகளுக்கு வயது வித்தியாசம் எல்லாம் தெரியாது. சின்னவனாக இருந்தாலும் அளவறிந்தே பேசுங்கள். மற்றவர்களுக்கு எது பிடிக்குமோ அதைச் சொல்லிப் பாருங்கள் உங்கள் சொல்களை விரும்பிக் கேட்பார்கள். நிறைய பேசுபவர்கள் செயல்படுவதில் தாமதமாகக் காணப்படுவார்கள். அமைதியை கடைபிடிப்பவர்கள் நிறைய செயல்படுவார்கள். நாம் பேசுவதை பொறுத்தே இனிமையும் தீமையும் வரையறுக்கப்படுகின்றன.

நாவடக்கம் நல்லதைத் தரும். அதை அடக்காதவர்கள் துன்பத்துக்கு ஆளாவார்கள்.

***யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்***
***சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.***

இசைவாசி



## தேசிய விருது பெற்ற பாடலாசிரியர் ஜோண்சனால்

# போதைப்பொருள் பாவனைக்கு எதிராகக் குறும்படம்




நடந்து முடிந்த போருக்கு பின்னர் வட மாகாணத்தின் இளையோர்கள் மத்தியில் வேகமாகப் பரவி வருகின்ற போதைப்பொருள் பாவனைக்கு எதிரான காத்திரமான விழிப்பூட்டல் செய்தியுடன் தாயுமானவன் என்கிற 15 நிமிட குறும்படம் யாழ்ப்பாண மாவட்டத்தில் எடுக்கப்படுகின்றது. சுவிற்சலாந்தை தளமாகக் கொண்டு இயங்குகின்ற பி. எம். எல் மீடியாவின் தயாரிப்பாக தேசிய விருது பெற்ற பாடலாசிரியர் எம். எப். ஜோண்சனின் கதை, எழுத்து, இயக்கத்தில் தாயுமானவன் குறும்படத்தின் இறுதிக் கட்டப் படப்பிடிப்புகள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன. போதைப்பொருள் பாவனைக்கு உள்ளான இளைய மகனால் குடும்பத்தின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுத் தாய் கொல்லப்படுவதும், மூத்த மகன் வழி தவறிச் சென்ற சகோதரனைக் காப்பாற்ற மேற்கொள்கின்ற பகீரத முயற்சிகளை தொடர்ந்து இளைய மகன் மனம் மாறி நற்பிரஜையாக திருந்துவதுமே கதை ஆகும். திரைப்படத் துறை சார்ந்த பன்முக ஆளுமைகள் கொண்ட பாடலாசிரியர் ஜோண்சன் ஏற்கனவே பல குறும்படங்களில் உதவி இயக்குநராக பணியாற்றி உள்ளபோதிலும் இதுவே இவர் இயக்குகின்ற முதலாவது குறும்படம் ஆகும்.

இவர் உட்பட ரொபேர்ட், ஜோனி, மேரி, சர்மி, யசிதரன், பிஸ்மார்க் உள்ளிட்ட கலைஞர்கள் இதில் முக்கிய பாத்திரங்களில் நடிக்கின்றனர். கமரா வின்செண்ட் குரு. இசை பத்மயன். ஒப்பனை அன்ருவ். பளை. சுன்னாகம். அல்லைப்பிட்டி, உரும்பிராய்,சுண்டுக்குழி ஆகிய இடங்களில் படப்பிடிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. இம்மாத நிறைவில் படத்தை வெளியிட உத்தேசித்து உள்ளனர்.

# கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடு


ந.ப.கங்காவின் "விதை" கவிதைத் தொகுப்பு 'நதியோர நாணல்கள்' இலக்கிய மன்றத்தினரால் வெளியீடு செய்யப்பட்டது. பிரதம விருந்தினராகப் பேராசிரியர் ம.இரகுநாதன் தலைவர் , தமிழ்த்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம். சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் தி.கார்த்திகேயன் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அன்பரசி அருட்செல்வமும் கௌரவ விருந்தினர்க ளாக கலைமாமணி வ.ஏழுமலைப்பிள்ளை மற்றும் ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியை செல்வி.நா.ரஞ்சினிதேவி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இலக்கியம் நோக்கிய இளைய படைப்பாளிகளின் கண்ணோட்டம் என்பதில் கவிஞர் யோ.புரட்சி உரையாற்றினார். வாழ்த்து உரையை கவிஞர்.முல்லை திவ்வியனும் வாழ்த்துக்கவியை கவிஞர்.ஐ.துஸ்யந்தனும் நிகழ்த்தினர். நூல் ஆய்வு உரையை கலாபூஷணம் தமிழ்க்கவி அம்மா ஆற்றினார்.



## இலை மறை காயாக உள்ள

# எமது கலைஞர்களை இனங்கண்டு ஊக்கப்படுத்துவோம்!



நேர்கண்டவர்:
வேதிகா பிரபாகரன்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துடன் இணைந்து தொடர்ச்சியாக ஆறு நாள்கள் நடைபெறக் கூடிய சிறப்புத் திரைப்படப் பயிற்சிப் பட்டறை ஒன்றை "பட்டறை" அமைப்பு இலவசமாக நடத்தவுள்ளதாக அறிகிறோம். இது தொடர்பாக அதன் ஒருங்கிணைப்பாளர் தமிழியம் சுபாஸிடம் கேட்ட போது, இதுவரையில் இலங்கைத் தீவு முழுவதிலுமிருந்து ஐநூறுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன என அவர் மேலும் அதிர்ச்சி ஊட்டினார். இந்தச் சிறப்புத் திரைப்படப் பயிற்சிப் பட்டறை பற்றி மேலதிகமாக அவரிடமே கேட்டுத்தெரிந்து கொள்வோம்.

**கேள்வி: முதலில் "பட்டறை" பற்றி சின்ன அறிமுகம் கொடுங்கள்?**

பதில்: இது இலாப நோக்கற்றுச் செயலாற்றும் சுயாதீனக் கட்டமைப்பு. இன்றைய உலக ஓட்டத்தில் புதிதாக பல துறைகள் உருவாகி வருகின்றன. நாம் O/L எடுக்கும் போது இல்லாத பல துறைகள் A/L முடிக்கும் போது உருவாக்கி விடுகின்றன. இது ஓர் ஆரோக்கியமான வளர்ச்சிதான். புதிதாக உருவாகி வரும் துறைகள் மட்டுமின்றி, ஏற்கனவே உள்ள துறைகளிலும் அத்துறை சார் புலமைத்துவம் பெற்றவர்களூடாக நமது இளம் தலைமுறையினரைப் பயிற்றுவிப்பதன் மூலம், எமது சமூகத்தில் படைப்பாற்றலையும் கண்டுபிடிப்பாற்றலையும் மேம்படுத்த முடியும் என நாம் திடமாக நம்புகிறோம். அதற்கான முதல் முயற்சியே இச் சிறப்புத் திரைப்படப் பயிற்சிப் பட்டறை.

**கே: நீங்கள் கூறுவதைப் பார்த்தால், எம்மவர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய நிறைய துறைகள் உள்ளன. ஏன் குறிப்பாக திரைப்படப் பயிற்சிப் பட்டறை?**

ப: உண்மைதான், நாம் உச்சம் தொடாத மட்டுமல்ல, நாம் கால் பதிக்காத துறைகள் இன்னும் பல உள்ளன. உலகிலுள்ள அனைத்துத் தேசிய இனங்களும் தனக்கென நலியாக் கலையுடையவர்கள். ஈழத்து கவிஞன் மகாகவி உருத்திர மூர்த்தி அன்றுரைத்தது போல் நாமும் 'நமக்கென்றோர் நலியாக் கலையுடையோம். ஆனால் எமது வாழ்வியலை இதுவரையில் சர்வதேசத் தளத்திற்கு நாம் இன்னும் சரியாகக் கொண்டு செல்லவில்லை என்பதே ஒரு கசப்பான உண்மை. "எமது வாழ்வியலை எம்போன்று எவராலும் கூற முடியாது" ஆகவே இலை மறை காயாக இருக்கும் எமது கலைஞர்களை இனங் கண்டு அவர்களுக்குத் திரைப்படத்துறை தொழில் சார் கற்கை நெறி அளிப்பதன் ஊடாக தரமான திரைப்படங்கள் உருவாகும். இதனூடாக ஈழத்துத் திரைப்படத்துறையை தொழில் மயப்படுத்துவது மட்டுமல்லாமல் சர்வதேசத் தளங்களிலும் எமது கலைஞர்கள் மிளிர முடியும் என நாம் திடமாக நம்புகிறோம்.

**கே: இந்த ஆறு நாள் சிறப்புத் திரைப்படப் பயிற்சிப் பட்டறையில் எவ்வாறான விடயங்கள் கற்றுக் கொடுக்கப்படும்?**

ப: குறும்படம்/ஆவணப்படம், நடிப்பு, திரைக்கதை/இயக்கம், ஒப்பனை, ஒளிப்பதிவு மற்றும் படத்தொகுப்பு ஆகிய, திரைப்படத் துறைக்குத் தேவையான முக்கியமான ஆறு துறைகளின் கோட்பாடு மற்றும் நடைமுறைப் பயிற்சி அத்துறை சார் வல்லுநர்களால் பயிற்றுவிக்கப்படும்.

**கே: ஆறு விடயங்களையும் ஒருவரே பயிற்றிவிப்பாரா, எப்படி?**

ப: இல்லை. பிரதான வளவாளர்களைத் தவிர. இதில் ஆறு பயிற்றுவிப்பாளர்கள் உள்ளனர், அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் புலமைத்துவம் பெற்றவர்கள். இவர்களைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால் கடந்த முப்பது வருடங்களுக்கு அதிகமாக தமிழகத்திலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் குறும்படங்கள்மற்றும்உலகத்திரைப்படங்களை தொடர்ச்சியாகத் திரையிடுவது மட்டுமின்றி, ஆறாயிரத்திற்கு மேற்பட்டோருக்கு திரைப்படப் பட்டறைகள் மூலம் பயிற்சிகளை வழங்கிவரும் 'நிழல் பதியம்' குழுவினரே, பயிற்றுவிற்பதற்காக தமிழகத்தில் இருந்து யாழ் வருகிறார்கள்.

**கே: பிரதான வளவாளர்களாக பிரசன்ன விதானகே, ஹலிதா ஷமீம் இவர்களுடன் தாயகக் கலைஞர்களான நவரத்தினம் கேசவராஜன் மற்றும் காசிநாதர் ஞானதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர் என paddarai.org இணையத்தளத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள். வேறு யார் கலந்து கொள்கின்றனர்?**

ப: தற்போது வரை உறுதி செய்யப்பட்ட பிரதான வளவாளர்கள் நீங்கள் குறிப்பிட்ட இவர்கள் நால்வரும். இதனைத் தவிர இயக்குநர் எஸ். பி. ஜனநாதன் யாழ்ப்பாணம் வந்து மாணவர்களைச் சந்திப்பதில் மிகவும் ஆர்வமாக உள்ளார். விஜய்சேதுபதி மற்றும் ஸ்ருதிஹாசன் நடிப்பில் "இலாபம்" திரைப்படத்தை தற்போது இயக்கி வருகிறார், அதன் இரண்டாம் கட்ட படப்பிடிப்புகள் மார்ச் மாதம் ஆரம்பிக்க உள்ளதால் இன்னும் அவரது வருகை உறுதிப்படுத்த முடியவில்லை. உங்களைக் கவர்ந்த வேற்றுமொழித் திரைப்படங்கள் எவை? என்னும் வினாவிற்கு அதிகமான மாணவர்கள் பதில் அளித்துள்ள திரைப்படம் ஒன்றை நெறியாள்கை செய்த இயக்குநர் ஒருவருடன் பேசிக்கொண்டுள்ளேம். இவர் சர்வதேச அளவில் மிகவும் பிரபலமான வேற்று நாட்டு இயக்குனர், அவர் வருகை உறுதிப்படுத்தப்பட்டதும் அறிக்கைத் தருவோம்.

**கே: இதுவரையில் ஐநூறுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள் ளதாக கூறினீர்கள், அதைப் பற்றிக் கூறுங்கள்?**

ப: ஆம். இதனை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நாம் திரைப்படப் பயிற்சிப் பட்டறை செய்வதாக முடிவெடுப்பதற்கு முன்னர் கள ஆய்வு செய்தோம். இதற்கு முன் நடைபெற்ற திரைப்படப் பயிற்சிப் பட்டறைகளில் மிகவும் கணிசமான மாணவர்களே பங்குபற்றினர் என புள்ளி விவரங்கள் கிடைத்தன. நாம் அதிகம் பெண்கள் கலந்து கொள்ள வேண்டுமென விரும்பினோம், விண்ணப்பித்தவர்களில் இருபது விகிதத்திற்கும் மேலானோர் பெண்கள். இதை நல்லதொரு ஆரம்பமாகவே பார்க்கிறோம்.

**கே: நூறு மாணவர்கள் தான் பங்குபற்றலாம், ஆனால் ஐநூறுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்துள்ளன எனக் கூறுகி றீர்கள். அப்போ மீதி நானூறு மாணவர்கள் பங்குபெற முடியாதா?**

ப: நல்ல கேள்வி. நாம் மாணவர்களின் சுகாதாரம் சூழல் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நூறு பேருக்கே அனைத்து ஆறு நாள் பட்டறையில் கலந்து கொள்ளும் அனுமதியை வழங்கவுள்ளோம். மிகுதியாக உள்ள நானூறு பேருக்கும் அவர்கள் விரும்பும் ஏதாவது ஒரு துறையில் அதாவது ஒருநாள் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ளும் சிறப்பு வாய்ப்பு வழங்கப்படும். இதன் இறுதி முடிவு விண்ணப்பதாரர்களுடையது.

**கே: ஆறு நாள் சிறப்புத் திரைப்படப் பயிற்சிப் பட்டறைக்கான பெறுமதி ரூ30,000 எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். பட்டறை, உணவு மற்றும் தங்குமிடம் இவை அனைத்தும் இலவசம் என அறிவித்துள்ளீர்கள். இதற்கான பணத்தை யாரிடமிருந்து பெற்றுக்கொள்கிறீர்கள்?**

ப: அரசு, அரசியல் அல்லது மதம் சாரா நிறுவனங்கள் மற்றும் தனிமனிதர்கள் எமக்கு பங்களிப்புகளை வழங்குகின்றனர். இவர்களின் விவரங்களை உடனுக்குடன் எமது இணையத்தில் வெளியிட்டு வருகிறோம். இது தவிர எமக்கு ஆறு நாள் நிகழ்வுகளையும் நடத்துவதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கை இலவசமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் தந்துதவியுள்ளது.

**கே: ஆறு நாள்களில் ஆறு துறைகள் என்கிறீர்கள். இதில் பங்குபெற்றுவிட்டால் படமெடுத்து விடலாமா?**


ப: இதற்கு ஒரே சொல்லில் பதில் சொல்வது கடினம். திரைப்படத்துறையில் படிக்காமல் சாதித்தவர்கள் பலர், குறிப்பாக சத்யஜித் ராய், மிதிவண்டித் திருடர்கள் (Bicycle Thieves) எனும் இத்தாலியத் திரைப்படத்தைப் பார்த்து அதன் தாக்கத்தில் திரைப்படத்துறை பால் ஈர்க்கப்பட்டு சர்வதேச அளவில் பேசப்படக் கூடிய பல திரைப்படங்களை இயக்கியுள்ளார். பதேர் பாஞ்சாலி எனும் ஒரு திரைப்படமே போதும் சத்யஜித் ராயின் திறமையை நாமறிய. 1992இல் சிறப்பு ஆஸ்கார் விருது இவருக்கு கிடைத்ததென்பது கூடுதல் தகவல். மறுபுறம் எமது மண்ணின் மைந்தன் ஐயா பாலுமகேந்திரா, இவர் புனே திரைப்படக்கல்லூரியில் முறையாக ஒளிப்பதிவுக்கலை பயின்று தங்கப்பதக்கம் வென்றவர். இவர் இயக்கிய வீடு, சந்தியா ராகம் போன்ற திரைப்படங்கள் சர்வதேசத் தரம் வாய்ந்தவை. தான் பாடசாலையில் படித்த போது பார்த்த பதேர் பாஞ்சாலி திரைப்படம் தனக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதாக பல இடங்களில் கூறுகின்றார் ஐயா பாலுமகேந்திரா. "மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம் யாவுள முன்நிற் பவை" [குறள் 636] எனும் திருக்குறளுக்கு அமைய, அனைவரிடமும் இயற்கையாக சில திறமைகள் இருக்கும், அதற்கான கோட்பாடு மற்றும் நடைமுறைப் பயிற்சி ரீதியான அறிவைக் கொடுப்பதே எமது பணி.

**கே: திரைப்படப் பயிற்சிப் பட்டறை முடிவில் தொடர்ந்து பயில விரும்பும் மாணவர்களுக்கு உங்களிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா?**

ப: ஆம். ஆறு நாள் ஆறு துறை என்பது வெறும் ஆரம்பமே. இச்சிறப்புத் திரைப்படப் பயிற்சிப் பட்டறையில் பங்கு பெறுபவர்களின் ஆர்வம், படிப்பு அல்லது தொழில் அடிப்படையில் மாணவர்களைத் தேர்வு செய்து ஒவ்வொரு துறையிலும் குறைந்தது ஏழு நாள் பயிற்சிப் பட்டறையை நடத்த உள்ளோம். இதற்கான திட்டம் 12ஆம் திகதி, இறுதி நாள் நிகழ்வில் அறிவிக்கப்படும்.

**கே: இறுதியாக, எங்கு எவ்வாறு இத் திரைப்படப் பயிற்சிப் பட்டறை நடைபெற உள்ளது?**

ப: சிறப்புத் திரைப்படப் பயிற்சிப் பட்டறை ஏப்ரல் 6ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். மாணவர்கள் இயக்கிய குறும்படங்கள் திரையிடல் மற்றும் சான்றிதழ் வழங்குதல் ஆகிய நிகழ்வுகள் 12ஆம் திகதி அன்று பொதுமக்களும் கலந்துகொள்ளும் விதமாக பொதுக் கலையரங்கில் நடைபெறும். இது பற்றிய மேலதிக விவரங்கள் உடனுக்குடன் எமது இணையத்தளம் (paddarai.org) ஊடாகவும் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் அறிவிக்கப்படும்.




எமது வாழ்வியலை எம்போன்று எவராலும் கூற முடியாது ஆகவே இலை மறை காயாக இருக்கும் எமது கலைஞர்களை இனங்கண்டு அவர்களுக்குத் திரைப்படத்துறைத் தொழில் சார் கற்கை நெறி அளிப்பதன் ஊடாக தரமான திரைப்படங்கள் உருவாகும் இதனூடாக ஈழத்துத் திரைப்படத்துறையை தொழில் மயப்படுத்துவது மட்டுமல்லாமல் சர்வதேசத் தளங்களிலும் எமது கலைஞர்கள் மிளிர முடியும் என நாம் திடமாக நம்புகிறோம்.

# நாளைய தேவையறிந்து நமக்காகும் ஒரு சஞ்சிகையே 'இசை ஆரம்'

கே.எஸ்.சிவஞானராஜா

இலங்கையில் வெளிவந்த இசை சார்ந்த வெளியீடுகளான மிடற்றிசை, இசையருவி, பல்லவி, தம்புரா, மனோலயம், சுருதிலயம், சுருதி ஸரிகம, பல்லியம், ஆரபி, சங்கு, பதம் ஆகிய முன்னைய வெளியீடுகளின் வரிசையில் காயத்திரியின் "இசை ஆரம்" என்ற சஞ்சிகை காத்திரமான வெளியீடாகும்.

கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், சித்திரம், நாட்டார் பாடல், கோலம், சிற்பம், கவிதை, கட்டுரை சித்த மருத்துவம், ஜோதிடம், மனனம், யோகம், தியானம், சமையல், பராமரிப்பு, அலங்காரம் ஆகிய கலை முதலீடுகளை வெளிக்கொணர்வதில் தற்போதைய தலைமுறையினர் அதீத அக்கறைகாட்டிவருகின்றமை மிகவும் பாராட்டுதற்குரியது. அந்த வகையில் வேண்டத்தக்க கலைப் பொக்கிஷங்களை வரவேற்று ஆவணப்படுத்தி வெளியிடுவதில் "ஸ்ரீ ஸ்வர ஞானம் கலாலயம்" தன்னை அடையாளப்படுத்தியுள்ளது.

காயத்திரி சண்முகநாதன் மேற்படி கலாலயம் சார்பாக கலையின் சங்கமமாகவும், தேடலின் ஆரம்பமாகவும் புதுமை கொண்டு. "இசை ஆரம்" என்னும் கலைப்படைப்பினை முதன்மையாக்கி எமக்கு வரமாக்கியுள்ளார்.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்று பாரதியாரின் பெறுமதியை இசை ஆரத்திற்கு முதலீடு ஆக்கியுள்ளார். தேவையறிந்து சேவைபுரியுமாறு பூவில் வாசனை கமழும்படியாக ஆரத்திற்கு வரமாக்கியுள்ளார்.

ஏற்கனவே 'பல்லவி' என்ற சஞ்சிகையானது இசையுலகில் பிரபல்யமடைந்து சாஸ்திரிய சங்கீதத்துக்கு உபகாரம் செய்ததுபோல, இசை ஆரம் எனும் மாதாந்த சஞ்சிகையானது கலைகளின் கண்ணாடியாகத் திசைமுகம் கொண்டுள்ளது. ஆரத்தின் உள்ளடக்கத்தினைத் திறந்து பார்ப்பதற்கும் படிப்பதற்கும் 'வா' என்று முகப்பு அட்டை வரவேற்கிறது.

இடதுபாதம் தூக்கி ஆடும் நடராஜப் பெருமானின் மின் ஆர் செஞ்சடையும்;
அபிநய மாதுவின் அழகொழுகு சிலையென்பதுவோ என மயங்கும் பரத மான்மியமும்,
இசை அரசி, கலாநிதி, எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களது தெய்வீக வசனமும்,
சுருதியோடு மிளிரும் வாக்கியங்களின் சகவாசமும், ஸ்ரீஸ்வர ஞானம் கலாலயத்தின் முத்திரையும் மகுடவாசகமும், முகப்பட்டையின் தாற்பரியத்திற்கு வசீகரமாகிறது.

உள்ள பதினாறு கருவூலப் படைப்புக்கள் கலைகளின் இரம்மியத்தை விளை நிலமாக்கிற்று.

காயத்திரியின் கன்னிப் படைப்பு வரலாற்றில் காலாவதியாகாமல் நீடு வாழும் தகைமை பெற்றுள்ளது. காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களது வாழ்த்துடன் 'ஆரம்' வாசனை பெறுகிறது.

"கன்னித் தமிழின் கோன்மையைப் போற்றக் காசினியெங்ஙணும் ஓங்குகவே, எந்நாளும் இசை கலை ஓவியம் வாழி இறையருள் கொண்டுமே வாழியவே" என்று பூவாக்கம் தருகின்றார். நூலில் வரமாகிறது.

பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களின் கனதியான ஒரு கட்டுரையாக "இனக்குழும அழகியல்" பேறாகிறது. சொல்லாட்சியும், சோர்வுபடாத கருத்தாட்சியும் இதழைச் சோடிக்கிறது. பல்கலை மாணவர்களின் இருப்புக்கு இது வழி சமைக்கும் என்பது உறுதி.

"மிருதங்கமும் கர்நாடக சங்கீதமும்" எனும் தலைப்பினில் பிரம்மஸ்ரீ க. சுவாமிநாதன் சர்மா எழுதிய கட்டுரை நூலில் வலந்தலை நாதம்போல் மிளர்கிறது.

"கலைஞர்களை கலைப்படைப்புக்களை அளவிடும் அளவீடுகள்" என்ற கட்டுரை ஆக்குநரையும் வாசிப்போரையும் தரமாக உயர்த்திவிடுகின்றது. மருத்துவ கலாநிதி இ.லம்போதரன் ஒரு கருத்தைக் கோடிடுகின்றார். ஒரு படைப்பு வெளியில் இருந்து உள்வாங்கி உள்ளிருந்து கருவாகி, உருவாகி, திருவாகி மலர்ந்து அது வெளிவரும் போதுதான் அது கலைப்படைப்பு என்ற அங்கீகாரமாகிறது. மெத்தச் சரியானது.

கலாநிதி ஜயந்தினி விக்னராஜன் வரைந்த கட்டுரை எம்மைப் பரவசம் அடையுமாறு வாசிக்கவும் அனுபவிக்குமாறும் உய்த்துணர வைக்கின்றது. இசையும் மனிதனும் அசையும் இவ்வுலகின் பரோபகாரிகளை உபகாரமாக்குகின்றார்.

அடுத்து வருவது "பஞ்ச தச கமகங்கள்" பற்றிய ஓர் ஆங்கிலக்கட்டுரை. ஸ்ரீ ராக என்பவரால் எழுதப்பட்டது. நல்ல விடயமாக நூலை அலங்கரித்தபோதும், தமிழ் மொழி பெயர்ப்புக்கும் இடமுள்ளதா என்று எதிர்பார்க்கும்படியாக அதன் அழகு நெஞ்சுக்குப் புனர்வாழ்வளித்தது. பின்னர் சமாதானம் கொண்டது.

தொடர்ந்து சிற்பக் கலாநிதி கலாபூஷணம் அளவெட்டி செல்லையா சிவப்பிரகாசம் அவர்களின் நிறைவான தரிசனம் பேறாகிறது. அடேயப்பா! அவரது படைப் புக்களும் பதக்கங்களும், பாராட்டுக்களும் பிரமிப்பூட்டுகின்றன. அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் வண்ண வடிவத்தில் முப்பத்திரண்டு விநாயகத்திரு உருவ வடிவங்கள் வரையப்பட்ட காட்சியும் மாட்சியும் அற்புதம், இத்தகு பேராசானின் உயிரோவியங்கள் ஆயிரம் இன்றும் உயிரோடு வாழ்கின்றன.

மேலும், மண்ணுக்குப் புகழ் சேர்க்கும் மங்கையாக காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் வடித்த கவிதை பல்லவியாக அமைய, கலாசூரி தேசநேத்ரு கலாநிதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்களது பூரணமான சாதனை அநுபல்லவியாகி, இசை ஆரத்திற்குச் சரணமாகிறது. மகாராஜபுரம் சந்தானம், பேராசான் கல்யாண கிருஷ்ண பாகவதர், வீணை வித்துவான் மேஸ்ரோ ஆகியோரின் மாணவி என்று நாமும் போற்றி அவரைப் பெறுமதி ஆக்க முடிகிறது. பெண்களுக்குள் இவரும் புதுமையோடு புவனம் ஆளுகின்றார். கலை கலாசார பண்பாட்டுத் தூதுவராக நம் மண்ணை அலங்கரிக்கின்றார்.

மேலும் ஐ.நாவை தமது இசையால் கட்டிப்போட்டு இரசிக்கவைத்த இந்திய சங்கீதத்தின் பெருமாட்டியான ஸ்ரீமதி. எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் இசை ஆரத்தில் கனதியாக்கப்படுகின்றார்.

நுண்கலைமாணி ஆனந்தகிருஷ்ணன் ஸ்ரீ காந்த் அவர்களால், "நாட்டிய மரபில் நிருத்தம்" என்ற கட்டுரையானது, சுத்தநிருத்தம், கான வாத்திய அனுசாரி நிருத்தம், கீதகா அபிநய உன்முக நிருத்தம் என மூன்று பிரிவுகளையும் எடுத்தியம்புகிறது.

தொடர்ந்து யாழ்.பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வகையில் "நாட்டுக் கூத்துக் கலையின் தோற்றமும் வளர்ச்சியும்" என்ற கட்டுரையினை எமக்கு உரித்தாக்குகின்றார் முதுகலைமாணி றஜிதா அரிச்சந்திரன். பல தகவல்களைப் பயன்படுமாறு வரவாக்கியுள்ளமை அவரைப் பரவும்படி செய்துள்ளது. எடுத்துக்காட்டாக, ஒரு சில பாடல்களை உதாரணமாக்குவதற்குக் கட்டுரை நீண்டு விடுமோ என்ற கட்டுரையாளரின் வினாவும் காரணமாகி இருக்கலாம் என்பதை வாசகர்கள் உணரவும் முடிகிறது.

திருமறைக் கலாமன்றத்தின் பணி நீடித்து வாழ வேண்டும். யாழ்ப்பாணத்திற்கு இம்மன்றம் பெருவரமாக அமைகிறது. ஆம்!

காயத்ரி மந்திரம் தரும் பாக்கியம், அடேயப்பா! இத்தனை மகிமையா? மந்திரங்களின் கிரீடம் அல்லவா!. காந்தி சொன்ன கூற்று அதாவது "யார் ஒருவர் காயத்ரி மந்திரத்தினை ஜபிக்கின்றாரோ, அவர் எந்தவொரு நோய்க்கும் ஆளாகமாட்டார்" என்பதாகும்.

நுண்கலைமாணி லோ ஸ்ரீகுமார் அவர்களது "இசையில் யோகப் பயிற்சியின் பங்களிப்பு" வாசகர்களுக்கு ஊட்டமளிக்கிறது என்பது மட்டுமல்ல உற்ற துணையுமாகிறது. நம் மண்ணுக்கு இது அவசியம் வேண்டப்படுகிறது.

நிறைவாக, ஆரபி இராகம் எம்மைப் பாடவைக்கிறது. தியாகராஜ ஆராதனையை ஞாபகமூட்டுகிறது. இறுவட்டு இணைக்கப்பட்டிருப்பது ஆரத்தின் உபகார மான்மிய மாகிறது. மாருதி அச்சகம் உச்சமாகிறது. தவமான இந்நூல் வரலாறாகிறது. காயத்திரியும் மந்திரமாகிக் காத்திரமாக்கப்படுகின்றார். காலமறிந்த ஒரு பாத்திரமாகின்றார் காயத்திரி. இதழ் இரண்டுக்கும் நாம் ஆவலோடு வரவேற்கின்றோம்.

## காலநதிக்கெதுதான் ஈடு?

ஞாலப் பெருவெளியில் நானிறங்கி
நின்றிருந்தேன்...
தூலத்தை, சூக்குமத்தை, துகள்தூசி
துணிக்கைகளை
சாலச் சிறந்தவையை, சங்கடத்தை, சவால்களினை
ஜாலத்தை, ஜாடையிலே ஜம்பத்தை,
மற்றவைகள்
போலக் கிளம்புகின்ற பொய்மைகளை
மந்திரத்தை, மாயத்தை,
நீலக் கடலை, நித்திலத்தை,
நிகழ்தகவாய்
நிச்சயத்துக் கப்பாலே நிகழுகின்ற நிலவரத்தை
பச்சாதாபத்தை, பாவத்துக்
கிரங்குவதை
அச்சாவென் றனைவருமே ஆர்ப்பரிக்கும்
அதிசயத்தை...
நச்சுகளை.. நாகத்தை.. நல்லவையுள்ள தல்லவையை
நேரத்தை, நிமிஷத்தை, நாளை, பொழுதுகளை
ஓரத்தின் வழிவிழுத்தி ஒன்றாக்கிக்
காலநதி
இன்னும் நுரைததும்ப நுரைததும்ப நுரைததும்ப
பொன்னை, மணியை, புழுத்தவையை,
புதுமைகளை,
மன்னுயிரை, மண்ணை, மாற்றத்தின்
மாற்றத்தை
தன்னுள் இழுத்தபடி கச்சிதமாய்க் கரைபுரண்டு
இன்னுந்தான் ஓடுதது எவருந் தடுக்காமல்.
நான்,நீ, அவன்,அவர்கள், அதுகள்
அவையாவும்
அதற்குள்ளே
அள்ளுண்டு போவோம் எதுவும் தப்பாது
காலநதிக் கெதுதான் ஈடு?

**வ.வடிவழகையன்**
காரைநகர்





அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்குப் பிரத்தியேகமான அடையாள அட்டை வழங்குதல், ஆலயங்களுக்கான நிதி உதவி வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகளை உள்ளடக்கிய வடக்கு மாகாணத்திற்கான ஆரம்ப நிகழ்வு கடந்த சனிக்கிழமை 7ஆம் திகதி யாழ்ப்பாணம் - வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதியின் "நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" எனும் கொள்கைக்கு அமைவாக கலாசாரம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் புத்தசாசனம், கலாசாரம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் ரேணுகா அமரசிங்க, வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் உமாமகேஸ்வரன், ஆலய பரிபாலன சபையினர் மற்றும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

ஆர். கே.மேனன்
ஆசிரியர்
கொக்குவில் இந்துக் கல்லூரி



# கழிவகற்றல் முகாமையும்
## காலத்தின் கட்டாய தேவையும்

காலங்காலமாக இலங்கை நிர்வாக முகாமையில் புரையோடிக்கிடக்கின்ற பிரச்சினைகளில் ஒன்று கழிவகற்றல் முகாமையில் உள்ள இடர்பாடுகளாகும். இது நாட்ளாவிய ரீதியில் பெரும் பிரச்சினையாக இன்று விஸ்வரூபம் பெற்றுள்ளது. இதில் பல நடைமுறைப் பிரச்சினைகள் இருப்பினும் அவற்றை எதிர்கொண்டு தீர்க்க வேண்டியது கட்டாய கடமையல்லவா? பலமாற்று வழிகள் இதில் முன்னெடுக்கப்பட்டும்கூட, அனைத்தும் இன்று தோல்வியில் வந்து நிற்கின்றன. இதற்கு யார் காரணம்? யாருடைய தவறு? என்பது ஒரு புறமிருக்க, தோல்விக்கு மறுமுனை தீர்வு என்ன என்பது தொடர்பாகச் சிந்திக்க வேண்டுமல்லவா? ஆபத்தான சீர்கேட்டோடு தொடர்புடைய விடயம் என்பதனால் ஆளை ஆள் குறைகூறி காலத்தைக் கடத்த முடியாதல்லவா? ஆகவே இது தொடர்பாகச் சிந்திப்போம் இந்த வார காரத்தில்.

**யார் பொறுப்பு**

சட்டத்தின் மூலம் அனுமதியளிக்கப்பட்ட சேவைகளை வழங்குதல் உள்ளூராட்சி நிறுவனங்களின் பொறுப்பாகும். குறித்த பிரதேச மக்களின் வசதிகள், நலனோம்புகை மற்றும் நல்வாழ்வு என்பவற்றுக்கான சேவைகளை வழங்க வேண்டியது மாநகரசபை, நகரசபை மற்றும் பிரதேச சபை உள்ளடங்கிய உள்ளூராட்சி நிறுவனங்களின் கடமையாகும். 1987 ஆம்



ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் பிரகாரம் உள்ளூராட்சிச் செயற்பாடுகள் மாகாண சபையின் கீழ் ஒப்படைக்கப்பட்டன. இதன் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குப் பின்வரும் சேவைகள் ஒப்படைக்கப்பட்டன. அவையாவன:

1) நிர்வாகம் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தும் சேவைகள்
2) பொதுச் சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாடு
3) சூழலியல் பாதுகாப்பு
4) பொதுப் பாதைகள், தெருக்கள் மற்றும் பொது வழங்கல் சேவைகளைப் பேணுதல் என்பனவாகும்.

அந்தவகையில் இது தொடர்பாகப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் மாநகர சபை, நகரசபை மற்றும் பிரதேச சபை செயலாளர்கள். " இதற்குத் நாங்கள் மாத்திரம் பொறுப்பல்லர். எங்களை மாத்திரம் குற்றவாளிகளாக்க பார்ப்பதுவே பொதுமக்கள் விடும் பெரிய தவறு" எனவும் கூறி பொலிஸாரிடம் நீங்கள் முறைப்பாடு செய்யலாம் என முறைப்பாடுகளைத் தட்டிக்கழித்து வருகின்றனர். பொலிஸாரிடம் யார் முறைப்பாடு செய்வது? பொதுமக்களா அல்லது மூன்று அறிவுறுத்தல் கடிதங்களுக்குபின் பிரதேச சபைகளா? என்பது தொடர்பான சிக்கல்கள் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளன. கழிவகற்றலை முகாமை செய்தல் என்பது சிக்கலுக்கு உரியதாக இருப்பினும் தீர்வைத் திசைமுகப்படுத்தி பொறுப்புக்கூற வேண்டியவர்கள் மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை நிர்வாகத்தினரே ஆகும் என்பதை எவரும் மறுக்க முடியாது.

**மக்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்**

அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடைந்துவரும், ஏன் அபிவிருத்தியடையாத சில நாடுகளில்கூட, இதன் முகாமை சீராக இடம்பெறும்போது, எமது நாட்டில் மாத்திரம் இந்த கழிவகற்றல் பொறிமுறை சிக்கலுக்கு உரியதாக இருப்பதற்குக் காரணம் என்ன? என்பது தொடர்பாக நோக்கினால், மாற்றம் பெறாத மக்களின் மனநிலைகளே அதற்கு அடிப்படைக் காரணம் எனக் கொள்ள முடியும்.

**சுயநல சுத்திகரிப்பின் பெயரில் பொது நல அபகரிப்பை மேற்கொள்கிறோம்**

நாமும் சுத்தமாக இருந்து, நாடும் சுத்தமாக இருத்தல் வேண்டும் என்கிற சிந்தனை எம்மிடத்தில் அரிதாகக் காணப்படுகின்றது. ஒரு வீட்டின் கழிவை அகற்றும் பொறிமுறையில் நாம் பல தவறுகளை விடும்போது பல வீடுகளில் கழிவுகளை அகற்றுவதில் ஏற்படும் தவறுகளை எவ்வாறு நாம் விமர்சிக்க முடியும்?

- உரிய முறையில் கொள்கலன்களை வைத்தும் வெளிப்புறமாக வீசிவிட்டுச் செல்கிறோம்.
- பொருத்தமான அறிவுறுத்தலை ஏற்றுக் கழிவுகளைத் தரம் பிரித்து கொட்ட மறுக்கின்றோம்.
- தெருவோரங்களில் கழிவுகளை வீசிவிட்டுச் செல்கிறோம்.
- மலக்கழிவுகளை (பம்பஸ்) நாய்கள் நடமாடும் இடங்களில் கொட்டுகிறோம்.
- இறைச்சிக்காகக் கொன்ற விலங்குக் கழிவுகளைப் பொருத்தமற்ற முறையில் வீசுகின்றோம்.

இவ்வாறு பொதுமக்களாகிய நாம் விடும் தவறுகள் பல. இவற்றை முதற்கண் நாம் சீர்செய்ய வேண்டும். நாம் நாமாகத் திருந்தும்வரை கழிவகற்றல் முகாமைக்கு எந்தப் பொறிமுறைகளை அறிமுகப்படுத்தியும் அது வெற்றி பெறமாட்டாது.

**விளைவு என்னவாகும்**

கழிவுப்பொருள்கள் தொடர்ச்சியாக ஓர் இடத்தில் இருந்து கசிவதால் ஊறு விளைவிக்கும். இயற்கைச் சமநிலை குன்றும், விவசாய நிலங்கள் பாதிப்புறும், நீர்நிலைகள் மாசுறும், இலங்கையின் கழிவகற்றல் முகாமைத்துவத்தில் உள்ள பெரும் குறைபாட்டை மீதொட்டமுல்ல குப்பை மேட்டுச் சம்பவம் பதிவு செய்து இருக்கின்றது. குப்பைமேட்டுச்சரிவால் ஏற்பட்ட உயிரிழப்புச் சம்பவத்தை அறிந்தபின் உலகமே கேலியாக இலங்கையை பார்த்த சந்தர்ப்பங்கள் உண்டு. எத்தனை வழிகள் இருந்தும் எம்மவர்கள் பொருத்தமற்ற இடங்களில் கழிவுகளைக் கொட்டிவருகின்றமை நகைப்புக்கு உரியதாக மாறியது.

**மாற்று வழிகள்**

கழிவுகளை பயனுடையதாக்க மேற்குலக நாடுகள் பல பொறிமுறைகளை மேற்கொண்டு வருகின்றன. அவையாவன:

1) சாம்பலாக்குதல் (வெப்பப் பரிகார முறை)
2) மீள்சுழற்சி முறைகள் (pvc, ldpe, pp, ps பொருள்களுக்கான மீள்சுழற்சி)
3) உயிரியல் மறு சீராக்கல்
4) சக்தி மீளப்பெறுகை

போன்றனவாகும். ஆஸ்திரேலியா உட்படப் பல நாடுகளில் கழிவுப்பொருள்களைச் சாலையோரத்தில் சேகரிக்கும் முறைகளைப் பயன்படுத்துகின்றனர். ஒவ்வொரு நகர வீட்டு குடியிருப்புக்கும் மூன்று தொட்டிகள் வழங்கப்படுகின்றன. ஒன்று மீட்கப்படும் பொருள்களுக்கானது. இன்னொன்று பொதுவான கழிவுப் பொருள்களுக்கானது. மற்றையது தாவரக் கழிவுப் பொருள்களுக்கானது. இவற்றை பெரும்தொகையான விலை கொடுத்து வாங்கிக்கொள்ள பல தொழில்நுட்பவியலாளர்கள் முண்டியடிப்பர். இதனால் அதிக வருமானங்கள் இந்த இரு துருவத்தினரும் பெற்றுக் கொள்வர். இந்நிலை இலங்கையில் வளர்ச்சியடையாமையும் இதன் முகாமைக்கு பெரும் தடையாக உள்ளது. ஆகவே முதலீட்டாளர்கள் இது தொடர்பாக சிந்திக்க வேண்டும். மேற்குலக நாட்டு பொறிமுறைகளைப் பின்பற்றுவதுடன் நீங்களும் சம்பாதிக்கலாம். உள்ளூராட்சி நிறுவனங்களும் வருமானத்தை சம்பாதிக்கலாம். உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இதனால் வருமானம் வரும்போது அவர்களும் சேமிப்பதற்கான பொறிமுறைகளை விரிவுபடுத்துவர். இதனால் நாடு தூய்மை பெறும். வியாபாரத்தின் பின்னணியில் விருத்தியடையும் சில பொறிமுறைகள் நிச்சயம் வளர்ச்சி பெறும், விருத்திபெறும். சேவை எனும் பெயரில் வருவாயின்றி இடம்பெறுவதே இலங்கைக் கழிவகற்றல் முகாமையில் உள்ள இடர்பாட்டுக்கு முக்கிய காரணமாகும். இதற்கு மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கழிவுகளைத் தரம்பிரித்தல் என்பது வெற்றி பெறாவிடின் முதற்கோணல் முற்றும் கோணல்தான். இதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பே மிக முக்கியம்.

பல வழிகளில் அடுத்த சந்ததி வாழ முடியாத பூமியாக நாம் எமது தாய் நிலங்களை மாற்றி வருகிறோம். மரங்களை அழிக்கிறோம், மழை வீழ்ச்சியைத் தடுக்கிறோம், குழாய்க் கிணறுகளை அதிகளவில் உருவாக்கி நிலக்கீழ் ஆற்றுநீர்களைக் கொள்ளையிடுகிறோம். ஊற்று நீரில் உவர்நீரைக் கலக்க விடுகிறோம், வளியை மாசுபடுத்துகிறோம், இரசாயன உரங்கள், கிருமிநாசினிகளை விசிறி மண்ணின் நுண்ணங்கிகளை அழிக்கிறோம். விளைச்சலைக் கூட்ட வேண்டும், சொத்துக்களைப் பெருக்க வேண்டும், வருவாயை அதிகரிக்க வேண்டும் என்பதை மாத்திரம் குறிக்கோளாகக் கொண்ட செயற்பாடுகளே இன்று எம்மவர் மத்தியில் மலிந்துள்ளனவே தவிர தூர நோக்கான சிந்தனைகள் அருகிவிட்டன. இருக்கும்வரை வாழ்ந்தால் போதும் எனும் நிலைமாறி இல்லாதபோதும் எம் சந்ததியை வாழ வழிவிடும் சிந்தனைகளை வளர்த்துக் கொள்வோம்.

வாரம் ஒரு காரம்









## படத்தில் ஆறு வித்தியாசங்கள் கண்டுபிடிப்போம்…!

## பொன்மொழிகள்

1. எல்லோரையும் நேசிப்பது சிரமம். ஆனால் பழகிக் கொள்ளுங்கள்
2. நல்லவர்களோடு நட்பாயிரு. நீயும் நல்லவனாவாய்
3. காரணமே இல்லாமல் கோபம் தோன்றுவதில்லை. ஆனால் காரணம் நல்லதாய் இருப்பதில்லை.
4. யார் சொல்வது சரி என்பதல்ல, எது சரி என்பதே முக்கியம்.
5. ஆயிரம் முறை சிந்தியுங்கள். ஒருமுறை முடிவெடுங்கள்.
6. பயம்தான் நம்மைப் பயமுறுத்துகிறது. பயத்தை உதறி எறிவோம்.
7. நியாயத்தின் பொருட்டு வெளிப்படையாக ஒருவருடன் விவாதிப்பது சிறப்பாகும்.
8. உண்மை புறப்பட ஆரம்பிக்கும் முன் பொய் பாதி உலகத்தை வலம் வந்துவிடும்.
9. உண்மை தனியாகச் செல்லும். பொய்க்குத்தான் துணை வேண்டும்.
10. வாழ்வதும் வாழ்விடுவதும் நமது வாழ்க்கைத் தத்துவங்களாக ஆக்கிக்கொள்வோம்.

# குட்டி முயலின் குறும்பு!

ஒரு கிராமத்தில், அடர்ந்த காடு இருந்தது. அதில், ஒரு குட்டி முயல் வசித்து வந்தது. சேட்டை செய்து விளையாடி, மற்ற மிருகங்களை வம்புக்கிழுத்து, சந்தோஷமாக பொழுதை போக்கியது.

அன்று யாரை வம்புக்கு இழுக்கலாம் என, யோசித்தது முயல். அப்போது, மரக்கிளைகளை முறித்து, இலைகளைத் தின்ற யானையைக் கண்டு, "அம்மாடி… எவ்வளவு இலைகளை சாப்பிடுற" என்றது.

"என் உடம்பு மிகவும் பெரியதல்லவா நிறைய தின்றால் தான், வலிமையாக இருக்க முடியும்" என்றது யானை.

"வலிமையா உனக்கா என்னை விடவா" என்று, ஏளனம் செய்தது முயல்.

'என்ன சொல்கிறாய்… நான் பலசாலி இல்லையா" என்று திகைப்புடன் கேட்டது யானை.

சிறிதும் அலட்டிக்கொள்ளாமல், "நீ பெரியவன் என்று சொல் ஒப்புக் கொள்கிறேன்; பலசாலி என்றெல்லாம் பொய் சொல்லாதே" என்றது முயல்.

யானைக்கு அடக்க முடியாமல் சிரிப்பு வர, தும்பிக்கையை உயர்த்தி சுழற்றியது. தந்தத்தை ஆட்டி ஏளனம் செய்தது.

இதைக் கண்ட முயல், "என் பலம் உனக்கு தெரியாது; அதனால் தான் சிரிக்கிறாய். உன் உடலின் நடு பாகத்தில், கயிறு கட்ட என்னை அனுமதி; அந்த கயிறாலே இழுத்து, உன்னை கடலுக்குள் வீசிடுவேன்" என்றது.

முயலின் பீற்றல், யானைக்கு கோபத்தை தந்தது. சரியான பாடம் கற்பிக்க எண்ணியது. வயிற்று பாகத்தில், ஒரு கயிறைக் கட்டி இழுக்க, முயலை அனுமதித்தது யானை.

மறுநொடியே பலமிக்க கயிறை எடுத்து வந்தது முயல். "ரொம்ப இறுக்கமா கட்டாதே… எனக்கு வலிக்கும்" என, பயத்துடன் கூறுவது போல, முயலை நையாண்டி செய்தது யானை.

"என் பலம் தெரியும் வரைக்கும் தான் சிரிப்பெல்லாம்… இழுக்கும் போது, விழுந்து காயம் பட்டுட போறே! ஜாக்கிரதையா பிடிச்சுக்கோ'" என, கடலை நோக்கி நடந்தது முயல்.


கடற்கரையில், பெரிய திமிங்கலம் ஒன்று நீந்திக்கொண்டிருந்தது. அதைக் கண்டதும், உற்சாகமடைந்த முயல், "வலுவில்லாத திமிங்கலமே" என, வம்புக்கிழுத்தது.

யானையிடம் சவால் விட்டது போலவே, திமிங்கலத்திடமும் சவால் விட்டு, திறன் காட்ட அழைத்தது. திமிங்கலத்திடம், அதன் உடல் பாகத்தில், கயிறைக் கட்ட அனுமதி வாங்கியது.

யானையைக் கட்டிய கயிற்றின் மறுமுனையை, திமிங்கலத்தின் உடலில் கட்டியது முயல்.

மரங்கள் அடர்ந்த பகுதி என்பதால், யானையும், திமிங்கலமும், ஒன்றை ஒன்று பார்க்க முடியவில்லை.

கயிற்றைக் கட்டியவுடன், கொரிப்பதற்கு ஒரு கேரட் எடுத்து, மரத்தில் ஏறி அமர்ந்த முயல்,



'இழு' என, குரல் கொடுத்தது.

"இழுக்கிற இழுப்பில், முயலை தூக்கி, கண்காணாத பகுதிக்கு வீச வேண்டும்" என, முடிவு செய்திருந்த யானை, பலத்தை பிரயோகித்தது. எதிர் முனையில் இழுப்பது யார் என்பதை அறியாத திமிங்கலமும் சளைக்கவில்லை. கடுமையான இழுபறி நடந்தது.

'அடேங்கப்பா குட்டி முயலுக்கு இத்தனை வலுவா" என, நினைத்து அரண்டு இழுத்தன. மரத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த முயலுக்கு ஒரே சிரிப்பு.


ஒரு கட்டத்தில், இழுவை தாங்காமல் கயிறு அறுந்தது; யானையும், திமிங்கிலமும் எதிரெதிர் திசையில் விழுந்தன.

தப்பித்தோம் பிழைத்தோம் என, திரும்பி பார்க்காமல் ஓட்டம் பிடித்தது யானை. திமிங்கலமும் வேகமாக நீந்தி மறைந்தது. பின், முயலை எப்போது பார்த்தாலும், ஓடி மறைந்து கொண்டது யானை.


புத்திசாலி முயல், வலிய மிருகங்களை அடக்க மேற்கொண்ட உத்தியைப் பார்த்தீங்களா… முறையாகச் சிந்தித்தால், எந்தச் செயலிலும் வெல்லலாம்.

## ஆண் மயிலுக்கு மட்டும் அழகிய தோகை இருப்பது ஏன்?

பொதுவாகவே உயிரினங்களில் ஆண் இனம் வசீகரமாகத்தான் இருக்கிறது. பெண் பறவைகளைக் குடும்பம் நடத்த அழைப்பதற்காக ஆண் இனம் கண்கவர் வண்ணங்களிலும் வசீகரமான தோற்றத்திலும் இருக்கக்கூடிய பண்பை இயற்கையாகவே பரிணாம வளர்ச்சியில் பெற்றிருக்கின்றன. வண்ணம், வலிமை, இனிமை எல்லாம் பார்த்தே ஓர் ஆண் மயிலைத் தேர்ந்தெடுத்து, பெண் மயில் சந்ததியை உருவாக்குகிறது.



## இந்தப் பூனைக் குட்டியின் சரியான நிழல் எது?






## ஊஞ்சல்

ஆல மரத்து ஊஞ்சலாம்
அமர்ந்து ஆடிப் பாடலாம்
காலை உயர நீட்டியே
கீழும் மேலும் ஆடலாம்.

விண்ணை நோக்கிப் போகலாம்
வடக்குத் தெற்குப் பார்க்கலாம்
பண் இசைத்துப் பாடலாம்
பகல் முழுதும் ஆடலாம்.

பழக்க மில்லாப் பிள்ளைகள்
பையப் பைய ஆடலாம்
பழக்கமான போதிலே,
பறந்து விண்ணில் ஆடலாம்.

| | |
|---|---|
| அன்று: | குறைந்த வருமானம் நிறைந்த நிம்மதி |
| இன்று: | அதிக வருமானம் குறைந்த நிம்மதி |
| அன்று: | கைவீசி நடந்தோம் |
| இன்று: | கைபேசியுடன் நடக்கிறோம் |
| அன்று: | படித்தால் வேலை |
| இன்று: | படிப்பதே வேலை |
| அன்று: | ஓடினோம் வயிற்றை நிறைக்க... |
| இன்று: | ஓடுகிறோம் வயிற்றை குறைக்க |
| அன்று: | உணவே மருந்து |
| இன்று: | மருந்தே உணவு |




டேய் எதுக்குடா தூக்கிட்டு போறிங்க
**FB Radha**



டேய் உனக்கு இரும்மல் வருது பாரு கொரானா வைரஸ் அறிகுறியா இருக்கும் டா



அடேய் தண்ணீ குடிச்சு பொறை ஏறி இரும்பல் வருதுடா என்ன விடுஙகடா

யாழ்பாணத்தில இருந்து வெளியிடத்துக்கு ஏற்றுமதி செய்தா அது கலியாண பொண்ணு




வெளியிடத்தில இருந்து யாழ்பாணத்துக்கு இறக்குமதி செய்தா அது வேட்பாளர்


# ‘சுருளி’யாக களமிறங்கும் தனுஷ்


‘பேட்ட’ படத்தைத் தொடர்ந்து இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ் நடிகர் தனுஷ் நடிக்கும் 40ஆவது படத்தை இயக்கி வருகிறார். இந்தப் படத்துக்கு ‘ஜகமே தந்திரம்’ எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப் படத்தில் தனுஸுக்கு ஜோடியாக நடிகை ஐஸ்வர்யா லட்சுமி நடிக்கிறார். சந்தோஷ் நாராயணன் இந்தப் பட்த்துக்கு இசையமைத்துள்ளார்.

மேலும் பிரபல ஹொலிவுட் நடிகர் ஜேம்ஸ் காஸ்மோ முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இந்தப் படத்தின் மோஷன் போஸ்டர் அண்மையில் வெளியான நிலையில் ‘ஜகமே தந்திரம்’ திரைப்படம் உழைப்பாளர்கள் தினமான மே முதலாம் திகதி வெளியாகும் என்றும் அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் படத்தின் மற்றொரு போஸ்டர் ஒன்று வெளியாகியுள்ளது. அதில் படத்தில் தனுஷின் கதாபாத்திரம் ‘சுருளி’ என பதிவிட்டு விரைவில் வருகிறான் என்று குறிப்பிட்டுள்ளார். போஸ்டர் வெளியான சில நிமிடங்களிலேயே இணையத்தில் தனுஷ் ரசிகர்களால் ட்ரெண்டாக்கப்பட்டு வருகிறது.



கொரோனா வந்து சாகுறமோ இல்லையோ.

இந்தக் கொரோனா பத்தி இவனுங்க கிளப்பி விடுறதைப் பார்த்து ஹார்ட் அட்டாக்ல வந்திடும் போல கிடக்கு..

# ருவீற்ஸ்...

மாஸ்டர் பீஸ்@Kannan_Twitz

பூட்டப்பட்ட கதவின் வாசலில்
யாசிக்க ஏதும் இருக்காது,
இருந்தும், நின்று யாசித்துக்
கொண்டிருக்கும் நேசம்!


கோழியின் கிறுக்கல்!!

எதற்காக அழைத்தோம் என்பதை
மறந்து பேசிக் கொண்டு இருக்கும்
நட்பு அனைவருக்கும் வாய்த்து
விடுவதில்லை!!

மெத்த வீட்டான்@HAJAMYDEENNKS

கோடை விடுமுறையில் சுற்றுலா கூட்டி
செல்லாமல் குழந்தைகளிடமிருந்து
அப்பாக்களை காப்பாற்ற போகிறது
கொரோனா வைரஸ் பீதி !


அகரன்™ (SeenMani)



பணம் இல்லையெனில்
என்ன செய்வதென்று
புரிவதில்லை நமக்கு.
இருந்தாலோ என்ன
செய்கிறோம் என்று
புரிவதில்லை நமக்கு.,

அகரன்™ (SeenMani)

தொழில்நுட்பம் மனித உறவுகளை விடவும்
பலமாகி ஆட்சி செய்யும் போது இந்த
பூகோளம் முட்டாள்களினால் நிறைந்து
அழிவை நோக்கி பயணிக்கும்





# சிரிக்க..

**கேள்வி:** மதுவுக்கும் விஷத்துக்கும் என்ன வித்தியாசம் தெரியுமா?
**பதில்:** மது குடிச்சா நாம ஆடுவோம். விஷம் குடிச்சா நம்ம முன்னாடி மத்தவங்க ஆடுவாங்க

**கேள்வி:** என் மனைவிக்கு தெரியாம நான் அவ பீரோவை திறந்ததை அவ பார்த்திட்டா...!!
**பதில்:** அய்யோ...!! அப்பறம்?
“சாத்திட்டா”

**கேள்வி** : மயிலே மயிலே, இறகு போடுன்னா அது போடாது! ஏன் அப்படி சொல்றே?
**பதில்:** மயிலுக்கு தமிழ் தெரியாதே!

**கேள்வி** என் கணவர் எப்பவுமே டாக்டர் அட்வைஸ்படி தான் நடப்பாரு...
**பதில்** : அட... நடக்கறதுக்குக் கூட டாக்டர் அட்வைஸ் கேட்ப்ராரா என்ன!

**கேள்வி** : அடிமைக்கும், கொத்தடிமைக்கும் என்ன வித்தியாசம்?
**பதில்** : ஒரு பெண்ணைக் காதலிக்கும்போது நீங்க அடிமை.அதுவே அந்த பெண்ணையே கல்யாணம் பண்ணி டீங்க்ன்னா நீங்க கொர்த்தடிமை....



# தாயகம் அறக்கொடையால் மாணவர்களுக்கு உதவிகள்

'தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதியம்' மாதந்தோறும் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான உதவித் தொகைகளை சமூகத்தில் பொருளாதார ரீதியில் நலிவுற்றோருக்கு வழங்கி வருகின்றது. அந்தத் திட்டத்தில் இந்த மாதத்துக்கான உதவிக் கையளிப்பு அண்மையில் யாழ். ஸ்ரீலக்சுமி நாராயண மண்டபத்தில் நடைபெற்றது.

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 220 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள், சீருடைகள், காலணிகள், சைக்கிள்கள் என்பன வழங்கப்பட்டன. சின்மயா மிஷன் சுவாமிகள் நிதாகாசானந்தா, தாயகம் அறக்கொடை நிலையத்தின் நிறுவுநர் வீ. சிறிதரன் தம்பதிகள் இந்தப் பொருள்களைப் பயனாளிகளுக்கு வழங்கினர். (ம)

# முஸ்லிம்கள் வாக்களிக்க ராணுவம் தடை ஏற்படுத்தும்?

## அச்சம் தெரிவிக்கிறார் ரிசாத்

யாழ்ப்பாணம், மார்ச் 11

ஏப்பிரல் 25ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் முஸ்லிம் மக்கள் வாக்களிக்க இராணுவம் தடை ஏற்படுத்தலாம் என்ற அச்ச நிலை காணப்படுவதாக முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் அதிகரித்துக் காணப்படும் இராணுவச் சோதனைச் சாவடிகள் மற்றும் இராணுவப்பிரசன்னம் என்பன வாக்காளர்களை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடாக அமைந்துள்ளது.

முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில், மக்களை வாக்களிக்க விடாது இராணுவத்தால் தடை ஏற்படுத்தப்படும் என்ற அச்சம் உள்ளதாக ரிசாத் பதியுதீன் தேர்தல்கள் ஆணைக் குழுவின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

நாட்டில் முஸ்லிம் மக்கள் விரோதிகளாக சித்தரிக்கப்பட்டு வாக்களிப்புக்கு குந்தகம் ஏற்படுத்தும் நிலைமை காணப்படுகின்றது. குறித்த செயல் இராணுவத்தினரின் துணையுடன் முன்னெடுக்கப்படும், என்ற நியாயமான அச்சம் காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக மட்டக்களப்பு, ஓட்டமாவடிப் பிரதேசத்தில் இந்த நிலைமையை ஏற்படுத்த முயல்வதாக தெரியவருகின்றது. ஏனெனில், இதே நிலைமை 2010ஆம் ஆண்டிலும் ஏற்படுத்தப்பட்டது. இதேவேளை, கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் படையினரின் பிரசன்னம் முறைப்பாட்டையடுத்து தெரியப்படுத்தப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பில் தற்போதைய அரசு கவனம் செலுத்துவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தான் கருதவில்லை என்றும் நேற்றைய தினம் ஆணைக்குழுவினருடன் இடம்பெற்ற சந்திப்பின் போது தாம் தெரிவித்ததாகவும் இது சம்மந்தமாக தாம் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவினர் தெரிவித்ததாக ரிசாத் பதியுதீன் உதயனுக்குத் தெரிவித்தார். (ந-105)

**பொதிகள் சேவை**
வெளிநாடுகளுக்கான பொதிகள் 3 நாள்களில் அனுப்பலாம்.
UK 540/= Germany 640/= France 650/=
Lanka Cargo Worldwids Express
315, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். 076 485 4092

**வேலையாள்கள் தேவை**
கிளிநொச்சி முறுகண்டியில் இயங்கும் தனியார் சைவ உணவகத்திற்கு
- மனேஜர்
- உணவு பரிமாறுபவர்
- சுத்திகரிப்பாளர்
- காசாளர்

ஆண், பெண் இருபாலாரும் உடன் தேவை.
தொடர்புகளுக்கு - 077 386 6250

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**


இலங்கை இளைஞர் பாராளுமன்ற தேர்தல் 2020இல் நல்லூர் பிரதேச செயலக பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க உபதலைவர்
பிரதாபன் சூரியபிரகாஷ்
அவர்களை பழைய மாணவர் சங்கம் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பழைய மாணவர் சங்கம்
கொக்குவில் இந்துக் கல்லூரி

**யா/அராலி இந்துக்கல்லூரி**
**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

செந்தில்நாதன் சனந்தன்
Business University of Costa Rica – London இன் 5ஆவது பட்டமளிப்பு விழாவில் கடந்த 04.03.2020ம் திகதி எமது பாடசாலை ஆசிரியரான திரு.செ.சனந்தன் கல்வியியல் முதுமாணி பட்டத்தைப் (M.Ed.) பெற்றுக்கொண்டதையிட்டு மனநிறைவுடன் உளமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்களையும் பதவியுயர்வுகளையும் பெறவும் வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/அராலி இந்துக் கல்லூரி

**விற்பனைக்கு**
பிறவுண் றோட் கல்வாரி சேர்ச் அருகில் உள்ள லேனில் 5பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 076 702 3565

**மணமகள் தேவை**
யாழ் இந்து கௌரவ 40 வயது சொந்தமாக தொழில் புரியும் (வீடியோ கிராபிக்ஸ் வெளிநாட்டு வேலை) மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்ப்பில்லை
தொடர்புகளுக்கு - 077 905 8615 (வைபர்)

**மணமகன் தேவை**
அவிட்ட நட்சத்திரம் 98 ம் ஆண்டு வவுனியாவில் வசிக்கும் அழகிய மணமகளுக்கு வெளிநாட்டு PR மணமகன் தேவை.
0094777932262/004477712590043

**விற்பனைக்குண்டு**
வயாவிளான் இறையில் அமைந்துள்ள நில.பர 20 விஸ்தீரணமுள்ள ஆதனம் விற்பனைக்குண்டு.
077 908 7643

**வேலைக்கு ஆள்தேவை**
கொடிகாமத்தில் இயங்கும் பலசரக்குக் கடைக்கு வேலைக்கு ஆள்கள் தேவை. ஆண்கள் மட்டும் தென்மராட்சியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது
077 969 8914

# அவசரமாகக் கூடுகின்றது சுதந்திர கட்சி மத்திய குழு

## கழுகுக் கதையால் மைத்திரிக்குச் சோதனை

கொழும்பு, மார்ச் 11

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் விசேட மத்திய செயற் குழுக் கூட்டம் இன்று மாலை கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு செயற்குழு உறுப்பினர்களுக்கு சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

பொதுத் தேர்தலுக்கான பரப்புரை, ஆசனப் பங்கீடு உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்படவுள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு எதிராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் சொற்கணைகளைத் தொடுத்து வருகின்றனர்.

அந்தக் கட்சியை கூட்டணியில் இணைத்திருக்கக் கூடாது என்றும், மைத்திரிக்குச் சார்பான எந்தவொரு வேட்பாளருக்கும் மக்கள் வாக்களிக்கக் கூடாது என்றும் பிரசன்ன ரணதுங்க உள்ளிட்ட உறுப்பினர்கள் சரமாரியாக விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

இந்த நிலையில் மைத்திரிபாலவால் கூறப்பட்ட கழுகுக்கதையும் அவருக்குப் பெரும் தலையிடியாக மாறியுள்ளது. அந்தக் கதையை வைத்தும் மைத்திரி மீது நாலா புறங்களில் இருந்தும் தாக்குதல் நடத்தப்படுகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இன்று சு.கவின் மத்தியகுழு கூடுகின்றது (எ-44)

# ஆணைக்குழுவின் செயலாளருக்கு மீளபிடியாணை

## பதில் பொலிஸ்மா அதிபரிடம் விளக்கம்

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் பேர்ள் கே.வீரசிங்கவை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு கொழும்பு மூவரடங்கிய விஷேட மேல் நீதிமன்றம் நேற்று மீண்டும் பிடியாணை பிறப்பித்துள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பிடியாணையை நடைமுறைப்படுத்துமாறு நீதிமன்றம் பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவுக்கு உத்தரவிட்டுள்ளது.

பிடியாணையை நடைமுறைப்படுத்தத் தவறினால் தனிப்பட்ட ரீதியில் நீதி மன்றில் முற்பட்டு விளக்கமளிக்குமாறும் கொழும்பு மூவரடங்கிய விஷேட மேல் நீதிமன்றம், பதில் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும் நீதிமன்றில் முற்படத் தவறியமை மற்றும் வழக்கு விசாரணைக்கு தேவையான ஆவணக் கோவைகளை நீதிமன்றில் சமர்ப்பிக்கத் தவறியதால் கடந்த 6 ஆம் திகதி பேர்ள் கே. வீரசிங்கவைக் கைது செய்வதற்கு கொழும்பு மூவரடங்கிய விஷேட மேல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது. வெளிநாட்டுப் பயணத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் முற்படமுடியாது என்பதை அவர் அறிவிக்கத் தவறியதன் மூலம் மன்றுக்கு களங்கம் ஏற்படுத்தினார் என்று தீர்மானித்து நேற்று மீண்டும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அலிரொஷான் உள்ளிட்ட 8 பிரதிவாதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பில் அரசியல் பழி வாங்கல்கள் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (த-22)

# கொரோனா அச்சத்தால் சிறைகளில் வன்முறை

## இத்தாலியில் ஆறு பேர் சாவு

ரோம், மார்ச் 11

கொரோனா வைரசினை கட்டுப்படுத்துவதற்காக இத்தாலி அறிவித்துள்ள நடைமுறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த நாட்டின் சிறைச்சாலைகளில் இடம்பெற்ற வன்முறைகள் காரணமாக ஆறு பேர் உயிரிழந்துள்ளனர்.

சிறைக் கைதிகளுக்கு வைரஸ் தொற்றுப் பரவுவதை தடுப்பதற்காக அவர்களை பார்வையிட வருவோருக்கு அதிகாரிகள் கடும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளமையைத் தொடர்ந்தே சிறைச்சாலைகளில் வன்முறைகள் ஆரம்பித்திருந்தன.

மொடெனா என்ற பகுதியில் உள்ள சிறைச்சாலையில் சிறைக்கைதிகள் மெத்தைகளுக்கு தீ மூட்டியதுடன், சிறைச்சாலையின் மருந்தகத்துக்குள் நுழைந்து அங்கு வைக்கப்பட்டிருந்த மருந்துகளை அளவுக்கதிகமாக பயன்படுத்தியதில் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர்.

மிலானில் உள்ள சான்விட்டரோ சிறைச்சாலையின் கூரை மீது ஏறி நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கைதிகள் தங்களுக்கு மன்னிப்பை வழங்குமாறு கோரியுள்ளனர். சிறைக்கைதி களைப் பார்ப்பதற்கு ஒருவருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படும் என்ற உத்தரவுக்கு எதிராக ரோமில் சிறைக்கைதிகளின் உறவினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை, இத்தாலியின் பல சிறைச்சாலைகளில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. சில சிறை களில் இருந்து கைதிகள் தப்பியுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொரோனா வைரஸ் சிறைக்கைதி களிற்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என தெரிவித்துள்ள மனித உரிமை ஆர்வலர்கள், நெரிசல் மிகுந்த சூழலில் தாங்கள் உள்ளமையால் தங்களிற்கு நோய் பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகம் எனச்சிறைக் கைதிகள் அச்சப்படுகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலைகளில் பொதுவாகவே பதற்றம் அதிகம், தாங்கள் தொற்றுநோய் வேகமாக பரவக்கூடிய இடத்தில் உள்ளமை கைதிகளுக்குத் தெரியும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஏ)

## அமைச்சருக்கு கொரோனா

பிரான்ஸ் நாட்டின் கலாசார அமைச்சர் ஃபிராங்க் ரைஸ்டர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று சி.என்.என். செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

46 வயதான ஃபிராங்க் ரைஸ்டருக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. திங்கட்கிழமை மாத்திரம் பிரான்ஸில் 286 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் பிரான்ஸில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையானது ஆயிரத்து 412 ஆக உயர்வடைந்துள்ளது. (ஏ)


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம் (பாலு)



தெல்லிப்பளை பன்னாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம் நேற்று (10.03.2020) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பு - தங்கப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும், வேலாயுதம், காலஞ்சென்றவர்களான முருகையா, செல்லத்துரை மற்றும் சண்முகசுந்தரம், கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வசந்தினி (நோர்வே), மணிவண்ணன் (லண்டன்), காலஞ்சென்ற சுகந்தினி மற்றும் குமுதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோகுலராஜ் (நோர்வே), சுபாஜினி (லண்டன்) மற்றும் சிவபாலன் ஆகியோரின் அன்பு மாமனும், நித்தியா, திவ்வியா, கௌசிகன், யதீசன் (நோர்வே), கிருஷாந், கிருஷிகா (லண்டன்), தரண்யா, விதுசன் (நோர்வே), கரண்யா (மாணவி யா/மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
பன்னாலை
தொ.இல:-077 628 6649

தோற்றம்
10
.
05
.
1949



மறைவு
10
.
03
.
2020

### முருகேசு சின்னராசா (சோதி)


யாழ். கரணவாய் சோளங்கணைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சின்னராசா (சோதி) நேற்று (10.03.2020) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் சின்னராசா குஞ்சுமணியின் அன்பு கணவரும் கார்த்திகா (ஆசிரியர் - பாண்டியன்குளம் ம.வி), காயத்திரி (ஆசிரியர் - கனகராஜன்குளம் ம.வி), கார்த்தீபன், கண்ணன் ஆகியோரின் அன்புத்தந்தையும் திருச்செல்வன் (விரிவுரையாளர் - யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), ஐங்கரன் (ஆசிரியர்- அக்குரண மத்தியகல்லூரி), ரம்யா (ஆசிரியர் - வவுனியா மத்திய மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆத்மிகாவின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2020) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 1.00 மணியளவில் பூதவுடல் சமரபாகு எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு - கார்த்தீபன் (மகன்) : 0779891693
ரவீந்திரன் (ரவி - பெறாமகன்) : 077 809 8991

தகவல்:
குடும்பத்தினர்

## இன்றைய நாள்

**மேடம்:** திறமைகள் பளிச்சிடும் நாள். மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியை தரும். தொழில் நலன் கருதி எடுத்த முயற்சி கைகூடும். நண்பர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள்.

**இடபம்:** பிள்ளைகளின் நலனில் பெரிதும் அக்கறை காட்டுவீர்கள். வருமானம் திருப்தி தரும். வாழ்க்கைத்தரம் உயர வழி செய்து கொள்வீர்கள். புது முயற்சி கைகூடும். பிள்ளைகள் படிப்பில் நல்ல முன்னேற்றம் காண்பர்.

**மிதுனம்:** பெற்றோர் வழியில் பிரியம் கூடும் நாள். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். பழைய வாகனத்தைப் பராமரிக்கும் எண்ணம் மேலோங்கும். புத்திசாலித்தனமான செயல்பாடுகளால் புகழ் பெறுவீர்கள்.

**கடகம்:** பற்றாக்குறை அகலும் நாள். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். வழக்குகள் தீரும். இளைய சகோதரத்தின் வழியில் உதவிகள் கிடைக்கும். தொழில் கூட்டாளி களால் நன்மை வந்து சேரும்.

**சிம்மம்:** அடுத்தவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள். ஆடம்பரப் பொருள்களை வாங்கிச் சேர்க்கும் எண்ணம் மேலோங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். பயணங்களால் மகிழ்ச்சி ஏற்படும்

**கன்னி:** கொடுக்கல்–வாங்கல்கள் ஒழுங்காகும் நாள். எப்படி நடக்குமோ என்று நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறும். உடல் நலனில் கவனம் தேவை. தொழில் ரகசியங் களை வெளியில் சொல்லாதிருப்பது நல்லது.

**துலாம்:** பக்குவமாகப் பேசிப் பாராட்டுக் களைப் பெறும் நாள். உற்றார், உறவினர்கள் சிலர் உதவி கேட்டு நச்சரிக்கலாம். உத்தியோக நலன் கருதி ஊர்மாற்றம் செய்யும் எண்ணம் மேலோங்கும். பயணம் பலன்தரும்.

**விருச்சிகம்:** யோகமான நாள். தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சியை தரும். சொத்துகளால் லாபம் கிடைக்கும். தொழில் முன்னேற்றம் கருதி முக்கியப் புள்ளிகளைச் சந்திப்பீர்கள். அயல்நாட்டு முயற்சியில் அனுகூலம் ஏற்படும்.

**தனுசு:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள். தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் மேலோங்கும். புண்ணிய காரியங் களில் நாட்டம் செல்லும். வீடுகட்டும் பணியில் கவனம் செலுத்துவீர்கள்.

**மகரம்:** உறவினர் பகை ஏற்படும் நாள். உத்தி யோகத்தில் பொறுப்புகளை யாரிடமும் ஒப்படைக்க வேண்டாம். ஆரோக்கியம் சீராகும். புண்ணிய காரியங்களுக்காகச் செலவிடுவீர்கள்.

**கும்பம்:** எதிரிகளின் பலம் கூடும் நாள். குடும்ப உறுப்பினர்களிடம் கோபமாகப் பேசிவிட்டுப் பிறகு வருத்தமடைவீர்கள். உத்தியோக மாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும். மருத்துவச் செலவு உண்டு. வருமானம் திருப்தி தரும்.

**மீனம்:** பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணையும் நாள். எதிரிகள் உதிரியாவர். வாழ்க்கைத்துணை வழியே மகிழ்ச்சி தரும் செய்தியொன்று வந்து சேரும். நீண்ட நாளைய எண்ணம் நிறைவேறும்.

## சர்வதேசத்திடம்...

இவ்வாறு தெரிவித்தார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் தற்போது ஜெனிவாவில் நடைபெற்றுவரும் நிலையில், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி தமிழர் தாயகத்தில் தொடர் கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், "இறுதிப் போரில் இராணுவத்திடம் சரணடைந்த அனைவருக்கும் மறுவாழ்வு வழங்கி விடுவித்து விட்டோம். எவரையும் நாம் காணாமல் ஆக்கவில்லை. அதேவேளை, சரணடைந்த எவரையும் நாம் சுட்டுக்கொல்லவும் இல்லை" என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா பொதுமக்கள் முன்னணியின் ஆதரவாளர்களான தமிழ் இளைஞர்கள் சிலரை அலரி மாளிகையில் சந்தித்தபோது தெரிவித்துள்ளார். அதேவேளை, "காணாமல் ஆக்கப்பட்டோர் என்று கூறப்படுபவர்கள் இறுதிப் போரில் உயிரிழந்திருக்கலாம் அல்லது வெளிநாடுகளில் இருக்கலாம். எனவே, காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தை மறந்துவிட்டு முன்னோக்கிச் செல்வதே சிறந்தது" என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்தில் ஊடகநிறுவனங்களின் பிரதானிகளுடன் நடத்திய கலந்துரையாடலின்போது கூறியுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் மேற்படி கருத்துக்கள் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் நேற்றிரவு 'உதயன்' வினவியது. இதன்போது அவர் தெரிவித்ததாவது:

"அரச படைகளால் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தமிழர்கள் மறந்துவிடவே முடியாது. இது மறக்கக்கூடிய விடயம் அல்ல. இறுதிப் போரின்போதும் அதற்கு முன்னரும் அதற்குப் பின்னரும் அரச படைகளால் காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை இலங்கை அரசு பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும். சர்வதேச சட்டத்தின் பிரகாரம் இந்த விடயத்திலிருந்து அரசு ஒருபோதும் தப்பவே முடியாது. இது தொடர்பில் சர்வதேச அரங்கில் இலங்கை அரசைப் பொறுப்புக்கூற வைத்தே தீருவோம். ஜனாதிபதியும் பிரதமரும் இந்த நாட்டின் தலைவர்கள். இருவரும் தமிழர்கள் விடயம் தொடர்பில் பொறுப்பற்ற விதத்தில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இது ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் நாட்டுக்கும் நல்லதல்ல" - என்றார். (த-22)

## கொரோனா...

தலை குறிப்பிட்ட திகதியில் நடத்துவதா இல்லையா என்பது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் சுகாதார அமைச்சுக்குமிடையில் பேச்சு நடந்துள்ளது.

தேர்தல் பணிகளில் ஈடுபடும் அலுவலர்களின் சுகாதார பாதுகாப்பு நலன்களைக் கருத்திற்கொண்டு முன்னேற்பாடாக நடவடிக்கைகளை எடுக்கவும் - தேர்தல் நடைபெறும் ஏப்ரல் மாதமளவில் இதன் தாக்கம் அதிகரிக்கலாமென்பதாலும் தேர்தல் ஆணைக்குழு இந்த விடயத்தை ஆராய்ந்துள்ளதாகத் தெரியவருகின்றது. இந்தவாரம் நடைபெறவுள்ள மற்றுமொரு சுற்றுப் பேச்சின்போது இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த)

## எச்சரிக்கை...

கேடுகளும் நிறுத்தப்பட வேண்டும். இளைஞர்கள் மீது பெற்றோர் கூடுதலான கவனம் செலுத்துதல் வேண்டும். இல்லையேல் எவராலும் காப்பாற்ற முடியாமல் போகும். வாய்ப் பேச்சுக்கு இங்கு இனி எதுவும் இல்லை. ஆனால் செயலில் செய்வதற்கு நிறைய உள்ளன. மக்கள் அனைவரும் நாம் யார்? எமது பண்பாடு கலாசாரம் எது? என்று உணர்ந்து எமது சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வர வேண்டும். தமிழர் தேசத்தின் கலை, பண்பாடு, கலாசாரம் மற்றும் சமூக வளர்ச்சி என்பனவற்றைக் கருத்தில் கொள்ளும் அரசு மட்டுமே எமக்கு வேண்டும்.

அவைமட்டுமன்றி, எமது இனத்தின் பண்பாடு கலாசாரத்தைப் பேணிக் காப்பது எமது கடமை, உரிமை. இனிவரும் காலங்களில் சகலவிதமான சீர்கேடுகள் மற்றும் குற்றங்களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்படும். பெண்கள் மீது கை வைத்தல், மாணவர்களோடு சேட்டை விடுதல் என்பனவற்றுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படும். தடைக் கற்கள் உள்ளன என்றால் தடை தாண்டும் கால்கள் உள்ளன. என்று துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'தமிழ் இளைஞர் படையணி மண்ணின் மைந்தர்கள்' என்று அந்தத் துண்டுப் பிரசுரத்துக்கு உரிமை கோரப்பட்டுள்ளது. (த-111)

## ஆசிரியையிடம்...

ளையர் பறித்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் செம்மணி வீதியில் நேற்று இடம்பெற்றது.

திருநெல்வேலி மணல்தறை ஒழுங்கையில் வசிக்கும் அந்த ஆசிரியர் நாவற்குழியிலுள்ள பாடசாலை ஒன்றில் கற்பிக்கின்றார். அவர் வீடுதிரும்பிக்கொண்டிருக்கும்போதே நகைகள் அபகரிக்கப்பட்டன என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார்சைக்கிளில் வந்தவர்களே அபகரித்துச் சென்றனர் என்றும் அவர்கள் பயணித்த மோட்டார்சைக்கிளின் இலக்கத் தகடுகள் மட்டையில் எழுதிக் கட்டப்பட்டிருந்தன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். சுமார் 10பவுண் நிறையுடைய தங்க நகைகளே கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. விசாரணை இடம்பெறுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குடாநாட்டில் கடந்த வாரத்திலிருந்து இவ்வாறான கொள்ளைகள் சில நாள்கள் இடைவெளியில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-105)

## மலையகப்...

பாளர்களாக நியமிக்கப்பட வேண்டும்." என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பேசும்போதே அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"கொழும்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியில் நாங்கள் போட்டியிடுகின்றோம். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான என்னுடன் சேர்ந்து இன்னொருவரும் போட்டியிடுவார். நிச்சயமாக என்னுடன் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த ஒருவரைத்தான் போட்டியிட வைப்பேன். இது சம்பிரதாயம்.

அதே மாதிரியான சந்தர்ப்பத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கிலே கடைப்பிடிக்கவில்லை என்பது பெரிய குறைபாடாக இருக்கின்றது.

இந்த முறை தயவுசெய்து வன்னி மாவட்டத்தில் உங்கள் பட்டியலில் தெற்கிலிருந்து சென்று குடியேறிய மலையக உரிமையைக் கொண்ட ஒருவரைத் தேடிப்பிடித்து அவரை உங்கள் வேட்பாளர் பட்டியலில் நிச்சயமாக நிறுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான நண்பர் எம்.ஏ.சுமந்திரனிடம் நான் சொன்னேன். அவரும் அதை ஏற்றுக்கொண்டிருக்கின்றார் என்று நான் நினைக்கின்றேன். பொறுத்திருந்து பார்ப்போம்.

வடக்கு, கிழக்கிலே குறிப்பாக வடக்கிலே வன்னிப் பிராந்தியத்தில் மலையகத் தமிழர்களை மாற்றானாக பூர்வீக மக்கள் கருதுகின்றார்களா என்ற சந்தேகம் மனங்களில் பெருமளவில் உருவாகியிருப்பதை நான் அப்பட்டமாகச் சொல்லி வைக்க விரும்புகின்றேன்" என்று கூறியுள்ளார். (த-22)

## எலும்புக்...

'சதொச'வளாக மனித எலும்புக்கூடு தொடர்பான வழக்கு விசாரணையில் முற்படமுடியாது என்று மன்னார் நீதிமன்றம் நேற்றுக் கட்டளையிட்டுள்ளது.

மன்னார் 'சதொச' மனித எலும்புக்கூடு தொடர்பான வழக்கு விசாரணை மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெற்றுவருகின்றது. அதில், காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் சார்பில் மன்றில் முன்னிலையாகிவரும் சட்டத்தரணிகள் மன்னார் 'சதொச' மனித புதைகுழி முன்னிலையாகக் கூடாது என்று கட்டளையிடுமாறு கோரப்பட்டது. 'சதொச' மனித எலும்புக்கூடு தொடர்பான வழக்கில் எலும்புக்கூடுகளை மீட்கும் பணியில் ஈடுபட்டு, அது பற்றிய ஆய்வில் ஈடுபட்டுள்ள சட்ட மருத்துவ அதிகாரி ராஜபக்ஷ இந்தக் கோரிக்கையை அரச சட்டத்தரணி ஊடாக மன்றில் முன்வைத்திருந்தார்.

அதற்கு காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் சார்பில் முன்னிலையாகிவரும் சட்டத்தரணிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

மனித எலும்புக்கூடுகளின் காலம் பற்றிய இறுதி அறிக்கை உட்பட சகல அறிக்கைகளையும் ஒட்டு மொத்தமாகவைத்து இறுதித் தீர்ப்பாகக் கொண்டுவர வேண்டும் என்று நீதிமன்றில் தீர்மானிக்கப்பட்டது.

இடைக்கால அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளது. அதைவிடச் சில அறிக்கைகள் வந்துள்ளன. இன்னும் சில அறிக்கைகளும் வரவேண்டியுள்ளன.

குறிப்பாக 'பிஸ்கட்' பைக்கற் பற்றிய அறிக்கை ஒன்று வந்துள்ளது. அது 1990 ஆம் ஆண்டு காணப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதைவிட மண் பரிசோதனை உள்ளிட்ட அறிக்கைகளும் வரவேண்டியுள்ளன.

மீட்கப்பட்ட காசு, தோடு ஆகியன தொடர்பான அறிக்கைகளும் வரவேண்டியுள்ளன.

எனவே ஒட்டுமொத்த அறிக்கையின்படிதான் நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும் என்ற கோரிக்கையை காணாமலாக்கப்பட்டவர்கள் சார்பில் மன்றில் முற்படும் சட்டத்தரணிகள் முன்னைய அமர்வுகளில் முன்வைத்திருந்தனர்.

சட்ட மருத்துவ அதிகாரியும் அரச சட்டத்தரணியுடன் இணைந்து தமது தரப்பு வாதத்தை முன்வைத்திருந்தனர்.

இதுபற்றிய கட்டளைக்காக வழக்கு நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போதே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சார்பாக மன்னார் நீதிமன்றில் முற்பட்டுவரும் சட்டத்தரணிகள் மன்னார் 'சதொச' மனித எலும்புக்கூடு தொடர்பான வழக்கு விசாரணையில் முற்படமுடியாது என்று மன்னார் நீதிமன்றம் நேற்றுக் கட்டளையிட்டுள்ளது.

இதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டோரின் விவகாரங்களைக் கையாள்வதற்கு என்று அமைக்கப்பட்ட அலுவலகம் சார்பிலான சட்டத்தரணிகள் இந்த வழக்கில் முற்படமுடியும் என்றும் நீதிமன்று கட்டளையில் தெரிவித்தது.

"மனித எலும்புக்கூடுகளின் அகழ்வுப் பணிகளின்போது மண் புடைகளுடன் எலும்புகள் மட்டுமன்றி பல்வேறு பொருள்களும் உள்ளன.

அனைத்துப் பொருள்களும் பொதி செய்யப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. அவற்றுடன் உள்ள பொருள்களும் மீட்கப்பட்ட மனித எலும்புகளின் வயதெல்லையும் ஒத்துப்போக முடியாத நிலை ஏற்படும்போதுதான் எங்களை வெளியேற்ற வேண்டும் என்கின்ற வாதத்தை முன்வைத்திருந்தோம்" என்று காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் சார்பில் மன்றில் முன்னிலையாகும் சட்டத்தரணிகளில் ஒருவரான நிறைஞ்சன் தெரிவித்தார். (த-56,60)

## ஐ.தே...

ராஜ் காரியவசம்,தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்திருந்தார்.

இதனையடுத்து ஐக்கிய மக்கள் சக்தியும் தொலைபேசி சின்னத்தில் போட்டியிடும் என்ற அறிவித்தலை தேர்தல் ஆணைக்குழுவுக்கு சஜித் அணி அறிவித்தது. இந்தநிலையில் இரு அணிகளையும் இணைக்கும் கடைசிகட்ட முயற்சியில் கருஜயசூரியவும், ராஜித சேனாரத்னவும் ஈடுபட்டனர்.

இதற்காக முன்னாள் சபாநாயகர் கருஜயசூரியவின் வீட்டில் நேற்றுமுன்தினம் இரவு விஷேட கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இரு அணிகளில் இருந்தும் முக்கிய உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

எனினும், யாப்பு உட்பட மேலும் சில விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. இதனால் பேச்சு தோல்வியில் முடிவடைந்தது. இதனை நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இரு அணிகளுமே உறுதிப்படுத்தின. அத்துடன், சரமாரியாக சொற்கணைகளையும் தொடுத்துக்கொண்டன.

**சஜித் அணி**

ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட சுஜீவ சேனசிங்க,

"ராஜித சேனாரத்னவின் ஏற்பாட்டில் கருஜயசூரிய தலைமையில் நேற்றிரவு (நேற்று முன்தினம்) சந்திப்பு நடைபெற்றது. யாப்பு உட்பட சட்டரீதியான ஏற்பாடுகளைச் சுட்டிக்காட்டி 'யானை' சின்னத்தில் போட்டியிடுவதையே ரணில் தரப்பு விரும்புகிறது. இறுதியில் 'தொலைபேசி' சின்னத்தில் போட்டியிடும் எமது முடிவு அறிவிக்கப்பட்டது.

மத்தியஸ்தராகவே கருஜயசூரிய பங்கேற்றார். பிரச்சினைகளை இரு அணிகளுமே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.

குறிப்பாக எமது கட்சியிலும் நான்கு ஐந்து கறுப்புப் புள்ளிகள் உள்ளன. அந்த புள்ளிகள் வேண்டுமானால் அகில விராஜுடன் இணைந்து 'யானை' சின்னத்தில் போட்டியிடட்டும். கறுப்புப் புள்ளிகளை வெளியேற்றுவதற்கு எமக்கு கிடைத்துள்ள வாய்ப்பு இதுவாகும்." - என்றார்.

**ரணில் தரப்பு**

இதேவேளை, சிறிகொத்தவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ரணில் ஆதரவு அணி உறுப்பினரான பாலித ரங்கே பண்டார,

" ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பின் சில சரத்துகளிலுள்ள பயங்கர நிலைகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

யாப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவற்றைச் சமர்ப்பிக்குமாறு கரு ஜயசூரிய இதன்போது கோரியுள்ளார். எனினும், சஜித் தரப்பு அவற்றை வழங்கவில்லை. இதுவே உண்மை.

எனவே, இது தொடர்பில் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு சஜித் பிரேமதாசவுக்கு அழைப்பு விடுக்கின்றேன். அப்போது பொய்யுரைப்பது யார், மெய் பேசுவது யாரென்பது தெரியவரும்." என்றார்.

அத்துடன், " யானையில் போட்டியி[illegible]டு வெற்றிபெற முடியாத சிலரே சஜி[illegible] முதுகில் ஏறி சவாரி செய்வதற்கு [illegible] சிக்கின்றனர். சஜித்தை தவறாகவும் [illegible] நடத்துகின்றனர். எனவே, கட்சி[illegible] அழிக்க வேண்டாம் என்று கே[illegible] கொள்கின்றேன்." என்று தயாக[illegible] இதன்போது கூறினார். (த-[illegible])



### வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியை வீழ்த்தி

# கிண்ணம் வென்றது சென்.பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 11

அருட்தந்தை பிரன்சிஸ் ஜோசப் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை வீழ்த்தி கிண்ணம் வென்றது சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆட்டம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி துடுப்பெடுத்தாடத் தீர்மனித்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணித்தலைவர் ஜவன் றொசாந்தன் 47 பந்துகளில் அரைச் சதம் கடந்தார். அணி நிர்ணயிக்கப்பட்ட 20பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து179 ஓட்டங்களைப்பெற்றது. பந்து வீச்சில் நர்ந்தனன் 3 இலக்குகளை சரித்தார்.

180 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான மதுஷன்,வலகீசன் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். தனது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய கௌசிகன் 54பந்துகளில் 56 ஓட்டங்களைப் பெற்றார். பின்கள வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களை மட்டுமே பெற்று 47 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஆட்டநாயகனாக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணித்தலைவர் ஜவன் றொசாந்தன் தெரிவு செய்யப்பட்டார். (23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச், 11

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மகிதரனின் ஆதரவுடன் நடைபெறும் மகிந்தன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலையை மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் எவரெட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

## மேசைப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 11

யாழ்ப்பாண மாவட்ட பிரதேசங்களுக்கு இடையிலான ஆண் பெண் இரு பாலருக்குமான மேசைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணி, பெண்கள் பிரிவில் நல்லூர் பிரதேச செயலக அணி முதலாம் இடத்தையும், ஆண்கள் பிரிவில் நல்லூர் பிரதேச செயலக அணி, பெண்கள் பிரிவில் உடுவில் பிரதேசசெயலக அணி இரண்டாம் இடத்தையும் பெற்றது. (23)



## மன்னார் பிரீமியர் லீக் எஸ்.எல்.எப். வெற்றி

மன்னார்,மார்ச் 11

மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட லீக்கினால் ஏற்பாடு செய்யப்பட்ட மன்னார் பிரீமியர் லீக் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 20ஆம் நாள் ஆட்டத்தில் எஸ்.எல்.எப். விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 7.45 மணிக்கு மின் ஒளியில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் அய்லன்ட் கால்பந்தாட்ட கழக அணியுடன், எஸ்.எல்.எப். கால்பந்தாட்ட கழக அணி மோதியது.

போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் எஸ்.எல்.எப். கால்பந்தாட்ட கழக அணி வீரர் ஜேம்ஸ் எடிசன் பிகிராடோ முதலாவது கோலைப் பதிவு செய்தார். ஆட்டத்தின் இறுதி வரையும் இரு அணி வீரர்களும் மேலதிக கோல்கள் எதனையும் போடாது போகவே ஆட்டத்தின் இறுதியில் எஸ்.எல்.எப்.கால்பந்தாட்ட கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (56)

## வல்வை மகளிர் மகுடம் சூடியது

கரணவாய், மார்ச் 11

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பெண்களுக்கான கடற்கரை கபடிப் போட்டியில் வல்வை மகளிர் அணி சம்பியனாகியது.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கடற்கரை கபடிப் போட்டியின் பெண்களுக்கான இறுதியாட்டம் நேற்று வல்வை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் இடம்பெற்றது.

இதில் வல்வை விளையாட்டுக்கழக மகளிர் அணியும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மகளிர் அணியும் மோதின. இதில் வல்வை விளையாட்டுக்கழக மகளிர் அணி 38:21 என்ற புள்ளிகளைப்பெற்று சம்பியனானது. (108-23)





# சென்மேரிஸ் வி.க. அடுத்த சுற்றுக்குள்

யாழ்ப்பாணம்,மார்ச் 11
வல்வை விளையாட்டுக் கழகத்தின் 60ஆம் ஆண்டு நிறைவையிட்டு மறைந்த வீரர்களின் ஞாபகார்த்தமாக வடமாகாண ரீதியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் இரணைமாதாநகர் சென்மேரிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றது.

வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இரணைமாதாநகர் சென்மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு இறுப்பிட்டி விளையாட்டுக் கழகஅணிமோதியது.

பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் இரணைமாதாநகர் சென்மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. ஆட்டநாயகனாக இரணைமாதாநகர் சென்மேரிஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் மயூரன் தெரிவுசெய்யப்பட்டார். (23)

## ராகுலின் பேட்டிங் தனிரகம்

*புகழ்ந்தார் லாரா*

இப்போதைக்கு தன்னைப் பொறுத்தவரை கே.எல்.ராகுல் பேட்டிங் தான் 'கிளாஸ்' ரகம், எனக்குப் பிடித்த பேட்ஸ்மேன் ராகுல்தான் என்று ராகுலை புகழ்ந்தார் பிரையன் லாரா.

இது குறித்து லாரா மேலும்தெரிவிக்கையில்; ராகுல் ஒரு தனி 'கிளாஸ் ரகம்', எனக்கு இப்போது பிடித்த பேட்ஸ்மேன் ராகுல்தான். அவர் பேட்டிங்கைப் பார்க்கவே மகிழ்ச்சியாக உள்ளது, கிரிக்கெட்டின் சிறந்த பொழுதுபோக்கு பேட்ஸ்மேன் அவர்.

விராட் கோலிதான் இப்போதைக்கு உலகின் சிறந்த பேட்ஸ்மேன் என்றாலும் தனக்கு கே.எல். ராகுல் பேட்டிங்தான் இப்போதைக்குபிடித்திருக்கிறது. ராகுல் ஏன் டெஸ்ட் அணியில் இல்லை என்பது எனக்கு ஆச்சரியமாகவே உள்ளது. அவரது உத்தி, அவர் பேட் செய்யும் விதம் நிச்சயமாக எந்த ஒரு அணியிலும் அவர் இருக்க வேண்டும் என்பதாகவே நான் பார்க்கிறேன்.

விராட் கோலிக்கு அடுத்த பெயராக ராகுல் இருக்க வேண்டும்- என்றார்.

## கிண்ணம் வென்றது ஐக்கிய வி.க. அணி

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கடற்கரை கபடி சுற்றுத் தொடரில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து துள்ளுமீன் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 30:25 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (23)



## கரப்பந்தில்
# வல்வை வி.க அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம்,மார்ச் 11
பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்ட சுற்றுத்தொடரில் வல்வை விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் வல்வை விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. (23)



## சாவற்காடு மகாத்மா அடுத்த சுற்றுக்கு தகுதி



யாழ்ப்பாணம்,மார்ச் 11
வல்வை விளையாட்டுக் கழகத்தின் 60ஆம் ஆண்டு நிறைவையிட்டு மறைந்த வீரர்களின் ஞாபகார்த்தமாக வடமாகாண ரீதியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் சாவற்காடு மகாத்மா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றது.

வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் சாவற்காடு மகாத்மா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மணற்காடு சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் சாவற்காடு மகாத்மா விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவாகியது. ஆட்டநாயகனாக சாவற்காடுமகாத்மா விளையாட்டுக்கழக அணி வீரர் மயூரன் தெரிவு செய்யப்பட்டார். (23)

## அலையோசை அணி கிண்ணம் வென்றது

முல்லைத்தீவு,மார்ச் 11
முல்லைத்தீவு மாவட்ட கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்டு வந்த அணிக்கு 11 பேர் பங்குபற்றும் விலகல் மற்றும் லீக் முறையிலான கால்பந்தாட்ட போட்டியில் முல்லைத்தீவு உடுப்புக்குளம் அலையோசை அணி கிண்ணம் வென்றது. இறுதிப் போட்டி நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்புக்குளம் அலையோசை விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் 1:0 என்ற கோல் கணக்கில் முல்லைத்தீவு



உடுப்புக்குளம் அலையோசை அணி வெற்றி பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தனர். (222)

# 10 ஆம் ஆண்டு நினைவுக் கோலங்கள்



## அமரர் சுப்பையா நடராஜன்

யாழ்.தென்மராட்சி சாவகச்சேரி வடக்கு, ஆசிரியர்
வீதியைப் பிறப்பிடமாகவும், மடத்தடி வீதியை
வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற
யாழ்.சாவகச்சேரி இந்துக்கல்லூரி, இந்து ஆரம்ப
பாடசாலைகளில் நீண்டகால ஆசானுமாகிய பண்பாளர்

**அமரர் சுப்பையா நடராஜன்**

அவர்களின் 10 ஆம் ஆண்டு நினைவுக்
கோலங்கள்

ஆண்டுகள் பத்து மின்னலென மறைந்தாலும்
எமை ஆளாக்கியவரின் பிரிவுத்துயர் அணையாது
என்றுமே... எம் மனதில்....
கண் காணாத் தெய்வமது கரத்து ஈயும்
காலத்தின் விதியீது கலங்கி என்ன?
புண்ணியர்கள் போனார்கள்
போகும் மட்டும் போனவரை அஞ்சலித்து
அமைதி கொள்வோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மலர்வு
21.06.1934

உதிர்வு
02.03.2010

"திருத்தணிகை"
மடத்தடி வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## சின்னப்பு கெங்காதரன்

(பிரபல லொறி, மில் உரிமையாளர் - சரசாலை)



எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
உங்கள் அரவணைப்பின்றித்
தவிக்கின்றோம் நாங்களிங்கே!
இல்லறக் கடமையெல்லாம்
இனிதே முடித்தீரென்று
தன்னடியில் அமைதிகொள்ள
இறைவன் அழைத்தானோ!
மீண்டுமொரு பிறப்பிருந்தால்
எங்களிடமே வந்திடுங்கள்!
ஈராண்டில் மட்டுமல்ல உயிருள்ள வரை
நாமென்றும் அஞ்சலிப்போம்
உங்கள் ஆத்மா சாந்திபெற
காவல் தெய்வமாய் எங்களோடு
என்றும் நீங்கள் இருப்பதாய் எண்ணி
உங்கள் நினைவுகளோடு
வாழ்ந்து கொண்டிருக்கும்.....



உங்கள் அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

தோற்றம்
01.12.1947

மறைவு
03.03.2018



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.